முனைவர் நா. கனிமொழி,
கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விழுப்புரம்.

# சங்க இலக்கியம் - அகம் (BTA 51)

## பாடக்குறிப்புகள்

டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

காஞ்சிபுரம் - தமிழ்த்துறை

மூன்றாம் ஆண்டு - ஐந்தாம் பருவம்

சங்க இலக்கியம் - அகம் - பாடக்குறிப்புகள்

அலகு 1 - நற்றிணை [51முதல் - 65பாடல் வரை].

சங்க இலக்கியம் :-

உலகமொழிகளில் மிகச்சிறந்து விளங்கக் கூடிய மிக தொன்மையான மொழி நம் தமிழ்மொழி ஆகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழுக்கு சங்கங்கள் பல அமைக்கப்பட்டன. இன்றளவும் இம்மொழி செம்மொழியாக வளர்ந்து வளம் வந்துகொண்டு இருக்கிறது.

தமிழில் கி.மு. 500 இல் இருந்து கி.பி. 200வரை உள்ள காலகட்டத்தில் தோன்றிய செவ்வியல் இலக்கியங்களே சங்க இலக்கியமாகும். அக்கால கட்டத்தில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. அப்போது வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலைகளைப் படம் பிடித்து காட்டுவதாய் இவ்விலக்கியங்கள் உள்ளன. மேலும் பண்டைத் தமிழரது காதல், வீரம், போர், ஆட்சி அமைப்பு, வணிகம் போன்ற செய்திகளும் எடுத்தியம்புகின்றன.

சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என தொகுக்கப்பட்டுள்ளது. இதில் அகம் சார்ந்த பாடல்கள் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளன.

## நற்றிணை - அலகு - 1 [51 முதல் 65 பாடல் வரை]

இதனை நற்றிணை நானூறு என்றும் அழைப்பர். நல் + திணை நற்றிணை எனப்படும். 'நல்ல ஒழுகலாறு' என்பது பொருள். 9 முதல் 12 அடி வரையிலான அகப் பொருட்பாடல்களின் தொகுப்பே நற்றிணை ஆகும். கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்களைக் கொண்டது.

நற்றிணையைத் தொகுத்தவர் யார் என தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார்.

நற்றிணை அக்கால மக்களின் வாழ்க்கை, முறையினை எடுத்துக்காட்டுகிறது.

### 51-பாடல் - மழையும் இடியும்

யாங்குச் செய்வாம் ...... மலை கிழவோற்கே?

பாடியவர் : பேராலவாயர்
திணை : குறிஞ்சி
துறை : தாய் வெறியாடல் நிகழ்த்திய போது தலைவி சொல்லியது.

விளக்கம் :

யான் என்ன செய்வேன் தோழி. நீண்ட தண்டினை உடைய மூங்கில்கள் நிரம்ப இருக்கும் மலைப் பிளவுகளில் தங்கி இருக்கும் பாம்புகள் நடுங்குமாறு இடி முழக்கம் கேட்கிறது. மேகம் கறுத்து மழையும் தொடங்கி நிற்காமல் பொழிகிறது. அத்தகைய பெருமழையைக் கண்டு தலைவன் வரும் வழியை நினைந்து எனது உடலில்

மாற்றம் ஏற்பட்டது. இதனை அறியாத எனது அன்னை, என் மேனியின் வேறுபாடு, அணங்கால் வந்ததோ? என நினைத்து வெறியாட்டு நிகழ்த்த நினைத்தாள்.

மின்னலை நிமிர்த்தி வைத்தது போல சாமியாடி வேலன் வந்து நிற்கிறான். இதனால் முருகுவிட்டு என் முடி அவிழ்க்கப்பட்டு வெறுப்படைந்தவள் போல் இருக்கிறேன்.

குளிர்ச்சி பொருந்திய காட்டுமல்லிகைக் கொடியை பரந்த அடிகளால் ஆண் யானை மிதித்து சிதைத்தது. கொல்லும் தன்மை கொண்ட துன்று சேர்ந்த பசிய அந்த யானை அறியாமையால் ஆசின் மரத்தை முறித்தது. அதன் மீது வேங்கைப் பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன. அம்மரத்தின் கீழே அது சென்று தங்கும். அத்தகைய மலை நாடனுக்கு என்ன சொல்வது?

உள்ளுறை :

குளவியை (காட்டுமல்லி) மிதித்த களிறு - தலைவி நலனுண்டு வாடவிட்ட தலைவனாகவும், அது சேற்றை நெற்றியால் பூசியது - ஊரார் தூற்றும் பழிச் சொல்லைத் தலைவன் மேற்கொண்டதாகவும், அறியாமையால் ஆசினிப் பலாவை முறித்தது திருமணம் செய்யாமல் கைவிட்டதாகவும், களிறு வேங்கை மரத்தடியில் தங்குவது - தலைவன் திணைப்புறமாக வந்திருப்பது எனவும் கொள்ள வேண்டும் -

52 பாடல் -

“ மாக்கொடி அதிரல் ...... இயைந்து செய் பொருளே!

பாடியவர் : பாலத்தனார்.

திணை : பாலை

துறை : தலைமகன் செலவு அழுங்கியது.

(தானே தன் நெஞ்சுக்கு கூறியது)

**விளக்கம் :**

நெஞ்சே! கரியகாட்டு மல்லிகைக் கொடியின் பூவும் பொன் தகடு போன்ற பாதிரிப் பூவும் கலந்து தொடுத்துக் கட்டிய மாலை சூடியவள் எம் தலைவி. அவளுடைய கூந்தலின் நறுமணத்தை நுகர்ந்த யாம் இவளுடைய தேமல் படர்ந்த கொங்கைகளைத் தழுவி அணைத்துக் கொண்டோம். இனிமையான சுவையைத் தரும் இவள் அணைப்பிலிருந்து விடுபடத் துணியமாட்டோம். மனமே! நீயோ பொருள் தேடும் முயற்சியில் மேம்பட நினைக்கிறாய். இவள் என்னைப் பிரிந்து வாட நேரிடும். ஆதலால் உனக்கு என்னிடத்தில் சிறிதும் அன்பே இல்லை. நீ நெடுங்காலம் வாழ்க. போர்வல்ல மழவர்களின் தலைவன் வள்ளல் ஓரி. அவனது வள்ளல் தன்மை போல யாமும் வழங்கி புகழ்பெறும் பொருள் கிடைத்தாலும் அதனை யாம் விரும்பவில்லை. என தன் நெஞ்சிற்கு தலைவன் கூறுகிறான்.

53 - பாடல்

பாடியவர் : நல்வேட்டனார்

திணை : குறிஞ்சி

துறை : தலைவன் வரைவு நீட்டித்தவழி தோழி சொல்லியது.

"யான் அஃது அஞ்சினென் ......

நீர்க்குவள் செல்க என்றோளே!."

விளக்கம்:

உன்னைத் தலைவன் கைவிட்டமையால் துன்பம் மிக உற்று உடலும் இளைத்தாய். நீ இங்ஙனம் இளைத்தமைக்கு உரிய காரணம் கூறுவதற்கு அஞ்சி அன்னையிடம் மறைத்தேன் யான். அதனால் அன்னை உன்னை, விண்ணுற உயர்ந்த பெரிய மலைப்பக்கத்தில் பெரிய இடியோசையுடன் மழை பொழிகிறது. அப்பெருமழை நள்ளிருளில் பெருகிக் கற்களை உருட்டிக் கொண்டு காட்டில் ஆறாக ஓடுகிறது. அவ்வாற்றில் மரங்களிலிருந்து வீழ்ந்த காய்ந்த இலைகளும் முகிழ்த்த பூங்கொத்துகளும் அடித்துக் கொண்டு போகின்றன. அவ்வாற்றின் இனிமை பொருந்திய நீர் இவள் நோயைத் தீர்க்கும் நல்ல மருந்தும் ஆகும். அக்குளிர்ந்த நீரை இவள் பருகவேண்டும். அக்காட்டில் உள்ள அரிய காட்சிகளைக் கண்ணாரக் காணவேண்டும். ஆற்று நீரில் வெறுப்பின்றி நீராடவும் வேண்டும். இங்ஙனமெல்லாம் இவள் செய்தால் உடல் நடுக்கம் தீரும். ஆதலால் 'நீங்கள் அங்கே செல்க' என என்னிடம் கூறினாள். அதனால் அன்னை நமது நிலையை முன்பே அறிந்திருக்கிறாளா? அல்லது நமது மேல் உள்ள அருளினால் கூறினாளா? அன்னையின் மனது யாருக்குத் தெரியும். என அப்போது வந்து நின்ற தலைவன் கேட்குமாறு கூறுகிறாள். விரைவில் வந்து மணம் புரிந்து தலைவியின் இத்துன்பத்தை போக்குமாறு குறிப்பால் உணர்த்துகிறாள்.

## 54. நாரை விடு தூது

பாடியவர் : சேந்தங் கண்ணனார்.

திணை : நெய்தல்

துறை : காமம் மிக்க கழிபடர் கிளவி. (தலைவனை நெடுநாள் காணாமல் காமநோய் தலைவியை வருத்த, தன் நிலையை குருகிடம் கூறுதல்)

" வளைநீர் மேய்ந்து ....... துறை கிழவோற்கே!

விளக்கம் :

கரிய கால்களையும் வெள்ளை சிறகுகளையும் உடைய நாரையே! நீ உன் சுற்றத்தோடு சென்று கடற்பரப்பில் உள்ள இரையைத் தின்று விட்டுத் தாவிப் பறந்து வருதலை விரும்புவாய். புலவைத் தின்னும் தூய சிறகுகளையுடைய உன் சுற்றத்தோடு சிறிது நேரம் இங்கே தங்கி என் சொற்களைக் கேட்பாயாக. இந்த புல்லிய மாலைப் பொழுது எனக்குப் பெரிய வருத்தத்தைத் தருகிறது. இதனை நீ அறிக. அறிந்தால் நீ என்னிடம் பெரிதும் அன்பு செலுத்துவாய். என்னிடம் வேறுபட்ட மனம் கொள்ளாதே. தழை உடுப்பவர் கொய்தற்குரிய தழை தழைத்த இளம் ஞாழல்மரம் கடல்பரப்பின் கரிய நீரைத் தடவி நிற்கும். கண்டல் மர [illegible]வை - கிளை உடையவர் உன் கடல்துறைத் தலைவன். அவரிடம் நீ சென்று என் குறையை அவர் உணருமாறு எடுத்துரைப்பாயாக.

சொற்பொருள் - கண்டல் - ஒருவகை மரம்

## 55 - பாடல்

பாடியவர் : பெருவழுதி

திணை : குறிஞ்சி

துறை : தலைவியின் மெலிவை ஆற்றுவிக்கும் தோழி தலைவனுக்குச் சொல்லியது.

"ஓங்குமலை நாட..... என்றிசின் யானே!"

**விளக்கம் :**

உயர்ந்த மலைக்குத் தலைவனே! நீ கூறும் உண்மைகள் அனைத்தும் பொய்யாகிப் போயின. மூங்கில் நெருங்கிய கற்பாறை வழி. அவ்வழியில் எதிர்ப்படும் ஆபத்தைப் பொருட்படுத்தாது இரவிடை வந்த நீ இவளது மார்பைத் தழுவக் கூடிக் களித்தாய். அதனால் இவளது மேனியில் நறுமணம் கமழ்ந்தது. நறுமணத்தை நுகர இவளது தோளில் அளவற்ற வண்டுகள் மொய்த்தன. வண்டுகளைக் கண்ட அன்னை கண்களால் கொல்பவள் போல் தலைவியைச் சினந்து, 'நீ இதற்கு முன்னும் வண்டுகளால் மொய்க்கப்பெற்ற தோளினைப் பெற்றிருந்தாயோ? என வினவினாள். தலைவி அதற்கு எதிர்மொழி சொல்ல முடியாமல் வருந்தி என் முகத்தை நோக்கினாள். அதனை அறிந்த நான் 'இவள் செய்கையை எவ்வாறு மறைப்பது என நினைத்து அன்னையைப் பார்த்தேன். அடுப்பில் இட்ட சந்தன விறகின் கொள்ளியை எடுத்துக்காட்டி, 'அன்னையே சந்தன விறகை அடுப்பில் இட்டபோது அதிலிருந்து வண்டுகள் வெளியேறி இவளது தோள்களில் மொய்த்தன' என பொய் கூறினேன்.

## 56- பாடல்

பாடியவர் : பெருவழுதி

திணை : பாலை

துறை : வரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி கூறியது.

" குறுநிலைக் குரவன் ........ நோய்தலை மணந்தே? "

பொருள்:

குட்டையாக நிற்கும் குராமரத்தின் அரும்புகள் முற்றி மலராக மலர்ந்துள்ளன. அம்மலர்களில் வண்டுகள் உண்டதால் மணம் எழுந்தது. அம்மணம் தென்றல் காற்றில் கலந்து வீசுகிறது. என் கண்கள் அவற்றை நோக்கி மகிழ்ந்தன. அத்தகைய நேரத்தில் ஒளிபொருந்திய என் வளையல் நெகிழ்வதற்கு காரணமான தலைவனை நினைத்து என் நெஞ்சு அவர்பால் சென்றது. அங்கு அவர் செய்யும் வேலைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் துணையாய் இருந்து வினை முற்றியவுடன் அவருடனே சேர்ந்து வருதலை விரும்பி வருந்தி அவருடனே உளதோ?

அல்லது அவரது அருள் கிடைக்காமையால் கலங்கி இங்கு வந்ததா? வந்த என் நெஞ்சு, என்னைப் பிரியும் முன் இருந்த அழகை இழந்தும் பொன்னிற பசலை படர்ந்தும் நான் இருப்பதைப் பார்த்து, இவள் நம் தலைவி இல்லை என்று என்னை விலக்கி வருந்தி, என்னைத் தேடி எங்காவது சென்றதோ? என வருந்துகிறாள்.

57 - பாடல்

பாடியவர் : பொதும்பில் கிழார்

திணை : குறிஞ்சி

துறை : செறிப்பு அறிவுறீஇ. தோழி வரைவு கடாயது.

(பகற்குறி வரும் தலைவனிடம் தலைக்கு நேரும் துன்பத்தைக் கூறி வரைவன் திருமணம் செய்ய தோழி கூறியது)

"தடங்கோட்டு ஆமான் ..... நலம் தொலைவே!

விளக்கம் :

வளைந்த கொம்பினையுடைய காட்டுப்பசு தன் கன்றோடு சிங்கம் முதலிய விலங்குகள் வாழும் மலையடுத்த துள்ள வேங்கை மரத்தின் கீழ் இருந்தது. பசுவும் கன்றும் துயில்வதைப் பஞ்சுபோன்ற தலையை உடைய மந்தி பார்த்தது. உடனே மந்தி தன் சுற்றத்தினரை ஒலி செய்யாமல் இருக்குமாறு கை அமர்த்தியது. மந்தி காட்டுப் பசுவின் அருகில் சென்று அதன் பால் சுரந்த மடியை அழுந்த பற்றி இழுத்து இனிய பாலை மரம் ஏறும் தொழிலை இதுவரை கற்காத தன் குட்டிக்குக் கைநிறையப் பிழிந்து தந்தது. இத்தகைய மலை நாட்டுக்குத் தலைவனே!

சிவந்த தாளையும் வளைந்த கதிரையும் உடையது சிறிய தினை. அத்தினை கொய்யும் நிலைக்கு முற்றிவிட்டது. ஆகவே தினையைக் காத்த தலைவி மனைக்குச் சென்று விடுவாள். சென்றபின் தினைப்புனம் வரமுடியாமையால் என் கருமையும் ஈரமும் கொண்ட கூந்தலையுடைய தலைவியின் நலம் அழியும். அங்ஙனம் அவள் அழகு கெடுவதை நினைத்து என் உள்ளம் புலம்புகிறது.

உள்ளுறை:

மந்தி வலங்கிற்கு அஞ்சாமல் பாளைப் பழிந்து தன் குட்டிகளைக் காப்பது போல நீயும் சுரநெறியில் பொருள் ஈட்டி இவளை மணந்து காக்க வேண்டும் என்பதாகும்.

## 58 - பாடல்

பாடியவர் : முதுகூற்றனார்

திணை : நெய்தல்

துறை : பகற்குறி வந்து நீங்கும் தலைவன் போக்கு நோக்கித் தோழி மாவின் மேல் வைத்துச் சொல்லியது.

"பெருமுது செல்வர் ...... நுழைந்த மாவே!"

விளக்கம்:

வீரை நகரை ஆளும் வேளிர்குல அரசன் வெளியன் தித்தன். பகைமன்னர் முரசைக் கவர்ந்து கொண்டு வந்து அதில் நெய்யை ஊற்றி மாலையில் தூங்கு விளக்கு ஏற்றுவான். பகைவர்கள் அவலம் பட்ட நெஞ்சோடு திரும்புவார்கள். அதுபோல இவள் அவல நெஞ்சோடு திரும்புகிறாள்.

குதிரையே, இவளை விட்டுவிட்டுச் செல்லும் காதலன் தேரை இழுத்துக்கொண்டு ஓடுகிறாய். உனக்கு அடி நன்றாக விழவேண்டும். ~~இவள்~~ வழிவழியாகப் பெருஞ்செல்வராக விளங்குபவரின் சிறுவர்கள் முகப்பகுதியில் கருவப்படம் அழுதிய சிறுபறையைத் தோளில் கோர்த்துக் கொண்டு பொன் காப்பு அணிந்து இருக்கும் கையால் கோலைக் கொண்டு அடித்து முழக்குவர்.

தலைவன் தேரை இழுத்துச் செல்லும் குதிரையே, அந்த குறுப்பறை வாங்கும் அழகுபோல நீ நன்றாக அழகு வாங்குவாயாக என குதிரைமேல் ஏற்றி உரைக்கிறாள்.

59- பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : முல்லை

துறை : வினை முற்றி மீள்பவன் பாகற்குச் சொல்லியது.

"உடும்பு கொலீஇ ........ உயவுமார் இனியே."

விளக்கம் :

கொன்று பழுத்த உடும்பு, மண்ணுக்குள்ளிருந்து மண்வெட்டியால் பெயர்த்து எடுத்த தவளை, உயர்ந்திருக்கின்ற புற்றில் வெட்டிச் சேகரித்த ஈசல், வளைதடி எறிந்து பழுத்த முயல் ஆகியவற்றை வேட்டுவன் இரவு நேரத்தில் மூட்டையாகக் கட்டிக் கொண்டு தன் இல்லத்தில் கொண்டு வந்து போட்டான். போட்ட மூட்டையை அறவே மறந்தான். மனையில் இருந்த கள்ளை அளவு கடந்து குடித்து மயங்கிச் செருக்குண்டு கிடந்தான். அன்பு கலந்து நம்மீது விருப்புற்று நெஞ்சில் நம்மையே நினைத்துக் கொண்டிருக்கும் தலைவியின் ஊர், வேடன் வாழும் காட்டு நாட்டிடத்தே உள்ளது.

முல்லை அரும்புகள் அவிழ்ந்து மலர்ந்துள்ள முல்லை நிலத்து ஊரில் அவள் இருந்தாலும் அவள் உள்ளம் பொறுமை நிறைந்தது. இன்று பொழுதுக்குள் நாம் செல்லாவிடில் அவள் பெரிதும் வருந்துவாள்.

உள்ளுறை : உடும்பு முதலியவற்றைக் கொணர்ந்த

வேட்டுவன் இல்லத்தே அவற்றைப் போட்டுவிட்டு கல் குடித்து கிடந்தான் என்றது - பொருளீட்டி வந்த தலைவன் பொருளைப் போட்டுவிட்டுத் தலைவி நலனுண்டு களித்துக் கிடந்தான் என்பதாகும்.

60 - பாடல்

பாடியவர் : தூங்கலோரியார்

திணை : மருதம்

துறை : தலைவன் சிறைப்புறமாக இருக்க தோழி உழவற்குச் சொல்லியது.

" மலைகண்ட ....... அணியுமார் அவையே! "

விளக்கம் :

மலையைக் கண்டது போல நிலைபெற்ற உயரம் உள்ள மிகுந்த நெல் இருக்கின்ற பல குதிர்களை உடைய எருமை கூட்டி உழும் உழவனே! நீ இரவிலே சரியாகத் தூங்காமல் குளிர் நிறைந்த வைகறைப் பொழுதிலே விழித்தெழுந்தாய். எழுந்தவுடன் கரிய கண்களை உடைய வரால் மீன் துணியங்களால் ஆன குழம்போடு அரிசியால் ஆக்கிய பெருஞ்சோற்றை மயங்கும் அளவுக்குக் கைகளால் அள்ளி உண்டாய். நீர் மிகுந்த வயல் சேற்றில் நாற்றுமுடிகளை நடுவதற்கு உன் உழத்தியரோடு சென்றாய். நீ உழுகின்ற வயல்களில் உள்ள வளமான கோரைகளையும் நெய்தல்களையும் களையெனக் களைந்துவிடாமல் பாதுகாப்பாயாக. அவை எம் மனையில் உள்ள கரிய கூந்தலை உடைய எம் தலைவிக்கு அழகிய வளையல்களாகவும், உடுத்தும் ஆடையாகவும் பயன்படும்.

[ தலைவி இற்செறிப்புக்கு ஆளாகியுள்ளாள் என மறைமுகமாக தலைவனுக்கு தோழி உணர்த்துகிறாள்.

## 61- பாடல்

பாடியவர் : சிறுமோலிகனார்

திணை : குறிஞ்சி

துறை : தலைவன் வரவுணர்ந்து தலைவி தோழிக்குச் சொல்லியது.

" கேளாய் எல்ல தோழி! ..... என்றிசின், யானே"

விளக்கம் :

ஏடீ, தோழி, நான் சொல்வதைக் கேள். நேற்று இரவு அவன் மீது கொண்ட ஆசைப்பெருக்கால் துன்புற்றுப் பெருமூச்சுவிட்டேன். அம்புபட்ட பெண்மானைப் போல வருந்தினேன். அப்போது அன்னை நான் உற்ற துன்பத்தை அறிந்தாள் போல என்னை நோக்கி 'என் இளைய மகளே, இன்னுமா நீ தூங்கவில்லையா' என வினவினாள். நான் சொல்வது வெளியே தெரியாதபடி மறைத்தேன். என் நெஞ்சிற்குள்ளேயே, 'பெருமழை பொழிந்த கற்பாறையில் சிச்சிலிப் பறவையின் வாய் போன்ற அரும்புகளையுடைய முல்லையும் பரல்களும் பள்ளங்களும் நிறைந்த காடு சூழ்ந்த நாடன் தலைவன். அவனையே எப்போதும் நினைத்துக் கொண்டு இருக்கும் எனக்கு கண்களில் உறக்கமும் வருமோ? என்று சொல்லிக் கொண்டேன். என்கிறாள் தலைவி.

## 62- பாடல்

பாடியவர் : இளங்கீரனார்

திணை : பாலை

துறை : தலைவன் பொருள் தேட நினைத்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்குவித்தது.

" வேர்பிணி . . . . . . . . உம்பரஃது எனவே."

<u>விளக்கம்</u> :

மூங்கில்களின் வேர்கள் ஒன்றோடொன்று பிணைப்புண்டு இருக்கின்றன. அவற்றில் காற்று மோதுவதால் உண்டாகிய ஓசை குழியில் கட்டப்பட்ட யானை வருந்திப் பெருமூச்சு இட்டது போல இருந்தது. கோடையில் மூங்கில்கள் நிறைந்த காட்டு நெறியில் மலையில் மறையப் போகும் முழுமதியை நோக்கி நின்றேன். மேலும் நடையைத் தொட முடியாமல் நின்று நான் தலைவியை நினைத்தேன். அல்லவா? முட்போன்ற பற்களையும் திலகமிட்ட மணம் கமழும் அழகிய நெற்றியையும் உடைய முழுமதி ஒன்று எமக்கு உண்டு. முழங்குகின்ற குரலுடைய கடுங்காற்று வீசுதலால் இலைகள் உதிர்த்து நிலையுடைய வெறும் கிளைகளாய் நிற்கின்ற மரங்களும் நிறைந்த பெரிய மலைக்கு அப்பால் உள்ள ஊரில் என் மதி உள்ளது. அதனை எண்ணி வருந்துகிறேன்.

[மரங்கள் எவ்வாறு இலைகள் இல்லாமல் இருக்கின்றனவோ அதுபோல நான் பொருளீட்டச் சென்றால் எம் தலைவியும் கலங்கி நிற்பாள் என தனது செலவை நிறுத்தினான்)

<u>63 - பாடல்</u>

பாடியவர் : உலோச்சனார்

திணை : நெய்தல்

துறை : தலைவன் சிறைப்புறத்தானாக தலைவி தோழிக்கு கூறியது.

"உரவுக் கடல் ....... அமைந்தநம் தொடர்பே."

விளக்கம்!

பரதவர் வலிமையுடைய கடலிலே சென்று பெரிய வலைகளுடன் தொல்லைப்பட்டு மிகுந்த மீன்களைப் பிடித்தனர். நல்லென ஒலிக்கும் சேரியை அடுத்த புதிய மணற்பரப்பில் பிடித்த மீன்களைக் காயப் போட்டனர். புலவு நாற்றமுடைய அவ்விடத்திலே புன்னை மரமொன்று நின்றது. அம்மரத்தில் மணமுள்ள மலர்கள் மலர்ந்து மணம் கமழ்ந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்ட இடத்தில் உள்ள பேரொலி நிறைந்த ஊரில் அறத்தன்மை அறவே இல்லை.

பறவைகள் அமர்தலால் மரங்களிலிருந்து பூக்கள் உதிர்கின்றன. அப்பூக்கள் நிறைந்த சேற்றுக் கழியில் தேரில் பூட்டிய குதிரைகள் ஓடுகின்றன. அக்குதிரைகள் மீது படிந்த சேற்றை அலைகளோடு வரும் கடல்நீர் கழுவுகிறது. இத்தகைய இடத்துக்குரிய சேர்ப்பனோடு நான் தொடர்பு கொண்டேன். அதனால் அறமற்ற அன்னை இற்செறித்துக் காவல் காத்தாள். அதனால் என் மேனியின் பசலை படர்ந்து இறப்புதான் நேரும் போலும்!

உள்ளுறை: கழிசேற்றில் ஓடும் குதிரைகளில் படிந்த சேறு கடல்நீரால் கழுவப்படும் என்றது - களவு ஒழுக்கம் மேற்கொண்ட தலைவி, தலைவனால் ஏற்பட்ட அலர் அவர்கள் மணம் புரிவதால் நீங்கும் என்றது.

இறைச்சி: மணற்பரப்பில் காயப் போட்ட மீனின் புலவு நாற்றத்தைப் புன்னை மலரின் மணம் போக்கும் என்றது - எம்மவர் பொருளாசையைத் தலைவன் தரும் நலன்கள் போக்கும் என்பதாகும்.

## 64 - பாடல்

பாடியவர் : உலோச்சனார்

திணை : குறிஞ்சி

துறை : தூது விட நினைத்த தோழிக்குத் தலைவி சொல்லியது.

" என்னர் ஆயினும் ........ வருத்தம் காணன்மார் எமரே!"

### விளக்கம் :

தோழி, நமது தலைவர் எவ்வளவு பெருமை உடையவராக இருந்தாலும் அவர் பால் தூது விடும் எண்ணத்தை கைவிடுக. அவர் நம்மைத் துறந்ததற்காக வருந்தாதே. நாம் இவ்வளவு துன்பத்திற்கு ஆளாகி வருந்தவும் நம்மைத் துறந்த அவர் தொடர்பு இனி நமக்கு என்ன நன்மைத் தரும்? மரப்பட்டையால் பின்னிய சடையை அணிபவர் மலைவாழ் குறவர். அவர்கள் அறியாமையால் சிறிய இலையை உடைய சந்தன மரத்தின் மேற்பட்டையை அறுத்தனர். அதனால் அம்மரம் வற்றத் தொடங்கிச் சோர்ந்து பட்டுப் போய்விட்டது. அது போல என் அறிவும் உள்ளமும் அவரிடத்துச் சென்றால் என் உடல் ஆற்றல் அற்றதாய் வற்றியாயிற்று. தோழியே, இனி அவர் இங்கு வந்தாலும் என் நோய்க்கு மருந்து ஆகமாட்டார். அதனால் அவர் இங்கு வாராமல் அங்கேயே இருக்கட்டும். இவண் காமமும் அதனால் ஆகிய பிணியும் நம்மை வருத்துகின்றன. நம் வருத்தத்தை நமது கேளிர் காணாது இருக்கட்டும். [ என தனக்குள்ளே மறைத்து வைக்கின்றாள்.

## 65 - பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : வரைவு கேட்ட தோழி தலைவிக்குச் சொல்லியது.

" அமுதம் உண்க ...... 'வருவம்' என்றோளே."

**விளக்கம் :**

ஆழம் உடையதும் உயர்ந்த கரைகளை உடையதுமான காட்டாற்றில் கலங்கும் பாசியை நீர் அலைத்தது. அதனால் அது எங்கும் பரவியது. காட்டாற்றிலிருந்து வெள்ளிய அருவி விழுகிறது. அருவி விழும் துறையில் யானை புலியுடன் சண்டை இடுகிறது. அதனால் புண்பட்ட அதன் நல்ல முகத்தை அன்பற்ற வேடர் அறிந்தனர். அவர்கள் வில்லிலிருந்து எய்த அம்பால் யானை அழுந்தி அச்சம் தரும் ஒலியில் பேரொலி எழுப்பி பிளிறியது. அவ்வொலி இடியால் உண்டாகும் முழக்கத்தைப் போலக் காடெங்கும் ஒலித்தது. அத்தகைய பெரிய மலைநாடன் நம் தலைவன். நம் வீட்டிற்கு அயலில் இருக்கும் பெண்ணொருத்தி 'தலைவன் வருவம்' என்று நன்னிமித்தமாகக் கூறினாள். அவள் எல்லாருக்கும் எளிதில் கிடைக்காத உயர் பொருளான அமிழ்தத்தைப் பெற்று இன்புறுவாளாக.

**உள்ளுறை:** புலியுடன் பொருது புண்பட்ட யானை காமநோய் மிகுதலால் வருத்தமுற்ற தலைவியாகவும் வேடர் யானையின் கொம்பெடுக்க அம்பு விடுவது அயலார் தலைவியைக் குறித்து அலரைப் பரப்புவதாகவும் அம்பு பட்ட யானை பூசலிடுவது அலரைப் பொறாமல் தலைவி வருந்துவதாகவும் கொள்ள வேண்டும்.

## வினாக்கள்

1. உள்ளுறை என்றால் என்ன?
2. இறைச்சி என்றால் என்ன?
3. வரிச்சி கேட்டல் என்றால் என்ன?
4. இற்செறிப்பு என்றால் என்ன?
5. வரைவு - பொருள் தருக?
6. வரைவிடை பரிவு - என்றால் என்ன?
7. 'வேலன் வெறியாட்டு' விளக்குக?
8. வினை முற்றி மீளும் தலைவன் பாகனை விரைந்து செல்லுமாறு கூறும் முல்லைத் திணைப் பாடலை விளக்குக?
9. பகற்குறி, இரவுக்குறி என்றால் என்ன?
10. அல்லகுறிப்படுதல் என்றால் என்ன?
11. களவுக் காலத்தில் குறியிடம் குறிப்பவள் யார்?
12. 'செலவு' பொருள் தருக?
13. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' விளக்குக?

அலகு - 2

# அலகு - இ

# குறுந்தொகை

(101 முதல் 125 பாடல் முடிய)

* முதலில் தொகுக்கப்பெற்றமை, ஏனையவற்றை விட மிகுதியாக உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டமை, 'நல்ல குறுந்தொகை' என அடைமொழியோடு அழைக்கப் பெற்றமை என பல சிறப்புகளைப் பெற்றது குறுந்தொகை. இது "குறுந்தொகை நானூறு" என்றும் இந்நூல் அழைக்கப் படுகிறது. 4 முதல் 8 அடி வரையறை கொண்டது. குறைந்த அடி எண்ணிக்கைப் பாடல்களைப் பெற்றமையால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

* பாரதம் பாடிய பெருந்தேவனார் முருகனை வாழ்த்திப் பாடிய பாடல், கடவுள் வாழ்த்தாக இடம் பெற்றுள்ளது. 400 பாடல்களைக் கொண்டது. தொகுத்தவர் உப்பூரி குடிகிழார் என்பர். தொகுப்பித்தவர் பூரிக்கோ. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 205. நிறைய வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. 101 வது பாடல் முதல் 125 வது பாடல் வரை பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

## 101 - பாடல் :-

பாடியவர் : பரூஉ மோவாய்ப் பதுமன்

திணை : குறிஞ்சி

துறை : 1. தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.
2. வலித்த நெஞ்சிற்குச் சொல்லி தன் செலவை நிறுத்துதல்.

### துறை விளக்கம்

தலைவியை மணந்து இன்புற்று வாழ்கின்றவன் தலைவன். அந்த இல்லற இன்பத்தை உயர்ந்து, தலைவியின் தோழியர் கேட்பக் கருதிய தலைவன், பொருளார்வம் மிக்க தன் நெஞ்சிற்கு, இப்படிச் சொல்லித், தான் பொருள் தேடப் போவதையே நிறுத்திவிடுகிறான்.

"விரித்திரைப் .......... வைகளொடு எமக்கே."

விளக்கம் :

தாமரைப் பூவைப் போன்ற மையுண்ட கண்களை உடையவள். பொன்னைப் போன்ற மேனி வண்ணத்தினைக் கொண்டவள். மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குல் தடத்தை உடையவள். இளையோளாகிய இவள். இவளோடு தோள் மாறுபடத் தழுவிப்பெறும் இன்பத்தை நாளும் நான் பெற்றேன். விரிந்த அலைகளையுடைய பெரிதான கடலால் சூழப்பெற்ற இந்த உலகமும், அரிதாகப் பெறுவதும் சிறப்பு உடயதுமான தேவர் உலகமும் ஆகிய இரண்டையுமே ஒருங்கே வைத்து ஆராய்ந்தாலும் இவளோடு பெறுகின்ற அந்த இன்பத்திற்கு அவை ஈடாகாது. ஆகவே பெறுவதற்கு அரியவள் தலைவி என்கிறான் தலைவன்.

102 - பாடல்

பாடியவர் : ஔவையார்

திணை : நெய்தல்

துறை : 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன்?' என்றது.

துறை விளக்கம் :

பிரிவு நீட்டித்தபோது, தலைவி மேலும் பிரிவைப் பொறுக்கமாட்டாள் எனக் கவலையுற்றனள் தோழி. அத்தோழிக்குத் தலைவி, தன்னுடைய துயரமிகுதியை இவ்வாறு கூறுகின்றாள்.

"உள்ளின் உள்ளம் வேமே .......

.......... யாம் மரீஇயோரே."

**விளக்கம் :-**

தோழி! நம் தலைவரை நினைத்தோமாயின், அவர் நம்மை நினையாமல் பிரிந்திருத்தலை எண்ணியதும், உள்ளம் வேகத் தொடங்கிவிடும். அதற்காக, அவரை நாம் நினையாமல் இருப்போம் என்றாலோ, அதுவும் நம்முடைய ஆற்றலின் அளவிற்கு உட்பட்டு அமைவது அன்று. காமநோயோ, நம்மை வருத்தி, வானத்தைச் சென்று தோய்வது போல வளர்ந்து பெருகுகின்றது. எம்மால் நினைக்கப்பட்ட தலைவர், எமக்கு இப்படி தீங்கு செய்கின்றார் ஆதலால் அவர் சான்றோர் அல்லர்.

**103- பாடல்**

பாடியவர் : வாயிலான் தேவன்

திணை : நெய்தல்

துறை : பருவம் கண்டு அழிந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

**துறை விளக்கம் :-**

பிரிந்த காலத்தே, தலைமகன் மீண்டு வருவதாகக் குறித்துச் சொல்லிய பருவத்தின் வரவைக் கண்ட தலைவி, குறித்த படி அவன் வராததனை நினைந்து நெஞ்சழிந்து, தோழியிடம் இப்படி கூறுகின்றாள்.

" **கடும்புனல் தொடுத்த .......... தோழி! - யானே.** "

தோழி! நடுங்குதற்குக் காரணமாகிய துன்பத்தைத் தருவது, பெரும் புனலால் ஏற்பட்ட சேற்றின் இடையில், முள்முருக்கின் மலரிதழ் போன்ற மென்மை வாய்ந்த சிறகினையும், சிவந்த அலகினையுமுடைய நாரையானது, தனக்குரிய இரையாகிய மீனைத் தேடியவாறு இருக்கும். அந்த நாரைக்கும் துன்பமுண்டாகு

- மாறு கார்காலம் மழைத்துளிகளைச் சிதறசெய்தும், வாடைக்காற்றை ஓங்கும் வீசவும் செய்கிறது. இப்படி கார்காலம் வந்தும் எம்தலைவர் வாராதவர் ஆயினார். அதனால் யானும் இனி உயிர்வாழேன் போலுடம்.

## 104 - பாடல்

பாடியவர் : காவன் முல்லைப் பூதனார்.

திணை : பாலை

துறை : 1. பிரிவான் கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது.
2. சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ? என்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.

**துறை விளக்கம் :-**

தலைவனின் பிரிவை பொறுக்கமாட்டாளாகிய தலைவி இப்படி கூறுகிறாள். பிரிவாடை நினைந்த தலைவனுக்கு, அவர் நமக்குச் செய்த தலையளியை நினைந்து இப்பெருந்துயரை மறந்து ஆடுவாயாக' என்கிறாள் தோழி. அவளுக்கு தலைவி கூறியது.

"அம்ம வாழி ........ நாளும் பல ஆ கவே!"

**விளக்கம் :-**

தோழி! ஒன்று சொல்வேன் கேட்பாயாக. அறுந்த முத்துவடத்தின் முத்துக்கள் சிதறுவதுபோல குளிர்ந்த பனித்துளிகள் உதிர்கின்றன. இத்தகைய வாடையர் காலத்து வேளையிலே பசுக்கள் தாளியறுத்துக் கொண்டு குளிர்ச்சியான கொடியைச் சென்று மேய்கின்றன. இவ்வாறு பனிவீசும் முன்பனிக் காலத்திலேயே நம் தலைவரும் நம்மை பிரிந்து சென்றார். அங்ஙனம் பிரிந்திருக்கின்ற நாட்களும் பலவாயின. நான் எவ்வாறு ஆற்றி இருப்பேன்?

## 105- பாடல்

பாடியவர் : நக்கீரர்

திணை : குறிஞ்சி

துறை : வரைவு நீட்டித்த விடத்துத், தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

### துறை விளக்கம் :-

களவில் கலந்தவன், 'வரைபொருளோடு வந்து வரைந்து கொள்வேன்' எனச் சொல்லித் தலைவியைப் பிரிந்தான். வருவதாகக் குறித்த நாளும் கடந்தது. தலைவியின் துயரமும் மிகுந்தது. அவள், தோழியிடம் இவ்வாறு உறுகின்றாள்.

"புனவன் துடவைப் ........... நினைப்பு ஆகின்றே."

### விளக்கம் :-

தோழி! தன் தோட்டத்திலே முதல் போராக விளைந்த, பொன் போலத் தோன்றும் சிறுதினை மணிகளைக் கொண்ட வளமான கதிரினைப் போராக அடுக்கிய குறவன், புதிதுண்ணும் தெய்வத்திற்குப் படையலாக இட்டிருந்தான். அதனை அறியாது எடுத்து உண்டது ஒரு மயில். பாறை தெய்வமேற்று ஆடுவது போல ஆடியது. அது போல இவளும் வெம்மையுற்று நடுங்கி துயர் கொண்டு ஆடுகின்றாள். இத்தன்மையுடைய தெய்வங்கள் வாழும் நாட்டினன் தலைவன். அவனது உறவை நீரால் மிகுந்த கண்களோடு நினைத்துக் கொண்டு உள்ளேன்.

[கடவுளுக்குப் படைத்த உணவை அறியாது மயில் உண்டது போல தானும் உயர்குடியில் பிறந்த தலைமகனை அடைதல் இயலாது என அஞ்சாமல், பிறருக்கும் சொல்லாமல் மனத்திலே அவன் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருக்கின் -றாள்.)

## 106 - பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : தலைமகன் தூது கண்டு, கிழத்தி தோழிக்கு உரியது.

### துறை விளக்கம் :-

பரத்தை உறவை விரும்பித் தலைவியைப் பிரிந்து சென்றான் தலைவன். மீண்டும் தலைவியை விரும்புகின்றான். அதனால் தலைவன், 'அவளிடத்து தனக்குள்ள பேரன்பைச் சொல்லி, அவளது இசைவைப் பெற்றுவரத், தூதுவனையும் அனுப்புகின்றான். தூதுவனின் சொற்களைக் கேட்ட தலைவி, தோழியிடம் இவ்வாறு உரைக்கின்றாள்.

"புல்வீழ் இற்றிக் . . . . . . என வருகம் தூதே."

### விளக்கம் :-

தோழி! கற்களிற் பற்றிப் படர்ந்திருக்கின்ற புல்லிய இற்றி மரத்தினது வெள்ளி போன்ற வேரானது, மலையினின்றும் வீழ்கின்ற அருவியைப் போலத் தோன்றும் நாட்டைச் சார்ந்தவன் நம் தலைவன். தீதற்ற அவனுடைய நெஞ்சத்தில் இருந்து எழுந்த அன்பானது, தூதுவனின் சொற்களாக இப்போது நம்மிடமே வந்திருக்கின்றது, அதனால் நாமும், நெய் பெய்யப் பெற்ற தீயினைப் போல அவனை எதிரேற்றுக் கொள்வோம். அவர் நம்மை மணந்த காலத்துப் போன்ற அதே அன்பினையே நாம் இப்போதும் வைத்துள்ளோம். இதனைச் சொல்ல இத்தூதுவனை அவனிபால் அனுப்ப வைப்போமாக! என தன் உள்ள விருப்பத்தினை வெளிப்படுத்துகின்றாள்.

## 107 - பாடல்

பாடியவர் : மதுரைக் கண்ணனார்

திணை : மருதம்

துறை : பொருள் முற்றி வந்த தலைமகனை உடைய கிழத்தி, காமம் மிக்க கழிபடர் கிளவியால் கூறியது.

**துறை விளக்கம் :-**

பொருள் தேடி வரப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வந்தான். அவனோடு கூடிக் களித்திருந்தாள் தலைவி. பொழுது புலர்ந்ததை அறிவிக்கும் சேவல் கூவலைக் கேட்டதும் அதன்பால் சினந்து அதற்குச் சாபமும் தருகிறாள்.

"குவி இணர்த் தோன்றி ...... இன்துயில் எடுப்புதி யோயே!"

**விளக்கம் :-**

ஆழமான நீர்ப்பெருக்கால் உண்டாகும் புதுவருவாயினை உடைய ஊரன் இவன். இவனோடு தங்கியிருந்த இன்பத்தைத் தருகின்ற இனிதான உறக்கத்தில் இருந்து என்னை எழுப்பிவிட்டாயே, குவிந்த கொத்துக்களையுடைய தோன்றியினது அழகான பூப் போன்ற செக்கச் சிவந்த நெற்றியை உடைய கூட்டங்கொண்ட சேவலே! நல்ல இருளையுடைய இரவின் நடுயாமத்தே, வீட்டெலிகளை உணவுக்காகத் தேடிப்பார்க்கும் காட்டுப் பூனையின் குட்டிக்குச் சில நாள் இட்டுவைத்து உண்பதற்குரிய இரையாகி, நீயும் மிகுதியான துன்பத்தை அடைவாயாக!

## 108 - பாடல்

பாடியவர் : வாயிலான் தேவன்

திணை : முல்லை

துறை : பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

துறைவிளக்கம் :-

கார்ப்பருவத்தின் வரவைக் கண்ட தலைவி, அதன் வரவிற்குள் வருவதாகச் சொல்லிப் பிரிந்த தலைவனின் வருகையைக் காணாது மிகவும் வருந்தி நலிந்தனள். அவளை அப்போது தேற்றிய தோழிக்குத் தன்னிலைமையை இப்படிக் கூறி விளக்கு - கின்றாள்.

"மழைவிளை யாடும் . . . . . . தோழி! - யானே."

விளக்கம் :-

தோழி! மேகங்கள் தவழ்ந்து விளையாடுவதற்குரிய இடமாகிய குன்றத்தைச் சேர்ந்தது நம் சிற்றூர். இங்கிருந்து அகன்று, மேயும் பொருட்டுப் புறத்தே சென்றிருந்த பால் பசுக்களும், தம் கன்று - களிடத்தே நினைவு செல்லவே, தத்தம் இல்லம் நாடிச் செல்லுகின் - றன. முல்லை நிலத்திலேயுள்ள, பசுமையான இலைகளையுடைய முல்லையானது குற்றமில்லாத சிறந்த மலர்களும் என்னால் பறிக்கப்படாமல் சிரித்து வாடிக்கிடக்கின்றன. இனியும் நான் இவற்றைப் பார்த்துக் கொண்டு உயிர் வாழமாட்டேன்.

109- பாடல்

பாடியவர் : நம்பி குட்டுவன்

திணை : நெய்தல்

துறை : தலைவன் சிறைப்புறமாக, தலைவி வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்ற, தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது.

துறை விளக்கம் :-

களவுக் கூட்டத்தின் கண் இடையிடைப் பிரிவால் தலைவி வருந்துங்கொள்வதை அறிந்தாள் தோழி.

அவனை மணந்து பிரியாத இன்ப வாழ்விற்குத் தலைவன் விரைந்து முனைதலையும் விரும்புகின்றாள். அதனால், அவன் ஒருபுறமாக ஒதுங்கியிருத்தலைக் கண்டவள், தலைவிக்குக் கூறுவதுபோல, அவனும் கேட்டுத் தெளிவடையுமாறு இப்படிக் கூறுகின்றாள்.

"முட்கால் இறவின் ............ நல்நுதல் கவினே!"

விளக்கம் :-

தோழி! வளைவான கால்களையுடைய இறால்மீன், வளைந்த முதுகுப் புறத்தையுடைய பெருங்கூட்டத்தைக், கடலிலே தாவும் அலையானது கொண்டு தருகின்ற துறைக்குரியவன் நம் தலைவன். அவன் திருமணத்தைக் குறியிடத்தில் வந்திருக்கின்ற இந்த பொழுதில் அவருடைய நெற்றியின் அழகு குறைந்து காணப்படுகிறது. இரங்குதற்கு உரியது. என கூறுகிறாள். (மறைமுகமாக நின்னைப் பிரிந்ததனால் அவள் அழகு கெடுகிறது. அதனால் அவள் அழகு கெடாமல் இருக்க உன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கூறுகிறாள்)

110 - பாடல்

பாடியவர் : கிள்ளிமங்கலங் கிழார்.

திணை : முல்லை

துறை : பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. தலைமகளைக் கொடுமை கூறித் தலைமகனைத் தோழி வற்புறுத்தியதும் ஆம்.

துறை விளக்கம்:-

இந்த வருத்தம் பருவம் வந்தும் வாராது மறந்து இருக்கும் தலைவன் இனி வந்தும் பயனில்லை. யான் அதற்குள் இறந்தே போவேன் என்கிறாள் தலைவி. இத்தனை கொடுமை

செய்தவர் அன்பில்லாதவரே ஆதலின் இனி அவர் வரினும் நமக்குப் பயனில்லை என்கிறாள் தோழி. அதனைக் கேட்கும் தலைவி இல்லை அவருடைய அன்புடை நெஞ்சை நினைத்து ஆற்றி இருப்பேன் என்கிறாள் தலைவி)

"வாரார் ஆயினும் ..... என்னா தோரே?"

**விளக்கம் :-**

தோழி! நீரிடத்தேயுள்ள நீலத்தினது பசுமையான அரும்புகளை மலரச் செய்தது. புதரிடத்தேயுள்ள மயிற்பீலியின் அழகிய கண்களைப் போன்ற கருவிளையின் மலர்களையும் அசைத்தது. நுண்ணிய முள்ளையுடைய ஈங்கைச் செடியின் செவ்வரும்புகளையும் மலரச் செய்தது. இதுபோல பல வண்ணமலர்களை உதிர்த்தது இந்த வாடைக்காற்று. துன்பம் தரும் இந்த வாடைக் காற்று நம் தலைவரை எந்நிலையில் வைத்துள்ளதோ? என நினைத்து கவலையுறாதவரானார் நம் தலைவர். இனியும் வரவில்லை எனில் இனி அவர் நமக்கு யார்? அதற்குள் நாம் இறந்துபடுவோமே. என துன்பம் கொண்டு பேசுகிறாள்.

**111 - பாடல்**

பாடியவர் : தீன் மதிநாகன்

திணை : குறிஞ்சி

துறை : வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுக்கக் கருதிய தாயது நினைவு தலைமகட்குச் சொல்லுவாளாய் தலைவன் சிறைப்புறமாகத் தோழி உரைத்தது.

**துறை விளக்கம் :-**

தலைமகளை வரைந்து வந்து மணந்து கொள்வதாகக் கூறிச் சென்ற தலைமகன், குறித்தபடி வாராததால், தலைமகளின் நோவு மிகுதியாகிறது. அதனைக் கண்ட தாய், தெய்வக்குற்றமென வெறியாட்டத்திற்கு ஏற்பாடு செய்கின்றாள். தலைவன், ஒருசார்

மறைந்திருப்பதறிந்த தோழி, அவனுக்குத் தம் விருப்பத்தை அறிவிக்கும் பொருட்டாக, இப்பகுதி தலைவனிடம் கூறுவது போலக் கூறுகின்றாள்.

"மென்தோள் . . . . . . . . . காணிய சென்றே!"

விளக்கம் தோழி! துன்பமானது நினது மென்மை வாய்ந்த தோள் தனைத் தாக்கி நெகிழுமாறு செய்தது. வெறியாடும் வேலனும் அதனை, 'வெற்றியை உடைய முருகவேளால் வந்தது' என்று சொல்லுவான். அன்னையும், அதுவே உண்மை என்று உணர்வாளாயினள். கரிய கருமையான பெண் யானையது கை மறைத்தார் போல கரிய நிறத்தையான வரிய குண்டுக் கற்கள் விளங்கும் மலை நாட்டையுடைய நம் தலைவனும் நம் இல்லவரது, பெரிதும் நகைப்பிற்கிடமான தன்மையைக் காணும் பொருட்டாகச், சிறிது நேரமேனும், நம்மிடத்திற்கு வரைய வருவானாக.

112 - பாடல்

பாடியவர் : ஆலத்தூர் கிழார்

திணை : குறிஞ்சி

துறை : வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம் :-

தலைவன், விரைந்து வருவதாகச் சொன்ன காலம் கடந்து போனதால், தலைமகளின் துயரம் மிகுதியாகின்றது. தன் நிலையைத் தோழிக்கு இப்பகுதி கூறுகின்றாள்.

"கௌவை அஞ்சின் . . . . . . கண்படின் தோழி."

விளக்கம் :-

தோழி! ஊர்ப்பழிக்கு அஞ்சினாலோ, நம்பாலுள்ள

காமமும் மெலிவடைந்து போம். மாறாது இழிவான பேச்சுக்கள் இல்லாது போகும்படியாகக் காமத்தைவிட்டு விட்டோமானால், எஞ்சியிருப்பது நமக்குரிய நாணம் மட்டுமே ஆகும். அவர் நுகர்ந்த என் பெண்மை நலம், பெருந்துளிரானது வளைக்கவும் முரிந்து, நிலத்திற்படாத நாருடைய ஒருத்த கிளையைப் போன்றதாயிருக்கின்றது. இதனை நீயும் காண்பாயாக.

## 113 - பாடல்

பாடியவர் : மாதீர்த்தன்

திணை : மருதம்

துறை : பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினால் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது.

### துறை விளக்கம் :-

தலைமகன், பகற்போதிலே குறிப்பிட்ட இடத்திற்கு வந்து, தலைவியோடு கூடியான்புறும் வழக்கத்தினனாக இருக்கின்றான். அவனுக்குத் தாம் சந்திக்கும் இடத்தை மாற்றுமாறு கூறுவாள், தோழி இப்படிச் சொல்லுகின்றாள்.

**"ஊர்க்கும் அணித்தே, .......... பெருங் பேதையே."**

### விளக்கம் :-

தோழி! ஊருக்கு அண்மையிலேயே பொய்கை உள்ளது. சிறிதான காட்டாறும் பொய்கைக்குத் தொலைவிலுத்து அன்று. இரைதேடும் வெண்குருகை அல்லாது, வேறு எதுவாயும் அடைதலைக் கைவிட்டதாயிருப்பது, அதனையடுத்திருக்கும் பொழில். யாங்கள், எங்கள் கூந்தலுக்கு எருமண்ணைக் கொண்டுவருவோமாய், அப்பொழிலிடத்திற்குச் செல்வோம். பெரிதான பேதைமையை உடையவளான தலைவியும் அவ்விடத்திற்கு வருவாள்.

## 114 - பாடல்

பாடியவர் : பொன்னாகன்

திணை : நெய்தல்

துறை : இடத்துய்த்து நீங்கும் தோழி, தலைமகற்குச் சொல்லியது.

### துறை விளக்கம் :-

தலைவனின் வேண்டுகோளுக்கு இரங்கித் தலைவியைக் குறிப்பிட்ட ஓரிடத்திலே கொண்டு விட்டபின் தோழி, அவனிடம் வந்து அந்தச் செய்தியை உணர்த்துகின்றாள்.

'நெய்தல் பரப்பில் ..... என் மகள் நுதலே.'

### விளக்கம் :-

செவ்வைதமாக இயற்றப்பட்ட தேரினையுடைய தலைவனே! நெய்தல் நிலத்தின் கண்ணே என் பஞ்சாய்ப் பாவையாளைக் கிடத்தி விட்டு, நீ இருக்கும் இடத்திற்கு, யானும் வந்துள்ளேன். அயல் மீனை அருந்திய வயிற்றை உடையவான நாரைகள், பாவையாகிய என் மகள் நெற்றியை, இரவு வந்ததும் மதித்து வருதலையும் செய்யும். அதனால், யாம் போகின்றோம்! தலைவியையும் அவ்விடத்துக்குச் செல்லுமாறு நீயே ஏவுவாயாக!

## 115 - பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : உடன் போக்கு ஒருப்படுத்து மீளும் தோழி, தலைமகற்குச் சொல்லியது.

### துறை விளக்கம் :-

தலைவனோடு உடன்போக்கிற்குச் செல்லும் படியாகத் தலைவியைக் கொண்டு விட்ட தோழி, அவனை என்றும்

அன்புடன் காத்துப் பேணுமாறு தலைவனிடம் இப்படிச் சொல்லுகின்றாள்.

"பெருநன்று ஆற்றின் ...... நின் அலது இலளே."

விளக்கம் :-

அசைகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்திருக்கும் குளிர்ச்சியான நறிய மலைச்சாரலிடத்தே மெல்லிய நடையை உடைய மரையா வானது, இலைகளைக் கவர்ந்துண்டு அந்தத் தளர்வாலே துயிலுதலையும் மேற்கொள்ளும் அத்தகைய நன்மை பொருந்திய மலைநாட்டவனே! பெரிதான நன்மை செய்தால், செய்த அவரைப் போற்றாதாரும் உள்ளனரோ? இவள், சிறிதான நன்மையினை உடையவளாகும் அந்த முதுமைக் காலத்திலும் இவள்பால் விருப்பஞ் சிறந்தனையாகி, இவளுடைய புலவி நீங்கும் வண்ணம் அருள் செய்து, இவளைப் பாதுகாப்பாயாக! இனி, நின்னையன்றி, வேறு பற்றுக்கோடு இல்லாதவள் இவள்.

116 - பாடல்

பாடியவர் : இளங்கீரன்
திணை : குறிஞ்சி
துறை : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

துறைவிளக்கம் :-

தலைவியோடு முதற்கூட்டம் பெற்ற மன்னர், அவளைப் பிரிந்து செல்லும் தலைமகன், தான் பெற்ற இன்ப மிகுதியைத் தன் நெஞ்சிற்குச் சொல்லி இப்படி வியக்கின்றான்.

"யான் நயந்து ........ நறுந்தண்ணியளே."

**விளக்கம் :-**

நெஞ்சமே! என்னால் விரும்பப்பெற்று, என்னோடு வந்து தங்குபவள் தலைவி. அவளுடைய கூந்தல், வண்டுகள் தாவுமாறு விளங்குவது. வளமை கெழுமிய சோழர்களது உறையூரிடத்தேயுள்ள, காவிரிப் பெருந்துறையாணிடத்து விளங்கும் நுண்ணிய மணலானது கருமணற்பட்டு ஒழுகிக் கிடப்பது போன்று, நல்ல நெறிப்பையும் அக்கூந்தல் உடையது. நறுமையும் தண்மையும் அது கொண்டது! இதனை அறிவாயாக!

## 117 - பாடல்

பாடியவர் : குன்றியனார்

திணை : நெய்தல்

துறை : வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

**துறை விளக்கம் :-**

தலைமகன், மணம் பேசி வருவதாகக் குறித்த காலம் நீடித்த போது தோழி, வரைந்து மணத்தலின் அவசியத்தை வற்புறுத்துவளாக இப்படி உரைக்கின்றனள்.

“மாரி ஆம்பல் ........ வளைநேர் கைவளையே.”

**விளக்கம் :-**

தோழி! மாரிக்காலத்து மலர்ந்திருக்கின்ற ஆம்பல் மலரைப் போன்று விளங்கும், கொக்கினது பார்வையைக் கண்டு அஞ்சிய துன்பத்தை உடையதாயாற்று, ஈரநண்டு ஒன்று. அதனால், தாழை வேர்களினிடையேயுள்ள தன் அளைக்குள்ளும் செல்லலாயிற்று. இடையரால் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துச் செல்லும் எருது போன்ற விரைவோடும் அது சென்றது. அத்தன்மையானை உடைத்தான கடற்றுறைக்குரியவன் தலைவன். அவன், நின்னை மணத்தற் பொருட்டாக வரைந்து வாராதவனாக,

அவனூரிலேயே இருப்பானாயினும் இருக்க. அதனால் மெலிவுற்று நின் கைவளைகள் சோரப், பிறர் அலர், உரைத்தலும் நேருமே என்பாயானால் வற்பாரது கையகத்தே சிறியவான வளைகளும் இவ்விடத்தே உளவென்று கருதித் தேறியிருப்பாயாக!

## 118- பாடல்

பாடியவர் : நன்னாகையார்.

திணை : நெய்தல்

துறை : வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது.

### துறை விளக்கம் :-

தலைமகன் தலைமகளை வரைந்து வருவதற்கான காலம் நீட்டித்ததனால் வருந்தியிருந்த தலைவி, மழைக்காலமும் வந்தடையக், காமம் மிகுந்தவளாகத் தோழியிடம் இப்படிக் கூறினாள்.

"புள்ளும் மாவும் ........ நம் காதலோரே."

### விளக்கம் :-

தோழி! பறவைகளும் விலங்குகளும் தனிமைத் துயரொடு தங்கும்படியாக, நள்ளென்னும் ஓசைபட வந்தது. அன்பில்லாத இந்த மாலைப் பொழுது. இதன்கண், பலரும் வந்து புகும் வாயிலை அடைப்பதற்கு எண்ணியவராகக் கூவுகின்றவர் 'உள்ளே வருபவர் எவரும் உள்ளீரோ?' எனக் கூறினர். அப்படிக் கூறியும் நம் காதலர் நம் இல்லிற்குள் வாரார் ஆயினரே!

## 119- பாடல்

பாடியவர் : சத்திநாதனார்

திணை : குறிஞ்சி

துறை : இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கலந்து வரும் தலைமகனின், மேனியில் புது மாற்றங்களைப் பாங்கன் காண்கிறான். எதனால் வந்தது எனக் கேட்கின்றான். அவனுக்குத் தலைவன் இப்படி விடை கூறுகின்றான்.

" சிறுவெள் அரவின் . . . . . எம் அணங்கி யோளே."

விளக்கம்:-

பாங்கனே! சிறியதும் வெள்ளியதுமான பாம்பானது அழகிய வரிகளையுடைய குட்டியும், காட்டு யானையை வருத்தமுறச் செய்யும். அதனைப் போலவே இளையோளும், மூங்கிலின் முனையைப் போன்ற ஒளிரிய பற்களை உடையவளும், வளைகள் விளங்கும் கைகளை உடையவளுமான ஒருத்தியும், எம்மைத் தாக்கி வருத்தமுறுமாறு செய்தனள்.

## 120- பாடல்

பாடியவர் : பரணர்

திணை : குறிஞ்சி

துறை : அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்த வழிக் கலங்கியது ஆகும்.

" இல்லோன் . . . . . . . அறியா தோயே "

விளக்கம்:

நெஞ்சமே! வறுமையாளன் ஒருவன் இவ்வுலகத்து இன்பத்தை அடைய விரும்பினாற் போல், நீயும் அடைதற்கரிய -தான ஒன்றையே விரும்பினை ஆவாய். நம் காதற்குரியவள்,

நமக்கு நன்மை தருபவளாதலை அறிந்தாற்போன்று, நாம் விரும்பும் பொழுதெல்லாம் பெறுவதற்கு அரியவள் இருத்தலையும் நீதான் அறியாது போயினையே!

## 121 - பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : இரவுக்குறி வரும் தலைமகன் செய்யும் குறி, பிறிது ஒன்றான் நிகழ்ந்தது. மற்று அவன் குறியை ஒத்தவழி அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று, ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கிய வழி, பின்னர் அவன் வரவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

துறை விளக்கம் :-

பிறிதோரிடத்தைத் தலைவன் செய்த குறியென்று நினைத்தவளாகச் சென்றடைந்து, அங்கு அவனைக் காணப் பெறாது திரும்பினாள் தலைவி. மற்றொரு நாள், அவன் குறியிடத்திற்கு வந்ததனைத் தோழி உரைக்கக் கேட்டதும், தன் ஏமாற்றத்தை இப்படிக் கூறுகின்றாள்.

"மெய்யோ வாழி? ...... தடமென் தோளே!"

விளக்கம் :-

தோழி! நீ கூறியது மெய்தானோ? மெய்யெனின் நீ வாழ்வாயாக! மை பட்டாற் போன்ற கரிய முகத்தையுடைய முசுக் கலையானது, மலைச் சாரலிடத்தே, தன்னைத் தாங்கும் கொம்பை அறிந்து பாயாத தவற்றினது பயன், அதனை

ஏற்ற கொம்பு முறிதலோடு போய்ச் சேரும். அதனைப் போலத் தலைவன் தான் குறியாளை முன்னர் வாய்ப்பச் செய்யாத தவற்றுக்கு, என் பருத்த மென்தோள்கள், தாம் நோயுற்றுப் பசலையை அடைந்தனவே!

## 122 - பாடல்

பாடியவர் : ஓரம்போகியார்

திணை : நெய்தல்

துறை : தலைமகள் பொழுதுகண்டு அழிந்தது.

### துறை விளக்கம் :-

தலைவனது பிரிவினாலே பெரிதும் வருந்த முற்றிருந்தனள் தலைவி. மாலைக் காலம் வந்துற்ற போது அவளுடைய வருத்தமும் மிகுதியாகின்றது. அதனைத் தோழியிடம் கூறிப் புலம்புகின்றாள்.

" பைங்காற் கொக்கின் ...... உடைத்தே! "

### விளக்கம் :-

பசிய கால்களையுடைய கொக்கினது, புல்லிய புறத்தைப் போன்ற, அழகான நீர் நிலையிடத்தே வளர்ந்திருக்கின்ற ஆம்பலும் மலர் நிறைந்த நிலையால் விளங்குகின்றது. இப்பொழுது மாலைக் காலமும் வந்துள்ளது. அது வாழ்க! இது தான் ஒன்று மட்டுமே தனித்து வருவதும் அன்று. இதனைத் தொடர்ந்து வரும் இருளையும் உடையதாகும்.

## 123 - பாடல்

பாடியவர் : ஐயூர் முடவன்

திணை : நெய்தல்

துறை : பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி அவன் சிறைப்புறத்தானாதல் அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம் :-

தலைவியைத் தன்னோடு அழைத்துக் கொண்டு பகல் வேளையிலே தலைவனைச் சந்திப்பதாகக் குறிப்பிட்டிருந்த இடத்திற்குத் தோழி செல்லுகின்றாள். அங்கே அவனை வரக் காணாத தோழி பெரிதும் அவன்பால் ஐயுற்று வருந்துகின்றாள். அதற்கு அவன் வருதலையும், வந்து செவ்வி நோக்கிய வனாக ஒருசார் ஒதுங்கியிருத்தலையும் கண்டவள், தலைவிக்குச் சொல்லுவாள் போல, அவனும் கேட்குமாறு, இப்படிச் சொல்லுகின்றாள்.

"இருள் திணிந்தன்ன . . . . . . என்னையர் திமிலே."

விளக்கம் :-

தோழி! இருளானது ஓரிடத்தே செறிந்திருந்தாற் போலவும், ஈரமும் குளிர்ச்சியும் கொண்டதாகவும் விளங்கும். கொழுமையான நிழலமைந்ததும், நிலவுக் கதிர்களைக் குவித்து வைத்தாற் போன்ற வெண்மணல் மேடிட்டு கிடப்பதுமாகிய, கடற்கரைப் பாங்கின் ஒரு பக்கத்தே, கரியவான கொம்புகளைக் கொண்ட புன்னை மரங்கள் அடர்ந்திருக்கின்ற பூம்பொழிலும் இதுவாகும். இவ்விடத்தே, நாம் தனிமைப்பட்டு வருந்துமாறு செய்தனராக, நம் தலைவர் இன்னும் வந்தார் அல்லர். பல மீன்களையும் வேட்டையாடிக் கொண்டு கரையை நோக்கி வருவதான என் தமையன்மார்களின், படகுகளும் இனி வந்து விடும்.

## 124 - பாடல்

பாடியவர் : பாலை பாடிய பெருங்கடுங்கோ

திணை : பாலை

துறை : புணர்ந்து உடன்போக நினைத்த தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

### துறை விளக்கம் :-

'தலைவியை நின்னுடன் அழைத்துப் போய் நின்னூரில் மணந்து கொள்க' என்று தலைவனிடம் தோழி வற்புறுத்துகின்றாள். அவன் வழியது கொடுமையை உரைத்து அதற்கு இசையானாகத் தான் மட்டுமே செல்லத் தொடங்குகின்றான். அவனுக்குத் தோழி இப்படிச் சொல்லுகின்றாள்.

" உமணர் சேர்ந்து ...... தமியோர்க்கு மனையே? "

### விளக்கம் :-

பெருமானே! உப்பு வாணிகர்கள் தங்கியிருந்து விட்டு நீங்கியதன் பக்கத்தே, எரிந்த இடத்தை உடைத்தான, ஊர் பாழ்பட்டுக் கிடப்பது போன்ற, ஓமை மரங்கள் வளர்ந்த பெருங்காட்டு வழியானது, நடந்து கடத்தற்குத் துன்பந் தருவது என்று சொன்னீர்கள். ஆனால் காதலரைப் பிரிந்து தனித்திருப்பவரான பெண்களுக்குத், தம் இல்லந்தான் இனியதாகுமோ?

## 125 - பாடல்

பாடியவர் : அம்மூவன்

திணை : நெய்தல்

துறை : வரைவு நீட்டித்த இடத்துத் தலைவி தோழிக்குக் கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாய் நிற்கக் கூறியது.

துறை விளக்கம்:-

தன்னை விரைந்து வந்து மணந்து கொள்வதாகச் சொல்லிப் பிரிந்து சென்ற தலைவன், குறித்தபடி வராததனை நினைந்து, தலைவி வேதனையுற்றாள். தன் உறவுக்குத் துணை நின்ற தோழிக்குத் தன் வருத்தத்தை இப்படிக் கூறுகின்றாள். ஒருபுறமாக நின்ற தலைவன் இதனைக் கேட்டுத் தன் தவறு உணர்ந்து வரைவு முயற்சியிலே ஈடுபடுவான் என்பது இதன் பயனாக அமையும்.

"இலங்கு வளை நெகிழச் ....... கண்மாறின்றே!"

விளக்கம்:-

தோழி! மலைச்சாரலிடத்துக் கொய்து கொண்ட தழையாலான அணிந்த அல்குல் தடத்தையுடைய மகளிர்கள், இவ்விடத்துப் பலராவர். அவர்களுள், விழாவைப் போல மேம்பட்டு, முன்னர் விளங்கியது என் பெண்மை நலன். துன்பங் கொண்ட நாரையானது, அலைகளைத் தோய்ந்தபடியே வளைந்து சாய்ந்திருக்கின்ற மரத்தினையிலே தூங்கியிருக்கும். குளிர்ந்த கடல்துறைக்கு உரியவன் நம் தலைவன். என் நலன், அவனோடு இடமாறியதாய், என்னைப் பிரிந்து இப்போது போய்விட்டது. அதனாலாகவும் யான் மட்டுமே, விளங்கும் வளைகள் நெகிழும்படியாக மெலிவுற்றபடி இன்னும் உயிருடன் இருக்கின்றேனே!

## வினாக்கள்

எட்டுத்தொகையில்

1. முதலில் தொகுக்கப்பட்ட நூல் எது?

2. அதிகமான உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்ட நூல் எது?

3. குறுந்தொகையின் அடிவரையறையைக் கூறு?

4. குறுந்தொகையைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயரைக் குறிப்பிடுக?

5. 'அருந்திறைப்' எனத்தொடங்கும் குறிஞ்சித்திணைப் பாடல் வழி அறியலாகும் கருத்துக்களை எழுதுக?

6. 'உள்ளின் உள்ளம் வேமே' - இது யாருடைய பாடல்?

7. வரைபொருள் விளக்குக?

8. 'காமம் மிக்க கழிபடர் கிளவி' விளக்குக?

9. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?

அலகு - 3

# அலகு - 3

## கலித்தொகை

1. குறிஞ்சிக்கலி - முதல் 5 பாடல்கள்
2. முல்லைக்கலி - முதல் 5 பாடல்கள்

கலித்தொகை சங்ககாலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாகும். பல புலவர்கள் பாடிய பாடல் தொகுப்பான இந்நூல் இனிய ஓசை கொண்டது. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளால் அமைந்த கலிப்பாவினால் பாடப்பட்டது. பாவகையால் பெயர் பெற்ற நூல் இது ஆகும். துள்ளல் ஓசையால் பாடப்பட்டுள்ளது. கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களின் மூலம் பண்டையக்கால ஒழுக்க வழக்கங்கள், மரபுகள் நல்லவர் தீயவர் பண்புகள், பறவைகள், மரங்கள் செடி, கொடிகளின் இயல்புகள் இதில் பேசப்படுகின்றன.

### குறிஞ்சிக்கலி :-

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாகும். இயற்கை எழில் மிக்க இடமான இந்த மலைப்பகுதியில் காளையொருவனும், கன்னியொருத்தியும் தமக்குள் தாமே கண்டு காதலுற்றுக் கலந்துறையும் உயர்க்கலப்பும் உதயமாகின்றது.

'குறிஞ்சிக்கு கபிலர்' என சிறப்புப் பெயர் பெற்ற கபிலர் பெருமானின் தமிழ் நயத்திலே உருவானது. இங்கு காதலர்களின் தெய்வீகக் கலப்பையும், அதன் தொடர்பாக எழும் காதல் உணர்வுகளையும், அங்கு எழும் இடர்பாடுகளையும் இன்னும் பல செய்திகளையும் எடுத்தியம்புகிறது.

## பாடல் - 1

(தலைவிக்கும் தலைவனுக்கும் இடையேயுள்ள களவுறவினைத் தோழி குறிப்பினாலே அறிந்தாள். அதனை முற்றவும் தெளிவு -படுத்துமாறு, இப்படித் தலைவிபால் கூறுகின்றாள்)

“கயமலர் உண்கண்ணாய் . . . . . . . . . .
அங்கண் உடையன் அவன்.”

### விளக்கம் :-

* குளத்திலே உள்ள நீலமலர்கள் தமக்கு மைதீட்டிக் கொண்டது போன்று விளங்கும் கண்களையுடையவளே! நீயும் ஆராய்ந்து பார். ஒருவன், அழகாக கட்டிய மாலையைச் சூடிக் கொண்டு, கையிலே ஏந்திய வில்லுடன், வலய வலங்களின் தடத்தை ஆராய்பவனைப் போல, நாள்தோறும் நம் அடிகளைப் பார்த்துக் கொண்டு இருப்பான். தான் கொண்ட காமநோயை முகத்தாலே காட்டுவானேயல்லாமல், வாய் திறந்து ஏதும் சொல்லவும் மாட்டான். பலநாளும் இப்படியே வந்து வந்து அவனும் போய்க் கொண்டே இருந்தான்.

* அவனுக்கும் எனக்கும் எவ்வித நெருக்கமுமில்லை. இருந்தாலும், அவன் தோற்றத்தைக் கண்டு இரங்கி வருந்தியவளாக, யானும் இரவெல்லாம் உறக்கம் கொள்ளாது வாடினேன். அந்த இடத்திலே வெளிப்படையாகத் தன் நோயைக் கூற ஆற்றல் இல்லாதவனாக அவனும் இருந்தான். நாம் கேட்கலாம் என்றாலோ, பெண்கள் அவ்வாறு கேட்பதும் முறையன்று. ஏதும் காணாமல் இவன் அழிந்தே போவானோ? அதுதான் உறுதியோ? என்று ஒருநாள் எண்ணினேன். அதனால், என் தோள்களும் மெலிந்து துயர் கொள்ளவே, துணிந்து ஒரு வெட்கமில்லாத செயலையும் அன்று யான் செய்தேன்.

நறுநுதலாளே, கேள். தினைப்புனத்திலே கிளிகளை ஓட்டிக்
காவலிருந்த நம் புனத்துப் பக்கத்திலே, ஒரு நாள் ஊசலில்
அமர்ந்து ஆடியிருந்தேன். அவனும் அங்கு வந்தான். வந்தவனை
'ஐய! சிறிது என்னை ஊக்கி விடுக' என்று கூறினேன். 'தையலே!
நன்று!' என்று அவனும் ஊக்கினான். பொய்யாகக் கை நெகிழ்ந்தது
போலக் காட்டி, அவன் மார்பில் வீழ்ந்தேன். உண்மையென்றே
அவனும் நினைத்துவிட்டான். விரைந்து, என்னை அப்படியே
அணைத்து எடுத்துக் கொண்டான். உண்மை அறியாதவளே
போல நானும் அவன் மார்பின் மேலேயே வீழ்ந்து கிடந்தேன்.
அப்பொழுது, அவன் மார்பில் கிடக்கிறோமே என்ற உண்மையை
அறிந்து நான் நிமிர்ந்து எழுந்தால், விரைவாக, அழகிய குழலை
உடையவளே செல்க என்று கூறிவிடும் பண்புடன் அவனும்
அருகே காணப்பட்டான்!

## பாடல் - 2

(களவிலே கூடி மகிழ்ந்தனர் காதலர். 'களவு நெடுநாள் போவது
நன்றன்று. விரைவிலே மணவினை நிகழவேண்டும்' என
விரும்பினாள், அக்காதலின் தோழி. தலைவி இல்லாத வேளையிலே,
தலைவனிடம் அதுபற்றிப் பேசினாள். அவனும் உணர்ந்தான்.
அந்தச் செய்தியை வந்து அவளுடன் தலைவிக்கு உரைக்கின்
- றாள் தோழி!)

"இமைய வில் வாங்கிய . . . . . .

பணைத் தோள் வரைந்தனன் கொளற்கே."

**விளக்கம் :-**

கையிலே சிவதனுசும், சடையிலே கங்கையும்,
ஒரு பாதியிலே உமையம்மையும் கொண்டவனாக,
இமயத்தின் உச்சியிலே சிவபிரான் வீற்றிருந்தான். பத்துத்தலை
கொண்ட அரக்கர்கோமான் இராவணன், அம்மலையடியிலே, தன்
அகன்ற கையைச் செலுத்தி அதனை அவனுடன் எடுத்தெறிய முயன்றான்

ஆனால் எடுக்க இயலாது வருந்தி அரற்றினான். வேங்கை
மரமானது பூத்து இருக்கப் புலியுருவாக அது விளங்கக் கண்ட
மத யானைக்குச் சினம் மிகுந்தது. தன் கொம்புகளை மரத்தினுள்
ஆழமாகப் பதித்தன. மரமோ அதனால் சாயவில்லை.
கொம்புகளையும் யானையால் வெளியே எடுக்க முடியவில்லை.
அந்நிலையிலே, மலைச்சிகரங்கள் அதிருமாறு அது பிளிறியது.
இராவணன் கைலையையே செலுத்திய கையெடுக்க முடியாது
கதறியது போன்றிருந்த அந்தக் காட்சியைக் குறவர்கள் தம்
ஊரில் சொல்லி வியந்தனர். அப்படிப்பட்ட மத யானைகள்
நிறைந்துள்ள மலைநாடனே! நான் சொல்வதையும் கேள்!
என்று தோழி தன் பேச்சைத் தொடங்குகின்றாள்.

பசுமையான பயிர்கள் நீரில்லா போது வாடுவதும்
அதுபோல, நின் அருள் பெறாமல், தன் அழகுகெட்டு வாடினாள்
இவள். வருவதற்கரிய இடம் என்றும் நீ நினைப்பதில்லை. அங்குக்
கிடக்கும் பாம்புகளுக்கும் அஞ்சுவதில்லை. நீயும் வந்தாய். மழைபெய்த
விளைநிலம் விடியற்காலை வேளையில் பசுமை அழகுடன்
விளங்குவது போல, இவளும் நின் வரவாலே அழகுபெற்றாள்.
அந்த அழகு போய் விடாமல் என்றும் நிலைத்திருக்க வேண்டாமோ?
அதற்கு ஒரு வழியுண்டானால், அதனைச் சொல்வாயாக!

இரவு என்றும் நீ அஞ்சுவதில்லை. இடைவழியானது
துன்பம் நிறைந்ததென்றும் நீ நினைப்பதில்லை. வந்துவிடுவாய்.
பொருள் இல்லாதவனின் இளமைபோல வாடியிருந்தவள்
விடியற்காலை வேளையிலே அருள் வல்லவன் செல்வம்போல்
அணிபெற்று விட்டனள். அந்த அழகு மாறாமல் காப்பதற்கு
ஒரு சக்தி இருக்கிறதா? இருந்தால் அதைச் சொல்வாயாக!

கானவர்கள் கொடுமையர் நிறைந்துவிட்டார்.
என்றும் நீ சொல்வதில்லை. ஆனாலும் அந்த மலைப்பாதை
-யினைக் கடந்தும் நீ வந்துவிடுவாய். அறம் செய்யாதவனின்
முதுமை போல நேற்றெல்லாம் கவலை கொண்டிருந்தவள்,
இன்று காலையில், ஆற்றலுடையவனின் செல்வம் போலத்

திருத்தமாக விளங்குகிறாளே! அப்படித் திருத்தம் பெற்றவள், மீண்டும் நிலைகெட்டு அயலார் பழிப்புக்கு ஆளாகாமல் தீர்க்கும் பொருள் இன்றிருந்தால், அதனைச் சொல்ல மாட்டாயோ!

தோழி! இவ்வாறு அவனில்லாதபோது நீ படும் வேதனைகளை நான் புனைந்து உரைக் கேட்டான், நல்ல மலை நாடனாகிய அவன்! வேங்கை பூக்கும் காலத்தை எதிர்பார்க்கின்றான். இறை செறியுமாறு பணைத்த நின்தோள் நலனைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு, நம் ஊருக்கு அவன் தவறாமல் மணம் பேசி வருவான்.

3. பாடல்

(அவனுக்கு அவளைத் தருவதற்கு உறவினர் மறுத்தனர். தோழி செவிலித்தாயிடம் சென்றாள். அவளைத்தான் மணம் முடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினாள். அவள், பெற்ற தாயிடம் சென்று சொன்னாள். அவள், அவளுடைய தகப்பனுக்கும் அண்ணன்மார்க்கும் சொல்லி வற்புறுத்தினாள். அவர்களும் ஒருவாறு இசைவு தந்தனர். திருமணம் விரைவில் முடியவேண்டும் அல்லவா? அதற்காகக் கன்னிப் பெண்கள் தெய்வத்தை வேண்டுகின்றனர். பாவை ஆடிப் போற்றுகின்றனர்)

~~தொடக்கம்~~ :

"காமர் கடும் . . . . . . . .

பூ எழில் உண் கண்ணும் பொலிகமா, இனியே!"

விளக்கம் :-

எம்மோடு நீராட வந்தாள். கால் தளர்ந்து நீரோடே போனாள். பயத்தால் கண்களை மூடிக்கொண்டாள். அங்கு வந்த இளைஞன் தன் மார்புமாலை அசைய அப்படியே

நீரில் குதித்தான். தான் தாங்கும் இவள் மார்பகங்கள் தன் மார்பினை இறுக்கமுறும்படி அணைத்துக் கொண்டுவந்து அவளைக் கரை சேர்த்தான். 'அவன் அகன்ற மார்பை இவளுடைய முலைகள் தழுவின' என்று, அதனைக் கண்டவரான பிறர் கூறினர். அதனால், அவனே அவள் மணவாளனாவான்! என் தோழி, அருமழை தரல் வேண்டினாலும், உடனே தரக்கூடிய கற்புப் பெருமையுடையவள். பிறனை என்றும் இனி மணக்கக் கருதாள்.

அவன் மட்டுமென்ன? புனத்திடையில் பரணிலே எழுந்த அகிற்புகையானது எழுந்து நிலவை மறைக்க, அந்நிலவு ஒளியின்றி மலைமுகட்டில் வான்வழியே சென்று தங்கியிருக்குமானால், அதனையும் 'தேன்கூடு' என்று நினைத்து நூலேணி இழைத்துக் கொண்டிருக்கும், காட்கின்ற நாட்டிற்கு உரிய தலைவனின் மகனாவான்.

சிறுகுடியீரே! சிறுகுடியீரே! நம் மலை வாழ்பவர் அவள் ஒருப்பத்தை அறியாது தீமை செய்து நடக்கின்றனர். அதனால் இனி வள்ளியாலே கிழங்கு வீழாது. மலைமுகட்டில் தேன்கூடுகள் உண்டாகாது. தினைக் கொல்லையிலும் கதிர்கள் வளமாகத் தோன்றாது. இதனையும் நீவிர் காண்பீராக!"

கரியமலையின் மூங்கில்போல அழகிய மென்மையான தோள்களை உடையவர். மடப்பத்தையுடைய குறக்கன்னியர். பார்த்தவர் வைத்த கண்களை அப்படியே வாங்க இயலாது துயக்கும் பேரழகினை உடையவர் அவர். காந்தள் மலரின் மணம் கமழும் உடலினர். அவர்கள் என்றும் பிழை செய்வதில்லை. கணவரைத் தொழுது எழும் அவரது கற்புச் சிறப்பினால் தான் அவர்களின் அண்ணன்மாரும், தாம் குறி தப்பாது கணை செலுத்தும் ஆற்றலை உடையவராயிருக்கின்றனர். இப்படிக் கூறி, நான் அறத்துணையோடும் நீங்கக் கண்டனள். தாய் நிறைமையாக மூத்தோரிடம் அவர்களுக்குத்

தக்கவாறு சொல்லினாள்.

அவர்களும் உடனே இசைந்து விடவில்லை. கண் திறந்து அன்னையும் அப்பையும் பார்த்தவாறே, ஒரு நாள் பகல் முழுவதும் உருகி எழுந்தனர். பின்னர், அவர்களின் சினமும் ஆறிற்று. 'இருவர் பேரிலும் குற்றமில்லைதான்' என்று சொல்லித் தாம் சினங்கொண்ட செயலுக்கு நாணியவர் போலத் தலை கவிழ்ந்தனர்.

தெரியிழாய்! நீயும் நின் காதலனும் மணம் செய்து கொள்ள, வரைவுறை தெய்வம் மகிழ்ந்து அருள வேண்டாவோ? அதனை வேண்டி, மகிழ்வுடன் நாம் குரவையாடலாம். குரவையினுள் கொண்டுநிலை பாடிக் காண்போம், வா!

தலைவி: நல்லவளே! அந்த நல்ல நாள் வரும்வரையும் நம்மவரின் மலையிலே, நம் வேட்கத்தைத் தாம் தாங்கிக் கொண்டிருப்பவர், என்ன தவஞ்செய்தவரோ?

புனத்தில் நிற்கும் வேங்கையானது, தாது வீழ்ந்து பொன்னிறமாகக் காட்சிதரும் முற்றத்து வெளியிலே நனவாகவே அவருடன் என்னைச் சேர்த்து வைக்கும் நிகழ்ச்சி நடக்குமல்லவோ? அன்று, அந்த ஒப்பற்ற மணப் புணர்ச்சி நடந்ததும், அப்பொழுதே கனவிலே அதனுடன் சேர்ந்து உறவாடும் எண்ணத்தை நாமும் விடுவோம் அல்லவோ?

தோழி:-

வானத்தை எட்டும் மலைநாடனும் நீயும், திருமணப் பொழுதிலே, முன்னர் அறியாதவர் போலத்தான் காட்டிக் கொள்வீர்களோ? நீங்கள் அப்படிக் காட்டினாலும், உம் பழைய உறவைக் கண்டவளான யானும், அதனை அறியாதவள் போல மறைக்க முடியுமோ?

மேகந்தவழும் மலைக்குரியவனுடைய திருமணக் காட்சிகளைக் காணாமல், வெட்கத்தால், கையால் மூடப்படும்

கண்களும் கண்களாகுமோ?

தலைவி :-

அதனாலென்ன? உன் கண்ணாலேயே யானும் கண்டு களிப்பேனே!

தோழி :

நெய்தல் இதழ் மையுண்டது போன்ற நின் கண்களும் என் கண்கள் போன்று திறந்தே இருப்பவாகுக. இவ்வாறு, அவ மகிழ்கின்ற பேதையே, நாள் குறிப்பதில் தேர்ந்தவனான கணியை முன்னாகக் கொண்டு, தலைமிக்கவரும் தொகைவகை அறிந்தவருமான சான்றோர் சூழ, உயர்ந்த மலைக்கு உரியவனும் பெண் கேட்க வந்தான். மூங்கில் போன்ற நின் மென்தோளின் பசலையும், ஊரின் அம்பலும், கனவாலே காணும் மாயத் துட்டமும் எல்லாம் இனி உடனே நீங்கிவிடுமாம்! நின்னுடைய மையுண்ட கண்ணும் அழகுடன் இனிதாக விளங்குமாக.

## பாடல் - 4

(மலையுறை தெய்வத்தைப் பாடினர் தோழியர் இருவர். 'ஒருத்தியின் காதலன், முறையால் அவளை மணம் பேசி வந்தான்' என்ற செய்தியை, அவர்களுள் ஒருத்தி, மற்றவர்களுக்கு அப்போது சொல்லுகிறாள்)

விளக்கம் :-

'அகவினம் பாடலாம் வா, தோழி!' என்று அழைக்கின்றாள் ஒருத்தி. "நல்ல பெண்கள் நாணத்தால் தலைசாய்வது போலத் தினைப் பயிரிலே கதிர்கள் முற்றித் தலைசாய்ந்துள்ளன. அவற்றை உருவிச், சந்தனமர உரலிலே இட்டு, யானைத் தந்தத்தாலான உலக்கையைக் கொண்டு குற்றலாம். மாறி மாறி உலக்கையை உயர்த்தி, நமக்கு நோய் செய்தவனுடைய மலையைப் பாடல் பொருளாகக் கொண்டு போற்றிப்

பாடுவோம்.' என்று, அதற்கு இசைகிறாள் ஒரு தலைவி

'ஆய் நுதல்; அணி கூந்தல்; அழகிய பணைத்த அகன்ற மென்மையான தோள்கள்; தேன் நாறும் கன்னம்; எல்லாம் உடையவளே! நான் ஒன்று பாடுகின்றேன். அவன் மலையைப் பற்றி நீயும் ஒன்று பாடு' என்று தலைவி கூறத் தோழியும் அதற்கு இசைந்து பாட்டாள்.

தலைவி இயற்பட பாடவில்லை. அதனால் தோழியே முதலில் பாடுகிறாள். 'கொடிச்சியர் கைகூப்பி மலையுறை தெய்வத்தை வணங்குவர். அவர் கைவிரல்கள் போன்ற காந்தள் மலரிலே மலர்கள் தேன் சொரியும், அதனால் காந்தள் மலர்கள் அசையும். தனக்கு வேண்டியவரின் துயரத்தைத் தீர்க்கவுடைய மலையில் இதனைக் காணலாம்.

கற்றறிவு இல்லாத ஆண் குரங்கு ஒன்று மந்தியின் சுற்றத்திடம் சென்று, 'இவளை எனக்குக் கொடு' என்பது போல, இரவலனை நீட்டிக் கேட்டுத் தன் குறையைச் சொல்லி நிற்கும். தான் கூடின பெண்களின் தன் பிரிவால் இயற்கை நலம் கெட்டால், அவரினும் தான் பெரிதும் துயர் கொள்பவனின் மலையிலே, மற்றொரு காட்சி இது.

## தலைவி இயற்பழித்தல்:-

'முருக்கு விரிந்த கொம்பு மறைந்த அடர்த்தியான மலர்கள் நிரம்பிய, தாழ்ந்த கிளையிலே வாங்கும் தளிர் போன்ற அழகிய என் உடல் எழில் வாடுமாறு அவன் நோய் செய்தான். அவனுடைய மலையடுக்கங்களைப் பழித்து நாமும் இனி ஒன்று பாடுவோம்.

"மலைச்சாரலிலே தாதை உண்ட வண்டினம், மீண்டும் அந்த மலரைத் தேடாது வேறொரு மலரை நாடிச் செல்லும். அவ்வண்டு போலப் பெண்டிர்பால் நலம் அனுபவித்து அவர் வாடுமாறு பிரிந்து சென்றான் அவன். அவன் மலையாயிருந்தும், அண்ணாந்து தொடும் மலைமுகடுகளிலே, தாம் பந்தடித்து

பிணையாடிய களைப்புத் தீரத், தெய்வமகளிர் பலரும் தாழ்ந்த அருவியின் குளிர்ந்த நீரிலே ஆடி மகிழ்கின்றனரே? இதுதான் ஏனோ?

தோழி : 'உற்றாரை மாட்டு என்றும் பிரியோம்' என்பவனுடைய மலையல்லவா? அதனால் போலும், களிற்றியானை ஒன்று தன் அன்புப் பிடியின் தலைச்சூலால் ஏற்பட்ட மசக்கைக்குத் தருவதற்காக, இனிய கண்ணிலே கிளைத்த நீண்ட கிளைகளையுடைய கரும்புகளைத் தான் முறித்துக் கொண்டிருக்கிறது!

தலைவன் வந்தது உறுதல் :-

இவ்வாறு நாம் அவனுடைய மலையைப் பாடினோம். விருப்பமுடன் கேட்ட அவன், உடல் முழுவதும் உவகையால் பூரிப்படைந்தவனாக நம்பால் வந்துவிட்டான். கனவிலே எவ்வளவுதான் தருவதுபோலக் கண்டாலும், ஆசை தீராதல்லவா? அதனால், உன் மென்முலைகளையுடைய மார்பைத் தழுவி அழகு பெறுமாறு செய்ய, நின்னை வரைந்து கொள்ளக் கருதியவனாக, அச் செம்மலாகிய மலைநாடனும் வந்துவிட்டனன், பாரடீ.

## பாடல் - 5

(காதலால் கட்டுண்ட இருவருள், தலைவியைத் தலைவன் பிரிந்து சில நாட்களாயின. தோழியும், தலைவியும் பாடிக் கொண்டே நெல் குற்றுகின்றனர். தலைவி தன்னைப் பிரிந்தவனின் மலையின் வளத்தைப் பழிக்கிறாள். தோழியோ புகழ்கிறாள். முடிவில், அவர்கள் 'மணம் உறுதியாயிற்று' என்ற செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறுகிறாள்.)

"பாடுகம், வா - . . . . . . . . . . . .

. . . . . . . அம் மலை கிழவோற்கே!"

விளக்கம் :-

யானைக் கொம்பினை உலக்கையாகவும், சேம்பின் இலையைச் சுளகாகவும் கொள்வோம். மூங்கில் நெல்லைப் பாறை உரலிலே பெய்து நெல் குற்றுவோம். பாடிக்கொண்டே நெல்லைக் குற்றுவோம், தோழி! நீயும் வருகின்றாயோ!

மழைக்காலத்து இருண்ட இரவில், மின்னல் வெளிச்சத்திலே, இடிமுழக்கமும் கேட்கும். அவ்வேளை, யானைகள் தம் பிடியோடு வந்து புன்செய்ப்பயிரைத் தின்னும் அவற்றின் காலடிச் சத்தம் கேட்ட கானவன், ஆசினிப் பலாவின் உச்சியில் அமைந்த பரணிலே ஏறுவான். கவணிலே கல்லை வைத்து வேகமாக எறிவான். அந்தக் கல் எவ்வளவு வேகமுடன் செல்லும் தெரியுமா? வேங்கை மலர்களைத் தாக்கிச் சிதறும். ஆசினிப் பழங்களை உதிர்க்கும். தேன் கூடுகளைத் துளைக்கும். மாமலர்களைச் சிதற அடிக்கும். குலைவாழையின் மடலைக் கிழிக்கும். அதன் பின் பலாப்பழத்துள் சென்று தங்கும். அத்தகைய வளமைக்கு உரிய நாடன் உன் காதலன். அவன் மலையைப் பாடுவோம். வா!

'தான் சொன்ன சூள்உரையைப் பேணவில்லை. அதனைப் பொய்த்து விட்டான், அவன். அவன் மலையிற்கூட அருவிகளா? மழை பெய்து அருவிகள் அங்கே வழிந்து கொண்டிருப்பதா?'

'அவனோ பொய்த்து வாழ்பவன்? 'அஞ்சாதே' என்று சொல்லைச் சொன்னவரிடமோ பொய்த்து விடுவான்? இன்று அதனை நாட்டினனான அவனே பொய்த்தான் என்றால், நிலவிலே தீ தோன்றியது போலத்தான்!

'அவன் பிரிவால் வாடி, என் கைவளைகள் கழன்று ஓடுகின்றனவே! இருந்தும் அவனை வரக்காணேனே! மேகங்கள் அவன் மலையிலும் கறுத்து சாரல் பெய்கின்றனவே! அது நியாயமா? நாடோறும் அல்லவோ பெய்கின்றன!'

'வாராது இருக்கக் கூடியவனா அவன்? அவன் அப்படிப் பட்டவனே அல்லன். அருள் உள்ளம் உடையவனல்லவா?

அவனருளிலும் பொய் தோன்றுமானால், என் சொல்வது? நிழலில் உள்ள குளத்து நீருள்ளே கிடக்கும் நீலமலரில் பெரு நெருப்பு எழுந்த கதைதான்!

'மலையைப் பார்! நீலமணி போல ஒளிர்கின்றதே? என்னைத் தழுவாது பிரிந்தவனான அவன் மலையா, இவ்வாறு கழுவாத நீலமணிபோல விளங்க வேண்டும்.

கைவிட மாட்டானடி, கைவிடமாட்டான்! மலைத்தொடர் -கருக்கு உரியவன் கைவிடவே மாட்டான். அவன் உறவிலும் குற்றம் தோன்றுமோ? தோன்றினால், அது ஞாயிற்றினுள்ளே இருள் தோன்றியது போலத்தான்!

இப்படி நாம் 'வள்ளைப்பாடனோமே அதை, மறைவிலே நின்று அவனும் கேட்டு விட்டான். நம்மேல் அருளுடன் பெண் கேட்டும் வந்தான். உன் தந்தையும் வேங்கை மரத்தின் கீழ் அமைந்த மேடையிலே இருவருக்கும் மணம் செய்யவும் இசைந்து விட்டான். இனியும் ஏனடி வருந்துகிறாய்!

## முல்லைக்கலி

காடும் காடுசார்ந்த இடமும் நிகழ்கின்ற களனாகக் கொண்டும், அவ்விடங்களிலே தம் வாழ்வியலை அமைத்து வாழ்ந்தாரான ஆயர் குடியினரின் அக வாழ்வினை அடிப்படை -யாகக் கொண்டும், எழில் பெருக அமைந்தன இந்தப் பகுதி ஏறுகோடலும், ஆயர் குலத்து ஆய்ச்சியரது மனவுறுதியும், ஆயரிளைஞரது அடலேறு கொள்ளும் ஆற்றலும், என்னும் பழந்தமிழ்க் குடியினரது மாண்பை எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு கலிப்பாவும் ஓரங்க நாடகம் போல சுவை மிகுந்தது. இதனை நல்லுருத்திரனார் பாடியுள்ளார்.

## பாடல் - 1

( ஆயரிளைஞர் தாம் விரும்பும் கன்னியரைப் பெறும் பொருட்டுக் குறித்த ஏறுகளைத் தழுவுகின்றனர். ஆயர்குல மகளிர் தாம் தாம் தமக்குள் ஆவலுடன் உரையாடுகின்றனர். தலைவியின் காதல் நிறைவுறும் என்பதைத் தோழி உறுதி கூறுகின்ற நயத்தை-யும் காணலாம்)

விளக்கம்:-

### தோழி தலைவிக்கு ஏறு தழுவுதலைச் சுட்டிக் காட்டுதல்:-

முன்னர் உலர்ந்திருந்த மடவம், மழை பெறுகின்ற குளிர்ந்த பூமியாலே, முல்லைப் புறத்தே கொண்ட அரும்புகளையும் ஈன்றது. கள்ளுண்டவனின் கண்ணைப் போல சிவப்பையும் தருப்புகளை ஈன்று, மன்னர்த் தீக்கடை கோலால் கடைந்து நிறைந்த நெருப்புப் போன்ற ஒளியுடன் செங்காந்தள் பூக்கள் விளங்கின. காயாம்பூக்கள் நீலமணியின் உருவினையும் நிறத்தையும் உடையனவாயிருந்தன. இவற்றோடு பிறவுமாகிய பூக்களை அழகுறத் தொடுத்துக் கண்ணியாகச் சூட்டியிருக்கின்-றனர் ஆயரிளைஞர்.

அவர்களைத் தொகுதியாகச் சேர்த்துச் சீறுதற்கரிய வலியுடையோனான இறைவனின் கணிச்சிபோலக் கொம்புகள் சீவப்பட்ட ஏறுகள் நிற்கின்ற தொழுவினுள், தம்மைப் பகைத்துவரும், அவற்றைத் தழுவித் தம் ஆற்றலைச் சேர நிறுத்துவதற்காக, ஒருங்கே சென்று புகுந்தனர். அவர்கள் அவ்விடத்திலே முழக்கினை இடியெனத் தம்முன்னே அதிர்வுறும் எழ, ஏறுகள் முக்காரமிட்டு நின்றன. 'ஏறு தழுவியவர்க்கே மகளைத் தருவேம்' என்ற ஆயர்குல வழக்குப்படி, ஏறுதழுவ முன் வந்தோர் அனைவரும் வந்து சேர்ந்தனர். ஆரவாரத்தோடு எங்கும் புழுதியும் எழுந்தது. நல்ல மகளிர் திரண்டு ஒருசார்

நின்றனர். நீர்த்துறைகளிலும், ஆலமரத்தடிகளிலும், பழைய வலியுடைய மராமரத்தின் கீழும் உறையும் தெய்வங்களுக்கு முறையாக வழிபாடுகள் செய்தபின், இளைஞரும் தொழுவத்துள்ளே சீறிப் பாய்ந்தனர்.

தோழி: உயர்ந்த கொம்பட்டத்திலே வைத்த பட்டுப் பூச்சியினது நிறத்தைப் போன்ற, கருஞ்சிவப்பு நிறத்தைக் கொண்ட ஏற்றின் பார்வைக்கு அஞ்சாமல், அதன் மேல் பாய்ந்து பற்றினான் ஓர் ஆயர் இளைஞன். அவனைச் சாவுமாறு குத்திக் கொம்பினிடையிலே கொண்டு, அது அவனுடலைக் குலைக்கின்ற காட்சியைப் பார்! அது அழகிய சீருடைய, அசையும் இயல்புடையதான, திரௌபதியின் தலை மயிரிலே கை நீட்டிய துச்சாதனனைப் போரிலே நெஞ்சத்தைப் பிளந்து அழித்துப் பகைவர் நடுவே தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமசேனனைப் போல அதுவும் தோன்றுகின்றதல்லவோ!

சந்திரனைப் போன்ற நெற்றிச் சுட்டியையுடைய காரி, மலைப் பூக்கண்ணி சூடிய அப்பொதுவனைச் சாடக் கூர்மையாகக் குத்தி குலைக்கின்றதைப் பார்! ஊழி முடிவாலே, ஒரு பாகத்தில் பசுமையான உமையையுடைய கடவுள், எருமை வாகனனான கூற்றுவனின் நெஞ்சத்தைப் பிளந்து குடலைக் களித்துப் பலியாக இடுவது போன்று உள்ளது அல்லவா?

செவ்வப்புறத்திலே மின்னும் நுண்ணிய செம்புள்ளிகளையுடைய வெள்ளை ஏற்றின் கோபத்துக்கும் அஞ்சாது, அதன் மேல் பாய்ந்த இளைஞனை, அது சாடத், தன் கூரிய கொம்பு முனையால் குத்திக் குலைப்பதைப் பார். அடர்ந்த இருள் என்னும் கருதாமல் நடு இரவிலே வந்து தன் தந்தையைக் கொன்றவனைத் தன் ஆற்றலின் வலிமையினால் தலையைத் திருகிய அசுவத்தாமனைப் போன்றிருக்கின்றதே அது.

ஆயர்கள் மணிமாலை அணிந்த குழலனை உளதுகின் -றனர். நல்ல நிமித்தம். இது. அழகிய மாலை அணிந்த உன் காதலனை

உனக்குக் கட்டாயம் இன்று கொண்டு தரும் (இவ்வாறு தலைவனிடம் பேசுகின்றாள்)

மதங்கொண்ட களிற்றுயானையாலும் மிகுந்த வலிமையுடைய ஏற்றை அடங்காது பற்றி நீ வெற்றிகொள்வாய். நீ அவ்வாறு செய்தால், எம் ஆயமகள் தோள் பரிசினும் வெற்றிக் கொடியைப் பெற்றதாகும் (பாணனார்க் தலைவாயாடம் வந்து)

'பகல்போதில் அலர்ந்த கண்ணியையுடையவன். உருத்தம் ஒலிக்கும் குழலினையுடையவன். தோள்மேல் வைத்த கோலினைப் பற்றி அசைத்துக் கொண்டே யாருக்கும் கையன். அயலாலே ஆ கொல்லேறு கூட இருந்தாலும், எம் பல்லாரும் உந்தல் அணையாகப் பயன்பட நாமே தருவோம்' என்றாள்.

"ஏறு கொள்ள வல்லார் என்னைப் போன்றவர் எவரும் இவர் என்று, நம் பசுத்திரளிடையே நின்று வீரம் பேசுகின்ற பொதுவன் நமக்கு ஒரு நாள் உறவனன் ஆகாமல் போவதில்லை. அவனைக் கண்டு என் கண்களும் காதல் பயானை வளர்க்கின்றன என்கிறாள் தலைவி."

தோழியும் தலைவியும் இவ்வாறு பேசி இருக்க அங்கே தொழுவினுள் ஏறுகளும் வருந்தித் தளர்ந்தன. ஆயர்கள் பலர் புண்பட்டனர். மணங்கமழும் கூந்தலையுடைய ஆயமகளிர் எல்லாரும், தம்மை காதலித்த பொதுவர்களுடன் சேர்ந்து, களித்து ஆட விரும்பியவர்களாக, முல்லைமலர் நிறைந்த குளிர்ந்த சோலையினுள்ளேயும் சென்று புகுந்தனர்.

இதனால் 'நீயும் உன் தலைவனைப் பண்பாக்கிச் செல்க!' எனத் தன் அருகே இருந்த தலைவிக்கு தோழி கூறாமல் கூறியதாயிற்று.

## பாடல் - 2

(ஆயர் குலத் தலைவனைக் கண்டு காதலித்து, ஏறு தழுவி அவளை வென்றதும், ஆயர்கள் களிப்பு மிகுதியினாலே குரவை ஆடி மகிழ்கின்றனர்)

"கண் அகன் இரு ............... மன்றம்
பரந்தது, உரை!"

**விளக்கம் :-**

தலைவன்: ஏடா இதோ களிப்புடன் விளையாடும் கன்னியரின் கூட்டத்தைப் பார். பிடவும், முல்லையும், தோன்றியும், கொன்றையும் பிறவுமான மலர்களைக் கொய்து, தழை கோதை, இழை என்பனவாகக் கட்டி அமைத்திருக்கின்றனர். களிகொள்ள அடும் அக்கூட்டத்தினருள், இன்று தன் உடலோடும் என் உயிர் புகுமாறு கவர்ந்து கொண்டு அதோ நிற்கிறாளே, அவள் தான் யாரோ காண்?

பாங்கன்: ஓ! அவளோ? 'கொலைய போரேற்றைத் தழுவி வெற்றி பெறுபவரல்லாத பிறர், இவள் அழகு தவழ்கின்ற மேனியைத் தீண்டத்தக்கவர் அல்லர்!' என்று பறையறைந்து சொல்லால் எங்கும் தரப்பட்டவள் அல்லவோ அவள்!

தலைவன்: அவள் பெற்றோர்பால் சென்று சொல்லுக, யான் அந்தக் கொல்லேற்றைத் தழுவுதற்கு முன் வந்தேன்."

சான்றோர் சென்று அவள் பெற்றோர்பால் அச்செய்தியைச் சொல்ல, 'யாங்கள் தாழ்த்திரோம்' என்றனர். அது கேட்ட அவள் சுற்றத்தார், "மாணிழைக்காக நடைபெறும் ஏறு தழுவுதல் நிகழும்" என்று பலரும் கேட்டு அறிய எங்கணும் பறையறை சாற்றினர்.

இவ்வாறாதலாலே, பெண்களெல்லாம் கண்கள் நோக்குமாறு நோக்கும் இடம் எல்லாம் பரணிலே இருக்கப் பெறுவார்களாயின், அதுவும் ஓர் அழகாயிருக்கும் என அமைத்தனர்.

அழகினை உடைத்தாகிய வனப்பினையுடைய அவ்வேறுகளின் மேலே பாய்வதற்காக, ஆரவாரத்துடன் அவற்றின் எதிரெதிராகச் சென்றனர் ஆயரிளைஞர்கள் பலர்.

அவர்கள் வரக்கண்ட ஏறுகள், கொலை மிகுந்த வல்லமைத்து செறிந்த போரைச் செய்வது போன்று, சினமுற்றெழுந்து, அவரை நோக்கிப் பாய்ந்து ஓடின.

அப்பொழுது, எங்கணும் ஒரே புழுதிப் படலம் எழுந்தது. மார்பைக் காட்டி நின்றனர் ஆயர். ஏறுகளின் கொம்புகள் தரையை ஒட்டிக் கவிழ்ந்தன. ஐயோ! என்று கதறிக் கலங்கினர் பலர்.

அவருள், நீலமணி போன்ற நிறமுடைய நெடுந்தோள் ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவ, அதன் திமிலிடையாலே தோன்றினான் ஒருவன். தோன்றி, அந்த ஏறு பெரிதும் வருந்துமாறு அதனைப் பற்றியழுத்தி அணைத்தான் அவன்!

ஏறுபடுகின்ற துன்பத்தைக் கண்டவர்கள் எழுந்தனர், ஏற்றின் உரிமையாளர்கள். அவன் செயலுக்குத் தாம் மகிழ்தல் அன்றி ஏனோ, அவன்மேல் பகைகொள்கின்றனர்.

முன்னர் கொல்லேற்றின் கழுத்திலே தூங்கினவர்களைக் கண்டிருந்தும், இன்றும் வருந்துகின்ற ஏற்றைக் கொல்லுங்கள் எனச் சொல்லுகின்றனரே இந்த ஆயர் மக்கள். இவர்கள் மிகவும் அறியாமையை உடையவர்கள் தாமே.

ஆங்கு, இனித் தண்ணுமையான் பாணி தளராது எழுக! என்றனர் அற்றத்தார். பண் அமைந்த இனிய தாளத்தையுடைய குரவையுள் அடங்கிய, கன்னியையும்,

திண்மையான தோள்களையும், திறலைத் வளக்கத்தையும், மாயப் போரினையும், கரிய மேனியானையும், அழகிய துவரூட்டிய ஆடையையுமணிந்த பொதுவனோடு, சேரும் அழகிய முறுவலாளின் மென் தோள்களையும் பாராட்டிச் சிறுகுடி மன்றத்திலே குரவையாடி மகிழலாம் எழுக' என்று கூற அனைவரும் குரவை காண எழுந்தனர்.

## பாடல் - 3

(ஆயர்குல இளைஞர்கள் ஏறு தழுவுதலைத் தனித்தனியே தன் தோழிக்குச் சுட்டிக் காட்டிப், மன்னர்த் தலைவியான் காதலனும் அவ்வாறு ஏறு தழுவுமாறு துணிதற்குத் தூண்ட எண்ணிக் குரவையாடுகின்றனர் ஆய மகளிர்)

'மெல் இணர்க் . . . . . . . . . இம் மலர் தலை உலகே!"

### விளக்கம்:-

பல பசுக்களுக்கு உரிமையுடையவரான பொதுவர்கள், கல்லிடத்தனவும் காட்டிடத்தனவும் ஆகிய மென்மையான கொன்றை, காயா, வெட்சி, பிடவம், முல்லை, கஞ்சங்குல்லை, குருந்தம், தோடல், பாங்கர் முதலிய மலர்களால் செய்த கண்ணிகளைச் சூடியவராக வந்து கொண்டிருந்தனர். அவர்கள் விரைந்து வந்து ஏறுதழுவுதலைக் காண விரும்பிய ஆயமகளிர் பலரும், பரண்களிலே முற்படவே வந்து அமர்ந்தனர். முல்லை முகையுடன், மயிற்பீலிக் கொழுந்தும் வரிசைப்படுத்தியது போன்று பல் வரிசையும், குளிர்ந்த நோக்கும், மடப்பம் பொருந்திய சொல்லும் உடையவரான அந்த ஆயமகளிர், காதுகளிலே பொன்னால் செய்த மகரக் குழைகளையும் அணிந்து கொண்டிருந்தனர்.

ஏறுகள் திரண்டிருந்த தொழுவோ ஒரே புகைப் படலத்தில் இடையாலே விளங்குகின்றது. பெருமழை பெய்து எங்கும்

வெள்ளமான காலத்திலே, மலைக்குகையிலே சிங்கமும் இறையும் யானைகளும் முதலைகளும் ஒருங்கே சேர்ந்திருந்தால் எப்படியோ, அப்படிப்பட்ட ஆரவாரத்துடன் எருதுகள் யாவும் பயங்கரமாகச் சுற்றிச் சுழன்று திரிந்தன. ஓர் எருது கருமை நிறமாக வெள்ளைக் கால்களுடன் காணப்பட்டது. மற்றொன்று அந்தி வானம் போலச் சிவந்த உடலில் புள்ளியுடன் விளங்கிற்று. மற்றொன்று சிவனணிந்த பிறை போல் வளைந்த கொம்புடையதாயிருந்தது. இவற்றோடு வேறு பலவும் ஒன்றோடொன்று முக்காரமிட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

அத்தொழுவினுள், அவ்வேறுகளைத் தழுவிப் பற்றி வெற்றி கொள்ள விரும்பிக் குதித்த ஆயரின் நெஞ்சை, அவை தெரிந்து, தம் கொம்புகளால் குத்தின. அவ்வாறு அவ்வேறுகள் குத்தின காட்சிகள் பயங்கரமானவை! இறைவனின் மார்பிலே ஆடிய சிவந்த மாலையைப் போலப், பகையான எருதுகளை விரும்பிச் சென்று போக்குவனவாகிய ஏற்றினங்கள், குருதி தோய்ந்த கொம்புகளிற் குடர்களைச் சுற்றியிருக்க விளங்கின. அப்படி நின்ற ஏற்றின் முன்னர், அஞ்சாது சென்று நின்று, அக்குடரை வாங்கித் தன் வயிற்றிலே இடுபவன்றன்னைப் பார். சிவந்த நாகத்தை ஒருவன் இரண்டு கைகளிலும் பற்றிக் கொள்ள அந்நாகை முன்று வடமாக நாற்கின்றவனைப் போலத் தோன்றுகின்றானே! அவன் பெருமைதான் என்னேடி!

போர்க்குணம் உடைய ஏற்றின் கழுத்திலே பாய்ந்து, அதிலிட்ட மாலைபோலே தழுவிக் கிடப்பவனைப் பாரடீ! அவன் எருமைத் திறக்கு உரிய செயலன்னவோ! எனவே, இனி அவன் அதை விடமாட்டான் - தோழி! இதோ இஃதொன்று கண்டாயோ? இவன் ஒருவன், கோவனத்தாயர் மகன் அல்லனோ! மறையேற்றின் மேலிருந்து ஆடவாட்டுத் தெப்பத்திலிருந்து அதனைத் தள்ளுவதுபோல், ஏற்றின் மேலிருந்து தழுவிக் கொண்டிருக்கின்-றானோ? இவன் தன் முயற்சியைக் கைவிட்டான்!

பார்த்துக் கொண்டிருப்பவளே! காற்று போல வந்து

நிறைந்த காரி ஏற்றை பலரும் அஞ்சி பொருதுகின்ற காலத்திலே முழுவதும் வளையடங்குமாறு குத்தி அதன்மேல் தோன்றி நிற்கும், பொதுவனின் சிறப்பைக் காணடீ! எருமை ஏற்றிற்கு உரியோனா-கிய கூற்றுவனின் நெஞ்சத்தைக் காலாலுதைத்துச் சீற்றமோடு சிவனார் அந்நாளிற் பாய்ந்தபோது, இப்படித்தானிருந்தாரோ? அதைக் கண்டு, என் நெஞ்சமும் நடுக்குற்றதேடீ!

புள்ளி செறிந்த வளைய வெள்ளை ஏற்றைத் திங்களிலே மறுப்போலத் தழுவி ஒருவன் நிற்பதைக் காணடீ! இவன் ஒருவன்! அட்டனம் உடைய ஆயர்மகன் அல்லனோ!

கட்டுக்கடங்காத வேகத்துடன் வெகுண்டதாகத் தன்மேற் சென்ற சிவந்த ஏற்றினைச் செவியடியாற் பற்றிக் கொண்டு அதனைப் புறமிட வென்று நிற்கும் காயாம் பூக்கண்ணி சூடியவனைப் பாரடீ! பகைவர் விடுத்த கூந்தற் குதிரையை வாயைப் பிளந்து கொன்ற காலத்திலே, நம் மாயவனும் இப்படித்தான் இருந்திருப்பானோ? என்று என் நெஞ்சம் நடுங்குகின்றதடீ!

இப்படியாக, அங்கே கரிய புலிக்கூட்டமும், பெருங்களிற்றினமும் மாறுமாறு தம்முள் புரண்டு புரண்டு போரிட்டன போல, ஏறுகளும் பொதுவரும் போரிட்டனர். ஏறு தழுவி வெற்றி கொண்ட பொதுவரனைவரும் ஒருங்கே தொழுவை விட்டு வெளி வந்தனர். அந்த மள்ளர், அங்கே மயிற்கழுத்திலே புரளும் அழகிய மணி நீலத்தையும் மாறுபடும் மையுண்ட கண்ணினாளை, அவர் காதல் கொண்ட மகளிரும் மைந்தரும் காதல் பெருக்காலே மன வலியுற்றுப், பூந்தாதாகிய தாது எருவாக வீழ்ந்து கிடக்கின்ற மன்றத்திற் சென்று ஒருவரையொருவர் தழுவியாடும் கூத்தினை ஆடுகின்-றனர். அங்கே யாமும் சென்றாடுவோம் வா' வென ஒருத்தி அழைக்க மகளிர் இருவரும் அங்கே சென்றனர்.

"கொல்லேற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை மறுமையிலும் ஆயமகள் தழுவமாட்டாள்."

'அஞ்சாத வீரராகக் கொல்லேற்றைத் தழுவக் கொள்பவரை யல்லாமல், அத்தகைய நெஞ்சில்லாதவர் தழுவுவதற்கு அரியன ஆயமகள் தோள்கள். அவர்கள், ஏன் வீணே காமத்தால் உயிர் துறந்து நைவதற்கு முயல்கின்றனர்?"

'காற்றுப் போல போய்வருவது உயிர்' என்றறியாமல், உயிரைக் காவல் காக்கும் அச்சங்கொண்டு, ஏற்றின் மருப்பிற்கு அஞ்சிஇருக்கும் நெஞ்சினர் தழுவுவதற்கு அத்துணை எளியவோ ஆயமகள் தோள்கள்?

எம் இனத்து ஆயர் மு[illegible]றலை வேண்டமாட்டார்கள். ஆனால், கொல்லேற்றுக் கொம்பினிடையானைத், தாம் காதலிக்கும் பெண்களின் முலையிடையே போலக் கருதி ஆர்வமுடன் வீழ்ந்து தழுவினால், அவனையே தம் மகட்கேற்றவனாகக் கருதுவார்கள்.

அங்கே, குரவையை ஒட்டியே யாம் எம் மரபுகளைச் சுட்டப்பாடத் தேயாத புகழையுடைய தெய்வத்தைப் போற்றுவோமாக. மாசற்ற அழகிய கடலகத்தே பரந்து கிடக்கின்ற பழைய நாட்டை, கூறும் உரிமையோடு வந்து ஆட்சி செய்கின்ற எங்கோமானான பாண்டியன், இவ்வகன்ற உலகிலே என்றென்றும் நிலைபெற்று வாழ்வானாக!

## பாடல் - 4

(ஆயமகள் ஒருத்தி ஆயமகன் ஒருவனைக் காதலித்தாள். களவிலே அவனுடன் கூடி உறவாடினாள். அதனால் ஊரலர் எழுந்தது. அவன், 'ஏறு தழுவித் தன்னை மணந்து கொள்வானோ?' எனத் துடித்தாள். அந்த இன்பநாளும் வந்தது. வெற்றி வீரனுக்கு அவளை மணம் செய்து தரவும் இசைந்தனர் அவள் தமர். அப்பொழுது, அவள், 'இனி இவ்வூரார் என்ன சொல்லுவர்?' என்று, செருக்குடன் தன் தோழிபால் கூறுகின்றாள்.

"மலிதிரை ஊர்ந்து ...................... இவ்வுலகு
உடன்! எனவே."

விளக்கம்:-

முற்காலத்திலே கடலலைகள் மிக்குப் பொங்கி எழுந்தன. பாண்டியனின் நாட்டை விழுங்கின. அதனால் பாண்டியன் தளர்ந்துவிடவில்லை. தன் நாட்டை விரிவாக்கும் பொருட்டுத் தன்னுடன் பகைகொண்டு இருந்த சேர சோழ நாடுகளை வென்று அவற்றின் பகுதிகளைச் சேர்த்துப் புதிய பாண்டிய நாட்டைக் கண்டான். தான் வென்ற பகுதிகளிலிருந்து புலி, வில் கொடிகளைப் போக்கி, அங்கெல்லாம் கயல் கொடியினைப் பறக்கச் செய்தான். தன் ஆற்றலினால், இயற்கையின் கொடுமையையும் வென்றுவிட்ட வாடாத சீருடையவன் தென்னவனாகிய அப்பாண்டியன். அவனுடைய பழைய புகழை நிலை பெறுத்திய பல குடிகளோடு தாமும் புகழுடன் விளங்கிய நல்ல இனத்தோர்கள் ஆயர்கள். அவர்கள் எல்லோரும் ஒரு நாள் ஒன்றாகக் கூடினர்.

பனைக்கொடியோனான பலராமனைப் போல வெள்ளை வெளேரென்றிருந்தது ஒரு எருது. போர்க்குணம் மிகவும் உடையதான மற்றொன்று. திருமாலைப் போலக் கன்னங்கரேலென்றிருந்தது மற்றொன்று. முக்கண்ணனான சிவபெருமானுடைய மேனியைப் போலச் செக்கச் செவேல் என்றிருந்தது இன்னொன்று. கடல் கலங்கச் சென்று சூரனை வென்ற வேலேந்திய முருகனின் நிறம் போல இளஞ்சிவப்பு நிறமுடன் விளங்கிற்று. இப்படியாகப் பொருந்தற்குணம் உள்ளனவும் இல்லாதனவுமான பல எருதுகளையும், மேகங்கள் திரண்டெழுந்து முழங்குவன போல முற்காலத்து அவை திரளும் படியாகத் தொழுவினுள் போக விட்டனர்.

அவ்விடத்திலே இஃது ஒரு வெள்ளை நிற எருது. இதன் கழுத்தை அணைத்து அடக்குபவன், மின் எயிற்று அழகியாளை இவளை மனைவியாகப் பெறுவான். தீயைப் போன்ற கொம்பினையுடைய கரிய ஏற்றினது சினத்திற்கும் அஞ்சாது, அதனைத் தழுவப் பற்றுபவன்

இந்த ஒள்ளிழையாள் வாருதலுள்ள கூந்தலைச் துயிலுகின்ற பேற்றைப் பெறுவான். கூரால் சிறந்தவாகிய கண்களை உடைய கொலைக்குணம் உடைய ஏற்றைத் தழுவுபவன், மான்பிணை நோக்குப் போல் கண்களை உடைய இந்த நல்லவளைப் பெறுவான். கொலைய வலிமையுடைய செவலை எருதை அஞ்சாது சென்று அடக்குபவன், வரி பொருந்திய இழையும், வேய் போன்ற தோளும் உடைய இவளுடன் துயில்தலைப் பெறுவான்".

என்று, நல்லாயர், தமக்குரிய முறைப்படி அறிவித்து, விண்மீன்கள் சூழ விளங்கும் மதிபோலத் தத்தம் மகளிரையும், தோழிப்பெண்கள் சூழப் பரண்களிலே ஏற்றி நிறுத்தினர்.

அப்பொழுது பறைகள் மிகுந்த ஓசையுடன் முழங்கின. பலரும் ஆரவார ஓசை செய்தனர். குறையாத வலியுடைய பொதுவர்கள், ஏறு தழுவக் கொள்ள எதிராகக் காத்து நின்றனர். புகைவலம் விடப்பட்டு நின்ற ஏறுகள், இடியேறு பறை முழக்கம் முதலியவற்றையால் சினந்து, அப்பொதுவர்கள் மேலே சீறிப்பாய்ந்தன. (இந்தக் காட்சியை ஒருத்தி தன் தோழிக்குக் காட்டி விளக்குகிறாள்)

ஒரு மாட்டின் மீது தாவி ஏறிய ஒருவன்,

மேலே இருப்பது மிகவும் கடினமாயிருந்ததால், அங்கிருந்தும் இறங்கி, மெல்லச் சென்று, அந்த மாட்டின் கொம்புகள் வேல் நுனி போலக் கூரியவாய் இருந்தும் அஞ்சாதவனாக, அந்த வெள்ளையானின் கழுத்திலே பாய்ந்து அணைத்துத் தழுவினான். அவனை அண்மையிலிருந்த இளங்காரி இடைவிடாது பார்த்தும் தோற்றத்தைப் பாரடி! நிலவை விழுங்க முயன்ற பாம்பினை ஒருவாக்கும் நீல நிற வண்ணனைப் போல் இருக்கின்றதன்றோ!

எழுந்தெழுந்து வந்த பலரும் அதிர்ந்ததிர்ந்து உடனே ஓடப் போமாறு, எலும்புகள் முறியவும், குடல்கள் சரியவும் குத்திப் பின்னர் தன் கொம்பின் வலிமை அழியுமாறு தழுவக்

(தாண்டிருந்தவனையும், அங்குமிங்குமாக ஆட்டி அலைத்துக் குத்தி உருத்தும், சினம் இறையாத அந்த ஏற்றைப் பார்த்தாயோ! வெகுளுதல் வருவதற்குக் காரணமான புகையைக் கையாலே எடுத்துவரக் கண்ட கொல்களிறு, அதன் ஊடைக்குட்படாமல் வெருண்டு விலகித் திரிவது போலாகின்றதன்றோ?

ஏறு தழுவும் ஆற்றலும் ஆசையும் உடையவனாயிருந்தாலும், அந்த முறையறியாது சென்ற ஒருவன், புகர் நிற ஏற்றைத் தழுவ முயன்று, இயலாது சாய்ந்து நிலத்திலே வீழ்ந்தான். அவன் நிலையைக் கண்ட அந்த எருது, தன் முன்னே புண்பட்டு வீழ்ந்தவன் ஆதலின், அவன்மேல் செல்லாது திரும்பிவிடும் தோற்றத்தைக் காணீர்! மிகுந்த கொடும் போரிலே, வாள் எல்லையில் வந்து அகப்பட்ட ஒருவனைக்கூட, 'என் நிலைக்குத் தகுதியற்றவன் இவன். இவனைக் கொல்லேன்' என விட்டுச் செல்லும், மறவர் தலைவனைப் போன்றிருக்கின்றதல்லவோ?

கொம்பு, மார்பிலே படுதலை மார்பு கொடுத்து ஏற்றுக் கொள்பவர் சிலர். கொம்பின் மேலே பாய்ந்து ஏறுபவர் சிலர். கொம்பினிடையிலே புகுபவர் சிலர். 'ஏறு என்னை வெல்லேன்' என்று சொல்பவர் சிலர். இப்படியாகப் பொதுவர் பலரும் அங்கே விளங்கினர். ஏறுகளைப் பெருது பணிப்பப் பொருதற்கு முயல்பவரைத் தடுத்து நிறுத்த முயல்வார் சிலர். அவரையும் விலக்கி விலக்கி அவர் சென்று தழுவுவர். ஏறு தழுவுதலினால் முறிந்து முறிந்து, அற்றுப் பறந்த தசைகள், எங்கும் பரவிக் கிடந்தன.

இடி முழக்கம் போன்று ஏறுகள் முக்காரமிட்டு முழங்கின. வாத்தியங்கள் ஆரவாரித்தன. இத்தன்மைகளால், அத்தொழு, துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் இடையே நடந்த பாரதப் போர்க்களத்தைப் போலப் பயங்கரமாக விளங்கிற்று.

தோழி: தொழுவினின்று விட்ட ஏறுகள் எல்லாம் மேய்ச்சலுக்குப் போக, அமையாத சிறும் கண்களும் அழகும் உடைய ஆயமகளிரும் மைந்தரும், வளமிகுந்த ஓரிடத்தே

சென்று தழுவக் குரவையாடுவர். பொதுவனுடைய கொல்லேற்றுக் கொம்பு வருச்செய்த மார்பனைப் போற்றிப் பாடுவோம் வாருங் களடீ' என்றாள் தலைவியிடம்,

தலைவி: நெற்றிச் செவலையின் ஆற்றலை அழித்தவனின் பரந்த மார்பிலே, முன்பு இகழ்ந்தவனின் கண்கள் சாயுமாறு, யான் தழுவாது அமைந்திருக்க மாட்டேன். ஆய்ச்சியர் அலர் எடுக்கட்டும். இந்த ஆயர் மகள் அதனை இனிப் பொய்யாக எண்ணவே மாட்டாள்.

தோழி: நமையெல்லாரும் ஒருங்கேயாடும் இக்குரவைக் கூத்தினுள், நம்மை அருக்கினான் போலப் பார்த்து, நமக்கு வருத்தமுறும் நோயைச் செய்தானே, அது கருங்கண்ணனுடைய கொலை ஏற்றைத் தழுவ யான் உன்னைக் கைக் கொண்டேன்' என்னும் குறிக்கு அல்லவோ? பாரடீ அந்த ஆயர் மகளை!

தோழி: ஒத்த இழையணியுடையவளே! பாறையன்ற தொள்ளுதல் அரிதாக நின்ற கொல்லேற்றை, கரியவன் திமிலிற்கு அஞ்சாது பாய்ந்து பொதுவனுக்கே, அவருடன் எம்மவரும் நின்னைக் கொடுக்க முறை செய்தனர். அவர் தூற்றிய ஊராரின் உச்சியிலே மிதித்தது போலல்லவோ செய்தனர். இனி ஏனடீ நீயும் வருந்துகிறாய்?

கெடாத உருமேற்றை (இடி)யும் அடப் பெரிது முழங்கும் முரசினையுடைய பாண்டியனுக்கே இவ்வுலகு சேர்வதாக!

அவனுடைய ஒரு மொழியையே அனைத்துலகும் கேட்பதாக! இவ்வாறு உரைப்போம். பழையதாகிய கதிரையுடைய சக்கரப் படையானான திருமாலைப் போற்றுவோம். நீயும் வருக.

குறிப்பு: குரவை முறையிலே, மணம் உறுதிபெற்ற ஆயர் மகளிர், நாட்டையும் மன்னனையும் வாழ்த்தித் திருமாலை வழிபடச் செல்கின்றனர்.

## பாடல் - 5

( ஆயர்கள் ஏறு தழுவும் விழாவிற்கு ஏற்பாடு செய்யும் முன்னர், 'நம் அரசனான பாண்டியனின் வாழ்வு பெருகுக' என தெய்வ வழிபாடு செய்கின்றனர். மன்னர் ஏறு தழுவுதல் முறையே நடைபெறுகிறது. காதல் கனியத் தலைவனின் ஆற்றலைக் கண்டு களிக்கின்றாள் ஒரு தலைவி. இருவரும் மணம் உறுதியென்ற மன்னர், அனைவரும் மீண்டும் பாண்டியனை வாழ்த்தி குரவையாடுகின்றனர் )

"அரைசு படக் . . . . . . . . . .
இமையத்து உம்பரும் விளங்குக! எனவே"

### விளக்கம் :-

மாற்றாரின் அரசுகள் விரும்பியவாறு அவரைக் கொன்று, அரச நெறியாலே அவர்கள் செல்வங்களைக் கொண்டு வரும், தலைமை மிகுந்த சிறப்புகளை உடையவன் பாண்டியன்! அவனுடைய பழமையதாகிய குடிக்கு உரியதென்று கூறப்படும் பாண்டிய மண்டலத்து விளைவுகளும், கடல் தரும் முத்தும், மறையும் என்றும் குறைவின்றிப் பெருக வேண்டும். முரண் மிகுந்த அரசர்களிடையே, சீர் மிகுந்த சிறப்பானவன் அவன். அவன் வாழ்க! என உள்ளத்திலே கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புகளைச் செய்து, ஆயர்கள் வழிபட்டனர். புகழ்பெற்ற பாண்டிநாட்டுக் குடிகளில் ஒருவரான ஆயர், அதன் பின் ஆர்வமுடன் ஏறு தழுவுதல் விழாவுக்கான அனைத்தையும் செய்தனர்.

திருமாலின் சங்கைப் போல நெற்றியிலே சுழிக

வெள்ளைச் சுட்டியுடன் விளங்கிய கரிய ஏறு ஒன்று. பலராமன் மார்பிலே சிவந்த மாலை விளங்குவது போலச் சிவப்பு மறு விளக்கும் வெள்ளை நிற ஏறு ஒன்று. சிவபெருமானின் நீலமணிக் கழுத்தும் போலத் தன் கழுத்தும் கரிய நிறம் கொண்ட ஏறு ஒன்று.

ஆயிரங்கண் இந்திரன் போலப் பல புள்ளிகளுடன் விளங்கிய புகர் நிறத்து எருது ஒன்று. முருகன் அணிந்த வெள்ளைத் துகில் போல வெள்ளைக் கால்களையுடைய சிவந்த ஏறு ஒன்று. இவற்றுடன், இவை போலக் காலனது வலியுடைய பிறவும் ஒருங்கு சேரத், தொழுவுள் ஏறுகளைப் போகவிட்டனர். ஊழியிறுதியிலே, தீயும் கணிச்சியும், சூலமும், கூற்றவனும் உயிர்களை வாங்கச் சுழன்று சுழன்று ஒன்றாகத் திரியுமாறு போல, அவை எல்லாம் தொழுவுள் சுழன்று சுழன்று சுற்றிக் கொண்டு இருந்தன.

அவ்வேளையிலே மழைக்காலத்து இடிமுழக்கம் போன்று வாத்தியங்கள் சேர்ந்து ஒலித்தன. வானிலே மேகக்கூட்டம் சென்றது போலப் புகைப்படலமும் எழுந்தது. மாலையணிந்த ஆயர் மகளிர் வந்து நிரை நிரையாக நின்றனர். பொதுவர்களின் போர்த்திறம் மேவும் ஆரவாரத்தால் எழுந்த புழுதிப்படலம் வானை எழுந்து முட்டியது. அவர்கள் தொழுவுள் சீறிப்பாய்ந்தனர்.

அவ்வாறு பாய்ந்து, ஏற்றின் கொம்பைப் பற்றி மார்புடன் தழுவிக் கொண்டனர் சிலர். கழுத்திலே இறுகப் பற்றிக் கிடந்தனர் சிலர். திமில் ஒடியும்படி தழுவினர் சிலர். தோளுக்குள் கழுத்தைப் புகவிட்டுப் பிடித்தனர் சிலர். கொம்புகள் தம் உடலில் படுவதை அஞ்சாது ஏற்றுக் கொண்டனர் சிலர். இவ்வாறு ஆயர் ஏறு தழுவுதலைத் தொடங்கியதும், ஏறுகளும் சும்மாயிருக்க வில்லை. தம்மைப் பிடித்தவர்களை, ஒவ்வொன்றும் அலைத்துக் குத்தியும் வதைத்தன. அந்த நிலையிலே, முதலில் சென்றவனைக் குத்திக் கொன்றுவிட்டுப் பின்னும் யாவரும் அருகே செல்ல அஞ்சுமாறு செல்லும், செவலையைப் பாரடி! சாவுவேளை நெருங்கியவரிடம் கூற்றம் நெருங்குவது போலல்லவோ அது உயிரைக் கொள்ள நெருங்குவதும் தோன்றுகின்றது!

தன்னைத் தழுவியவனைச் சாவுமாறு குத்திய செங்காரியானது, தன் கொம்புகளின் மேலே அவனைத் தூக்கி வைத்து ஆடுகின்றது. அதன் கழுத்து மணியைப் பாரடி!

மருதியாலே தோய்ந்த அவற்றை, முதைய வாழ்ந்த நறவம் பூவினை வண்டினம் சென்று மொய்ப்பதையும் காணடீ!

இடையே பாய்ந்து கழுத்தைத் தழுவிக் கொண்டவனோடு பரணின் மீதும் தாவிப் பாய்கின்ற வெள்ளையைப் பாரடீ! கரும்பாம்பினால் சிறிதே விழுங்கப்பட்ட சந்திரன் வானத்திலே செல்வது போன்று அது ஓடுவதையும் காணடீ!

இவ்வாறு ஏறுகளும் பொதுவரும் தம்முள் கலந்து போரிட அத்தொழுவானது, இருபெரு வேந்தர்கள் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்க்களம் போலக் தோற்றமுடையதாகக் காட்சியளித்தது.

(தோழி, இத்தகைய தொழுவைக் காட்டி நிகழ்ச்சியைக் கூறினாள். இதன்பின், தன் நெஞ்சுடன் சொல்வது போலத் தலைவி கேட்கக் கூறுகிறாள்)

கழுத்து முழுவதையும் மறைக்கின்ற திமிலுடன் வாழும் நல்லேற்றைக் கொண்ட, பொதுவனின் முகத்தை நோக்கி நோக்கி, இந்த ஆயமகளின் கண்களும் இமையாதிருக்கின்றனவே!

நறுநுதலாளே! என் கூந்தலிலே கமழ்ந்த வெண்ணெய் மணம் ஒருநாள் நீங்கி, முல்லை மணம் வீசுவதைக் கண்டதும், என் சுற்றத்தார் சினந்து எழுந்து கடிந்து கொண்டனரே! அஃது இச்சொல்லேற்றுச் சினம் போலிருந்ததடீ!

திருத்தி நீண்ட கூந்தலையுடையவளே! இஃதோர்சொல் இதனையும் எண்ணுவாய், எருமை இனத்தையுடைய ஆயர் மகளோடு யாம் உறவதற்கு எம் சுற்றத்தார் கூடப் 'பொதுவர்கள்' பொறாத அயலார்களின் கண்கள் அனல் கக்குவது ஏனோடீ!

தலைவி: ஒள்ளிய நுதலாய்! என் அன்னை என்னைக் கண்ணை உறுத்து நோக்கி வருந்தினாள். அதனைக் கண்ட இவ்வூர், 'மலரணி கண்ணிப் பொதுவனோடு தொடர்புடையேன் யான் என்றெண்ணி, அலர் செய்துவிட்டது. அது தான் ஏனோடீ!

ஒள்ளிழாய்! அன்று, பசுத்திரளையுடைய ஆயர் மகளுக்கு

நின்னைக் கொடுப்பேன்' என்றனரே? இன்று என் சுற்றத்தார் என்னைக் கொடுப்பதற்கு எண்ணமே இருக்கிறது! தன்மேல் மிக்குச் சென்ற செங்கனிக் கொம்புடையாலே அவன் புகுந்து தழுவினானே, அப்பொழுதே என் நெஞ்சமும் அவன்பால் சென்று விட்டதே!

'நீங்காத அருவிகள் முழங்கும் இமயத்திற்கு வடபால் உள்ள நாடுகளையும் வென்றுகொண்டு, இன்னிசை முதன்னான நம் பாண்டியன், சிறப்புற்று வாழ்குவானாக!" என்று முழங்கும் கடற்பரப்பாலே, அரவணையில் துயிலும் வெற்றிச் சக்கரத்தினை உடைய திருமாலைப் பாடிப் பாடிக் குரவையாடுவோம் வாடீ! ..

## வினாக்கள்

1. எட்டுத்தொகை நூல்களுள் பாலைத்திணையை முதன்மையாகக் கொண்டு பாடப்பட்ட நூல் எது?

2. தொகை நூல்களுள் முதன் முதலாகப் பதிப்பிக்கப்பட்ட நூல் எது?

3. கலித்தொகையைத் தொகுப்பித்தவர் யார்?

4. கலித்தொகையின் வேறு பெயர் யாது?

5. குறிஞ்சித் திணையின் முதல், கரு, உரிப்பொருள்கள் பற்றி எழுதுக?

6. குறிஞ்சிக்கலியில் 'இமயவில் வாங்கிய' எனத் தொடங்கும் கபிலர் பாடலின் வழி அறியலாகும் கருத்துக்களை எழுதுக?

7. 'அறு கழுவுதல்' என்ற சொல் தற்காலத்தில் எவ்வாறு வழங்கப்படுகிறது?

8. ஏறுதழுவும் நிகழ்வை முல்லைக்கலி கொண்டு விளக்குக?

அலகு - 4

## அலகு - 4

## அகநானூறு

### நித்திலக் கோவை - 331 - 340 பாடல்கள் வரை

அகநானூறு அகத்திணை சார்ந்த நூல் எனியதுடன் இதில் நானூறு பாடல்கள் அடங்கியுள்ளதால் இதற்கு 'அகநானூறு' என பெயர் வழங்கப்படுகிறது. இதில் பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இதனுடைய சிற்றெல்லை 13 அடியாகவும் பேரெல்லை 31 அடியாகவும் உள்ளன. அகத்தொகையுள் நீண்ட பாடல் -களைக் கொண்டமையால் இதனை 'நெடுந்தொகை' என்றும் கூறுவர்.

இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடி கிழார் மகனார் உருத்திரசன்மனார். இதனைத் தொகுப்பித்த மன்னன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியார். இவற்றை மூன்று பகுதிகளாக பிரித்துள்ளனர். அவைகளாவன.

1. களிற்றியானை நிரை - (1 - 120)
2. மணிமிடை பவளம் - 121 - 300
3. நித்திலக்கோவை - 300 - 400

இதில் நமக்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது நித்திலக்கோவையால் 331 பாடல் முதல் 340 வது பாடல் வரை ஆகும்.

### 331 - பாடல்

பாடியவர் : மாமூலனார்

திணை : பாலை

துறை : தலைமகன் பிரிவான் கண் தோழிக்குத் தலைமகள்

சொல்லியது.

('என்றும் மறியேன்' என்று தன்பால் உறுதி தன்னைத் தெளிவித்துக் கூறிய காதலன் மறந்து போயின காலத்திலே அதனுடைய பிரிவினால் வந்துற்ற துயரத்தினைப் பொறுத்துக் கொள்ள மாட்டாது போயின தலைவி 'தலைவன் தலைவி மீது அன்பற்றவனாயினான்' எனக் கூறி வருந்துகின்றதாக அமைந்தது இப்பாடல்)

"நீடு நிலை அரைய ..... அருஞ்சுரம் இறந்தே!"

விளக்கம் :

தோழி நீண்ட நிலையாகிய அடிமரத்தினையும், சிவந்த தளிர்களையும் கொண்டன இருப்பை மரங்கள். அவற்றிலே யானைத் தந்தங்களில் கடைந்து அமைத்தாற்போன்ற வெள்ளிய பூக்கள் மலரும். ஆடுகள் பறைகொட்டினாற் போலப் பறவா நின்ற குடம்பைகளையுடைய வெண்குருகுகளின் கூட்டமானது கிளைகளினின்றும் உதிர்ந்த அப்பூக்களை உண்ணும். அவை உண்டது போக எஞ்சிக் கிடப்பவற்றைப் பசுமையான தழையுடையாளை அணிந்தவரான எயினர் மகளிர், கணுக்கள் திரட்சியுற்ற நீண்ட மூங்கிற் குழாய்களிலே தொகுப்பார்கள். தொகுத்தவற்றைக் குன்றிடத்தவரான சிற்றூர்த் தெருக்கள் தோறும் சுற்றி ஆற்றித் திரிவர். அத்தகைய அழகிய குடியிருப்பினை யுடையவரான சிற்றூர்களைக் கொண்டிருக்கும் மலைநாடு பலவும் பாற்பட்டுக் கழிய, அவர் சென்றார்.

அரிதான இசைத் துறைகளிலே முதிர்ச்சியும், கரிய தண்டினைக் கொண்ட சிறிய யாழினையுமுடையவர் பாணர். அவர்கள் என்றும் ஆரவாரித்துக் கொண்டிருக்குமாறு அவர்கட்குப் பல அணிகலன்களையும் அளித்தவனாக, நாளோலக்கத்தே வீற்றிருப்பவன். கள்ளின் மகிழ்வினை

உடையவனாயிருக்கும் நிதியன், அவன் வேளிரோடு போரிடுதலின் பொருட்டாகத் தன் உறையினின்றும் கழித்த வாளின் வாயினைப் போன்ற கொடுமையுடையதான வறண்ட சுரநெறியினைக் கடந்து சென்றனர் அவர்.

அவ்வாறு சென்ற அவர், நம்பால் அன்பற்றவரே ஆவர். ஆதலின் இனி யாது செய்வோமோ!

## 332 - பாடல்

பாடியவர் : கபிலர்

திணை : குறிஞ்சி

துறை : இரவுக்குறிக் கண் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

( இரவுக்குறியிடத்தே தலைவனுடன் தலைவி சந்தித்துக் களவாகக்கூடி மகிழ்ந்து வருகின்ற காலத்தே ஒருநாள் அவன் வந்து ஒரு பக்கமாக ஒதுங்கியிருக்கவும், அவள் தன் தோழியிடத்தே தான் அவனிடத்துக் கொண்ட காதலை உவைப்பாள் போலச் சொல்லுகின்றாள். இதனைக் கேட்கும் அவன். 'வரைவாலேயே தலைவியை மணந்து அவளுடன் மாறுவற்ற இன்ப வாழ்விலே நினைப்பதனை நாடுவான்' என்பது அவளுடைய நோக்கமாகும். இது துறைப்பட அமைந்தது இச்செய்யுள்)

"முனைவளர் முதல ........
........ தலைநாள் போன்மே!"

விளக்கம் :-

நிறம் விளங்கிய களிறானது, தன் இனத்துடன் கூடியதாக முளைகள் வளர்ந்திருக்கும் தாறுகளிலேயுள்ள மூங்கில் கணை ஒடித்துத் தின்றபின், நீர் வேட்கையுடையதாய்த் துறையிடத்தே

செல்லும் அவ்விடத்தே, தன் உருவத்தைப் பார்த்துத் தன்னைத் தாக்குவதன் பொருட்டாகப் பதுங்கிய, போரிடும் மாறுபாட்டைக் கொண்ட புலியானைப் பொருது, அது கொல்லும். கொன்றபின், உண்மையான முறையாலே குருதி தோய்ந்து செந்நிறமாயுள்ள தன் கொம்பினை, மிக்க மழையாலே கழுவிக் கொண்டதாகக், கற்களையுடைய மலைச்சாரலிடத்தே மெல்ல மெல்லச் செல்லும், கொற்றங்கொண்ட தன் பகையானைக் கொன்றழித்த தன்மையுடனே மதங்கொண்டதாகி, அம்மதநீரிடத்தே யாழொலி போல இசைக்கும் அறுகாற் பறவையான வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கச் சென்று, அது தன் பிடியுடனே கூடி இன்புறும். அங்ஙனம் இன்புற்றதாக, அது வாழை மரங்களையுடைய மலையிடத்தே உறங்கிக் கொண்டு இருக்கும். அத்தகைய நாட்டிற்கு உரியவன் நம் தலைவனாவான்.

அவன், நின்னுடைய உயர்விற்குத் தகுதியான தன்மையன். என, நீ அன்பினாலே உரைத்தது. உன் உள்ளம் அமைதி கொள்ளும் படியாகக் கூறிய இனிதான சொற்கள் எல்லாம் இந்நாள் வாய்மையே ஆயின. விரும்பியவருக்கு அமுதத்தைப் போன்றதாக விளங்கும் இனிய மணங்கமழ்கின்ற தாரினையுடைய அவன் மார்பிடத்தே, வண்டும் இடையாலே பொருந்தாத, செறிவுற்ற முயக்கமும், அவன் பேரில் கொண்ட நீங்காத காதலும் முதலில் அவனோடு கூடிய அத்தலைநாளினைப் போன்றே என்றும் சிறப்பு நின்றன. தோழி! நீ வாழ்வாயாக!

உள்ளுறை பொருள் :-

"களிறு உழுவை .... சிலம்பல் துஞ்சும்"

தலைவன் அலர் தூறுவாரின் ஆணவத்தை அடக்கிக் களவினாலே வந்துற்ற மாசினைப் போக்கித் தலைவியை மணந்து சுற்றமும் நட்பும் கொண்டாட வளமிக்க இல்வாழ்வாலே தலைவியுடன் கூடியிருந்து இன்புறுவன் என்றதாம்.

## 333 - பாடல்

பாடியவர் : கல்லாடனார்

திணை : பாலை

துறை : பிரிவிடை வேறுபட்டுத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(தலைவனைப் பிரிந்திருக்கிறாள் தலைவி ஒருத்தி. குறித்த காலம் வந்தும், அவனை வரக்காணாத அவளுடைய வாட்டம் மிகுதியாகிறது. அவளுடைய துயரினைத் தீர்ப்பதாக அவளுடைய தோழி, 'அவன் விரைவில் வருவான்' எனக் கூறி அவளைத் தெளிவாக்க முயலுகின்றனள். அப்போது தலைவி உரைப்பதாக அமைந்த செய்யுள்)

"யாஅ ஒண் தளிர் . . . . . .
காதலர்ப் பெறினே!"

விளக்கம்:-

தோழி! நீ வாழ்க. 'யா' மரத்தினது ஒளியுடைய தளிரிலே அரக்கின் பொடியினைத் தூவினாற் போல, நின் மேனியிடத்தே அழகிய பசலை பரக்க, வருத்தம் பெரிதாக உடையவளாகி, நின் காதலரான அவர்மாட்டுப் பழிச் சொற்களைக் கொண்டு தருதலையும் நீ விரும்புகின்றனை! அவ்விடத்தே நின்னுடைய துன்பத்தின் மிகுதியைச் சென்று எவரேனும் அவருக்கு உரைப்பரேல், அச் சொற்களைக் கேட்டு அவரால் தாங்கியிருத்தலும் இயலுமோ? செய்யப்படும் பொருள் முற்றுப் பெறாதேயாயினும், இன்பப் பயன் அழியுமாறு, அப் பொருளையே மேலாகக் கொண்டு, அவர் அங்கே தாழ்த்து வருபவரும் அல்லர் காண்!

வேனிற் காலத்திலே, கோடைக் காற்றினாலே குருத்து இற்று உதிர்ந்து போயின வருத்தத்தினைச் சொல்லமாட்டாதாய்

துணையணையுடைய வெண்மையான தலைப்பக்கம் கூம்புதலுற்று வற்றிப் போயிருக்கும் இளம் பனையாணைப் போலத், தம் கைகளை உயர்த்து எடுத்தனவாக, யானைகளின் பெருந்திரட்டம், மேகத்தை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கின்ற மலைப்பகுதியானையும் கடந்து, தொலைவாகச் சென்றவர் நம் காதலர். எனவும் தாம் சொல்லிச் சென்ற நாளின் எல்லை கடந்து நாட்கள் இடைப்பட்டுப் போகாமல், நம்மவரான அவர் வந்து சேர்பவரும் அவர்.

இவ்வாறெல்லாம் பயனை வாய்க்கும் கொள்கையுடையயாகி, இனிமை திரியாது சொல்லுகின்ற நின்னுடைய வாயின் இனிதான மொழிகள், நல்ல உண்மையாகவே ஆகுக. நீ கூறியபடியே அவர் வருவாராயின் அதுவும் நல்லதே யாகும். அல்லாமல் - வாராதவராக, எம் காதலர், அவர் சென்றிருக்கும் அவ்விடத்தவரே யாயினும், அவர் சென்றுள்ள நாட்டிடத்தே செய்தற்கு மேற்கொண்ட செயலை முடித்துக் கொண்டவராகி, மீண்டும் வருவதற்கான உள்ளத்தையும் உடையவர் என்றாலும் அங்ஙனம் வந்தடைதல் இல்லையால் வந்ததையும் என்னும் பெரிதான விருப்பத்துடனே, அவரிடமிருந்து தூதாவது வரப்பெற்றனமாயின், இவ்விடத்து நம் பசலை மறைந்தொழிதலும் எளிதாகுமே!

## பாடல் - 334

பாடியவர் : மதுரைக் கூத்தனார்

திணை : முல்லை

துறை : வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகனுக்கு சொல்லியது.

(வேந்தனுக்குப் படைத்துணையாகச் சென்று பாசறையிடத்தே தங்கியிருக்கின்றான் தலைவன். அவன் மேற்கொண்ட வினையும் முடிந்தது. பகைவரும் பணிந்து திறை செலுத்தி முன் வந்தனர். அவன் திரும்புவதாகக் குறிப்பிட்டிருந்த கார்காலமும் தொடங்கிவிட்டது. எனவே தன் காதலியைக் காண்பதற்கான ஆர்வம்

மிகுதியாக எழ, அவன் தன் பாகனிடத்தே சொல்லுவதாக அமைந்தது இச் செய்யுள்)

"ஓடா நல்லேற்று . . . . . . . . .
. . . . . . . . . ஆய்சிறு நுதலே!"

ஊக்கம் !-

பாகனே! மேகங்கள் ஒலிமுழங்கும் கடலிடத்தே நீரினை முகந்து எழுந்ததான ஆரவாரத்துடனே, கருமையான மறையானைகளின் கூட்டத்தைப் போன்று சேர்ந்து, வானில் திரண்டுள்ளன. பெரிய களிற்றின் பருத்த கையினைப் போலப் பெயலும் காலூன்றிவிட்டது. வளைந்த முன்னங்கையினை உடைய மகளிர் விருப்பமுடன் விளையாடுகின்ற கழங்கினைப் போன்று விளங்கும் பனிக்கட்டிகளோடு, வரையற்ற துளிகளைச் சிதறி, மழை பெய்வதனையும் தொடங்கிவிட்டது.

புறங்கொடுத்து ஓடாது, எதிரேற்று வெற்றிகொள்ளும் நல்ல வீரமிக்க கொல்லேற்றினது தோலானாலே போர்க்கப் பெற்ற வெற்றிகொள்ளும் முரசானது, 'இமிழ்' எனினும் ஒலியின் முழக்கம் செய்யப் பகைவர் நாட்டின் திறைப் பொருளையும் நாம் கைக்கொண்டனம். ஆயின்.

வானத்தினிடத்தே விளங்கும் சிறகினை யுடைய அன்னங்கள் வரிசையாகப் பறந்து செல்லுதலைப் போலக் காற்றைப் போல் செல்வது எனக் கூறப்பெறும் வேகத்தை உடைய நான்கு குதிரைகளை பூட்டிய கொடிஞ்சியை உடைய நெடிய நம் தேரானது, செல்லும் விரைவு மிகுதியாகக் கைவிடாது கூட்டமான மயில்கள் அகவிக்கொண்டிருக்கும் கார்காலத்துக் கவினைக்கொண்ட பரந்த முல்லை நிலத்தே, வலிமையான வட்டையினையுடைய உருள்களை ஈரமான நிலத்தினைக் கிழித்துச் செல்லுமாறு.

அழகிய நிறத்தால் பொலிவுற்றனவாய் அமர்த்த மையுண்ட கண்களையும், தழைத்த பலவாகிய கூந்தலையும், அழகிய சிறந்த நெற்றியினையும் உடைய தம் தலைவியைச் சென்று காணும் பொருட்டாக இப்போதே நின் தேரினைச் செலுத்துவாயாக!

## 335 - பாடல்

பாடியவர் : மதுரைத் தத்தங் கண்ணனார்.

திணை : பாலை

துறை : தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவு அழுங்கியது.

( தலைமகன் தன்னுடைய தலைவியிடத்தே மிகுதியான காதலன்பு கொண்டவன். எனினும், 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்ற நியதியை உணர்ந்த அவனுடைய நெஞ்சம், அவனை வேற்றுநாடு சென்று பொருள் தேட வருதலாற் செலுத்தி நின்றது. உள்ளம் பொருளார்வத்தாலும் பெருங்காதலாலும் அலமர அவன் பேரவல் காதலையே பெரிதாகக் கொண்டு தன் செலவினை நிறுத்திவிடுகின்றான். அவன் தன் உள்ளத்திற்குச் சொல்லுவதாக அமைந்த செய்யுள்)

"இருள்படு நெஞ்சத்து . . . . . .

. . . . . . . . கொண்டனம் செலவே!"

### விளக்கம் :-

வறுமையினாலே உள்ளமும் இருண்டு போன இரவலரின் துயரினைப் போக்கும் அருளினை மிகுதியையும் உடையவரே என்றாலும், கைப்பொருள் இல்லாதவர்களுக்கு, ஈதலாகிய அந்த அருளின் தன்மையும் இயலாததாகும். இதனை யானும் அறிவேன். ஆயினும் என்னை?

இதழ் விரிந்த மலர்களாலே நெருக்கப்பெற்ற தாரினையும், வெற்றி பொருந்திய முரசத்தினையும் உடையவன். வெல்லும் போராற்றலையுடைய செழியன், அவனுக்கு உரியது மாடங்கள் பொருந்திய மூதூரான மதுரைப் பேரூர். அப்பேரூரின் மதிற்புறத்தினைத் தழுவியதாக, நெடிதான வயலினிடத்தே வாட்டமுற்றது-யாக, குறுகலான இலைகளையும் திரண்ட அடியினையும் உடையவனான கமுகமரங்கள் விளங்கும், தொடுத்தல் அமைந்த பல மலர்களின் இதழ்களைப் பொதிந்து கட்டியமைத்த இடையணி போன்று விளங்கும். காய்த்தலைப் பொருந்திய அம்மரங்களின் எருத்துக்கள். அவ்வெருத்துக்கிடந்து பாளையும் தம் மடப்பு நீங்கிக் கழித்துபோக வனடம் உடைத்து வைத்தால் போலத் தோன்றும் வயிற்றினையுடைய பொதிகள் தோன்றும். அப்பொதிகளிடத்தே, பருவம் அடைந்ததாகத் தோன்றிய வருப்பம் வருதலையுடைய அழகினைக் கொண்ட ஆரத்தைப் போன்று அழகுடன் விளங்கும் புதுப்பூக்கள் காணப்படும். நீட்சி பொருந்திய கவரியைப் போல வண்டுகள் தேனுண்ணும்படியாக, அப்பூக்கள் இதழ் விரிதலையும் பெறும், முத்துக்களைப் போலும் வெண்மையுடைய அப்பூக்கள் பரந்து, பல கணையாளைப் போன்ற ஒளிரிய நிறத்தையுடைய ஆலங்கட்டியைப் போல, மகிழ்ச்சியை மிகுதியும் உண்டாக்குகின்ற சிறப்புடன் அழகுமிகுந்து தோன்றும் அப்பூவொடு வளர்ந்த முதிராத இளங்காயானது நீரினும் காட்டில் இனிமை உடையதாகிக், கூரிய பற்களிடையே அமுதம் ஊறுகின்ற சிவந்த வாயினை உடையவள் நம் தலைவி. ஒளிபொருந்திய வளைகளை உடைய, அந்த இளமை உடையவளையும் நம்முடன் அழைத்துக் கொண்டு நாம் சென்றோமானால்-?

களிற்றியானையானது சினம் மிகுதியுடையதாகித் தன்னுடைய கொல்லும் வன்மையுடைய கொம்பும் ஒடியுமாறு பட்ட கிளைகளையுடைய யாமரத்தினைக் குத்தி அதன் பட்டையைக்

கிழித்து, கொடுமையான வெனிற்காலத்தை இனிய தண்மையான படியானது உண்டும் படியாக ஊட்டிக் கொண்டிருக்கும். அதனால் வருத்தம் கூடி கொண்டிருக்கும் நிலமும் பாழ்ந்துபோய்க் கிடக்கும், வெம்மையானையுடைய சுரநெறியும் நடப்பதற்குக் கடத்தற்கு அரிதானது அல்லாததாகும்,

## 336- பாடல்

பாடியவர் : பாலைக் கொட்டிலார்

திணை : மருதம்

துறை : நயப்புப் பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.

பழந்தமிழகத்துத் தலைவர்கள் தம்முடைய இல்லத் தலைவியு-டன் மட்டுமே கூடி வாழ்ந்தவர் அன்று. பரத்தைமை உடையவராகவும் அவர்களுள் சிலர் வாழ்ந்தனர். ஒருவனும் இற்பரத்தையாக ஒருத்தியும், காதற் பரத்தையாக ஒருத்தியும், ஆக இருவர் இருந்தனர். அவ்விருவருள் ஒரு சமயம் இற்பரத்தை-யானவள் காதற்பரத்தையின் அழகினைக் குறை கூறியவளாகிப் பழித்தனளாம். அதனைக் கேட்டுச் சினம் கொண்ட அந்தக் காதல் பரத்தை, அந்த இற்பரத்தைக்குத் தோழியராயினோர் கேட்கும் படியாக இவ்வாறு கூறுகின்றாளாம். இவ்வாறு அமைகிறது இச்செய்யுள்.

"குழற்கால் சேம்பின் . . . . . .
. . . . . . . . வீங்கிய வளையே!"

விளக்கம் :-

குழல் பொருந்திய தண்டினையுடைய சேம்பினது, கொழுமையான மடலாடத்தையுள்ள அகன்ற இலைகளுடன் கூடிய, பாசிபடர்ந்திருக்கும் நீர்ப்பரப்பிலே, தன் இட்டியுடன்

தங்கியிருந்தது. பசியால் வருத்தமுற்ற பெட்டை நீர்நாய் ஒன்று அதன் வருத்தத்தைப் போக்குவதற்குத், தன்னுடைய அந்நாளைக்கான இரையினைத் தேடுவதற்காக எழுந்த அதன் ஆணான நீர்நாயானது, வாளை மீனைப் பற்றிக்கொண்டு போரிட்டது. அதனால், நீர்த்துறை கலக்கல் உற்றது. அதனால் துறைக்கு நீர் மொண்டு போவதற்கு வந்த மகளிர்கள், நுண்ணிய தொழில்நலம் பொருந்திய அழகிய தம் குடங்களைக் நீர் மொள்ளாது கீழே வைத்தனர். தெளிந்த கள்ளினைக் குடித்தவராகத் தம் கணவன் மாரின் பண்பற்ற பரத்தைமை உறவுகளைக் குறித்துப் பழித்துப் பாடியவராக, வளைந்த நுங்குகொத்துக்களையுடைய காஞ்சி மரத்து நிழலிலே, குரவைக் கூத்து ஆடிக்கொண்டும் இருந்தனர். அத்தகைய இனிதான பெரிய பொய்கைத் துறையினைப் பொருந்திய ஊரை யுடையவன் நம் தலைவன். தேர் கொண்டு வர வந்து சேர்ந்த, சிறிய அணிகளையுடைய அவனுடைய மகளிர் என்னுடைய நலனைச் சுட்டி ஏசுகின்றனர் என்பார்கள்!

'மிக்க சினத்தினையுடையதும், கொல்லும் தன்மையினை உடையதுமான, களிற்றியானையானது, கொல்லாது அருள் செய்தலினாலேயே, அதனைச் செலுத்தும் பாகன் நெடுங்காலம் உயிர் வாழ்கின்றான்' என்பது போன்றதே அவருடைய செயலும் ஆகும்.

அப்பெண்களும், அவர்களுடன் சேர்ந்த பாணரும், தாம் அழகு உடையவர்போலச் சொல்லுதல், முழவுகள் ஒலிக்கும் துணங்கைக் கூத்து ஆடிக் களிக்கின்ற விழாவிடத்தே, யானும் அவ்விடத்து இராதிருந்தமையினால் ஆகியதே யாகும்.

அவ்விடத்து யானும் வந்தால் ஞாயிற்றின் போக்கோடு கூடின்று திரியும் நெருஞ்சிப் பூவினைப் போல, அவனை என்னைச் சுற்றியே திரியுமாறு செய்வேன். அவ்வணம் செய்யேன் என்றால் - வெற்றி பொருந்திய வேலினையும், மழை போல மிகுந்த அம்பினையும், மேகத்தைப் போன்ற தோற்கிடுகினையும் உடைய சோழர்களது, வல்வீரர்கள் திரண்டுள்ள அரணினையுடைய வல்லத்தின் புறத்தேயுள்ள

காவற்காட்டினிடத்தே வந்தடைந்த ஆரியர்களின் படையானைப் போல, என்னுடைய கரிய சந்தினைக் கொண்ட முன்கை -யாலே செறிந்துள்ள இவ்வளைகள் சிதைந்து ஒழிந்து போவன ஆகுக.

## 337 - பாடல்

பாடியவர்: பாலை பாடிய பெருங்கடுங்கோ.

திணை: பாலை

துறை: முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்துவந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

(ஒரு தலைமகன், முன் ஒரு காலத்தே, தன் தலைவியைப் பிரிந்து, பொருள் தேடி வருதலின் பொருட்டுச் சென்று, அது காலை அவளைப் பிரிந்திருக்க மாட்டாது பெரிதும் வருந்தி மீண்டவன், மீண்டும், அவன் உள்ளத்தே பொருள் வேட்கை எழ, அவன், தன் நெஞ்சுடன் கூறிக்கொள்வதாக அமைந்த செய்யுள்)

'சாரல் யா அத்து . . . . . . .
. . . . . . . . . . . . . வருந்துவள் எனவே''

விளக்கம்:-

நெஞ்சமே! மலைச்சாரலிடத்தே விளங்கும் யாமரத்தின் கண்ணே அதன் உச்சிக் கிளைகளிலே, மாரிக்காலத்திலே துளிர்த்த தண்மையான தளிரையொத்த மேனியாளை உடையவள் நம் தலைவி. அவளின் பெரிதாக அமர்த்த குளிர்ச்சியான கண்கள் வருத்தங்கொண்டு, தம் அழகு கெடுமாறு, இவ்விடத்தே யாம் நம்மைப் பிரிந்து அவள் தனித்து இருக்கும்படியாக யாம் செல்லுதல் இனியதன்று. ஆதலால், நீ கருதும் பொருள் அவ்விடத்தே யாகுக! எனவும்,

உப்பு வணிகரின் பொதிகளைச் சுமந்து செல்லும் கழுதைகளைப் போன்று, குறும்பாறைகள் வரிசைப்படக் கிடக்கும் இடத்தினூடே, பலகாலும் தூது மேற்கொண்டு செல்லுதலையுடைய பார்ப்பானானவன், தன் மடியிலே வெள்ளிய ஓலைச் சுருளுடன் வருகின்றனன். அவன் வருகின்றதனை மழவர்கள் நோக்குவர். 'உண்ணாமையினாலே வாடிய விலாவினையுடைய இவன் கையிலே -யுள்ளது பொன்னாக இருந்தாலும் உளதாம்? என்று அவர்கள் கருதுவர் கருதி, வீணாக அவனை அப்போதே கொன்றும் வீழ்த்துவர் கையில் படையினையுடைய கையினரான, கொடுமை -யினையுடைய அம் மழவர்கள் உடுப்பதற்கான தகுதியற்ற அப்பார்ப்பானுடைய சிதைந்த ஆடையின் வறுமையினைக் கண்டும், சிவந்த கோலாகிய அம்பினையுடையவராகத் தம் கைவிரல்களை நொடித்தபடியே, பெயர்ந்தும் செல்வர்.

நீள ஒழுகிய குருதியுடன் தொங்கிக் கிடந்த அப்பார்ப்பானின் குடரினைக் கடித்துத் தின்றபடியே, வரிகளைக் கொண்ட மரலினையுடைய நெறியிடத்தான ஓர் ஆண் நரியானது, வெண்மையான பரற்கற்கள் மின்னிக் கொண்டிருக்கும், கண்களைப் பறிக்கும் கவர்த்த நெறியின் கண்ணே, கள்ளி மரத்து நிழலின் கீழே? உக்குரலிட்டதாகத் தங்கியிருக்கும்.

மழை பெய்யாது ஒழிந்த, வெம்மை மிகுந்ததான, அத்தகைய காட்டுவழியாகிய, கடத்தற்கு அரிதான இடத்திலே, முன்பொருகால்.

'நடுக்கத்தை விளைக்கும் இரவுப்பொழுதிலே, பெருத்த ஆரவாரத்தைக் கொண்ட மேகங்கள் திரண்டு மழைபொழிய, அதனால் மிகக் குளிரோடு கூடிய வாடையும் வந்து வீசுதலால் நம் காதலர் நம்மை நினைந்து வருந்துவான் அல்லனோ? என்று கூறினாயாக, எம்மைத் தனியே விட்டு நீ திரும்பி விட்டனை அல்லையோ? (நின் உறுதியை நம்பி, இனியும் யாம் அவனைப் பிரிதற்குத் துணியோம் என்பது கருத்து)

## 338 - பாடல்

பாடியவர் : மதுரைக் கணக்காயனார்

திணை : குறிஞ்சி

துறை : அல்லகுறிப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

( தன்னுடைய காதலியைச் சந்திப்பதற்காகக் குறிக்கப்பட்ட இடத்திலே சந்தித்து கூடி மகிழ்கின்ற பெருவிருப்பத்துடன் வந்தனன் தலைவன் ஒருவன். அவனுடைய விருப்பம் அன்று நிறைவேறவில்லை. அவளைக் காணாமல், அவன் வறிதே திரும்பவேண்டியதாயிற்று. அப்படித் திரும்புகின்றவன் அவளை அடைதற்கு இயலாத தன் நிலைக்கு நொந்து கூறுகின்ற தன்மையில் அமைந்தது இச்செய்யுள்)

"குன்றோங்கு வைப்பின் ......
....... திரையினும் பலவே!"

### விளக்கம் :-

நெஞ்சமே! மலைகளை உடையதாக விளங்குவது இவ்வுலகம். இதன்கண், நாடெல்லாம் மிகுதியாகப் புகழ்ந்து கூறுகின்ற, வீரஞ் செறிந்த தானையையுடைய அரசர்கள் சிலராவர். அவருள்ளும், அறத்தினையே வழுவாது மேற்கொண்ட செங்கோன்மையினை உடையவர் பாண்டியர். அவருள் பகைவருடன் நிகழ்த்திய போரின்கண்ணே, அவரது தறுகண்மையை அழித்து, அதனால் பூரித்த திண்மையான தோள்களை உடையவன், பலரும் புகழ்ந்து போற்றும் திருவினையுடையோனாகிய பசும்பூட் பாண்டியன் ஆவன். அவனுக்கு உரியது, தெய்வத்தையுடைய உயர்ந்த நிலைப்பேற்றினை உடையதான பொதியமலையாகும்.

அப்பொதியினின் பக்கமலைக் கண்ணே விளங்கும், திளைத்த ஒளியுடைய காந்தட் பூக்களைப் போல மணம் கமழும் நல்ல நெற்றியினையும், அதனோடொத்த நீண்ட கூந்தலையும்

மாமை நிறத்தினையும் உடையவள் நம் தலைவி. அவளது நுண்மையான கோற்றொழிலினையுடைய விளங்கும் வளைகள் நம்முடைய வளமை பொருந்திய முதுகினைச் சுற்றிக் கொள்ளுமாறு அவளை அணைத்து இன்புறல் என்பது நமக்குக் கிட்டாததாயினும்-

பகைவரது நாடுகள் பாழ்பட்டுப் போகுமாறு அழித்து வெற்றி கொள்பவனும், பகைவரால் நெருங்குதற்கும் அரிதான வலிமையினையுடையவனும், வெற்றி வேலினை உடையோனுமான, சேரனுக்கு உரிய, அகன்ற இருள் கொண்ட காட்டினையுடைய கொல்லிமலையினைப் போல, என்றென்றும் அவள்பால் வேட்கை கொண்டிருக்கும் எம் நெஞ்சத்திற்கு ஓர் [redacted] உசாத்துணையாக, அவளது நட்பேனும் இனி நிலைபெறுவதாக!

பகைவர் மண்ணுலகினைப் பெறுமாறு போக்கிய திண்மையான பிடியினைக் கொண்ட ஒளி பொருந்திய வாளினை உடையவன். என்ற அணிமையினையுடைய பசுக்களைக் கவர்ந்து வரும் வீரர்களுக்குத் தலைவனாக விளங்குபவன். திரண்ட போரினை மேற்கொண்டு அதன்கண் வெற்றியும் பெறுபவனான சோழன் அவனுக்குரிய, பொருள்கள் நிறைந்த பாக்கத்தின் கண்ணே வழங்குதலின்றும் அமையா -திருக்கின்ற, முழங்கும் பெருங்கடலின் பெருந்துறையிடத்து அலைகளினும் பலவாக, அவள் மாட்டு யாம் விரும்பும் காதலும் இனி ஒழிவின்றிச் சென்று கொண்டிருப்பதாக!

339- பாடல்

பாடியவர் : நரைமுடி நெட்டையார்

திணை : பாலை

துறை : போகா நின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

(அஞ்சிறைக் காலத்தே, வெஞ்சுரனை முடித்தலின் பொருட்டாகத்

தலைவனைப் பிரிந்து செல்ல வேண்டிய நிலையிலே இருந்தனன். ஒரு தலைவன். அவன் தன் தலைவியிடத்து மிகுதியான காதலன்பு கொண்டவன். ஆண்மையும் காதலும் அலைமோத அவன் உள்ளம் படுகின்ற துயரத்தினைக் கூறுவதாக அமைந்த செய்யுள் இது.)

"வீங்கு விசைப் பிணித்த . . . . . . . .
. . . . . . . . பிரிவு அரியோனே!"

விளக்கம் :-

மிக்க விரைவுடனே விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட நெடிய தேரின், வலிய ஆரக்கால்களைக் கொண்ட உருளைகள் அகழ்ந்து செல்லும் இடங்களிலே, பாம்பு செல்வது போல வேகமாக நீர் ஓடிக்கொண்டிருக்கவும், கொய்து பற்றுநீங்கின விரல்களைப் போன்றனவாகப் பயற்றுச் செடிகளிற் காய்கள் முற்றியவையாக விளங்கவும் அமைந்த, பனிப் பருவமாகப் பொழுதும் அமைந்துள்ளது.

ஆள்வினை குறித்து எழுந்த தளர்வற்ற உள்ளத்தின் ஆண்மையானது, முற்படச் செல்லுமாறு நம்மை இழுக்கின்றது. காமமானது செல்லவிடாது தடுக்கின்றது. இவ்வாறு இரண்டுக்குமாக இவறுபட்டுள்ள எம் நெஞ்சமே! இருபுறக் கடைக்களிலும் நெருப்புப் பற்றி எரிய, கருதலைக் கொள்ளியினையுடைய அதன் இடைப்பகுதி-கண் நின்று வருந்த முற்றதாகி, ஒரு பக்கமும் செல்லுதற்கும் இயலாது தடுமாற்றம் அடைந்திருக்கும் ஓர் எறும்பினைப் போன்ற நிலையிலேயே யாமும் இருக்கின்றோம்.

உடலுக்குள் உயிர் பொருந்தியிருப்பது போன்றதாக அமைந்துள்ள நட்பினையும், அதனால் அவ்வுயிர் வாழ்வு பெறுதலைப் போன்றதாக அமைந்த காதலையும், அவ்வுயிர் சாதலைப் போன்றதாக விளங்கும் பிரிவினையும் உடைய அருமையினை உடையவள் அவள். அவள், நம் செயலுக்கு நொந்தவளாகி வருந்துவாளோ? அவள் மிகவும் இரக்கத்தக்க-வள் தாம்!

## 340-பாடல்

பாடியவர்: நக்கீரனார்

திணை: நெய்தல்

துறை: பகற்குறிக் கண் தோழி தலைமகற்குச் சொல்லியது.

(நெய்தல் நிலத்தலைவன் ஒருவன். தன் உளங்கவர்ந்த தலைவி ஒருத்தியுடன், பகற்குறியிடத்தே கூடியவனாக நாளும் இன்புற்று வருகின்றான். அவனுடைய உறவுக்குத் தலைவியின் ஆருயிர்த் தோழியும் துணையாக விளங்குகின்றனள். பகலிற் கானற்சோலையில் கூடியிருந்து, இரவு நெருங்கவும், அவன் தன்னூருக்குச் செல்லுதலையும் வழக்கமாகக் கொண்டிருந்தான். இந்நிலையில், அவர்களைப் 'பிரிதலற்ற மண உறவில் பிணைத்தலை' விரும்புகின்றாள் அத்தோழி. அவனைப் பிரிந்து தலைவி இரவிலே கொள்ளுகின்ற துன்பத்தினைக் கூறி, அன்று அவர்கள் பக்கத்திலேயே தங்கிச் செல்லுமாறு அவனிடத்துக் கூறுகின்றாள். அவன் தங்குவதற்கு இசையாது, விரைவில் வேட்டுவந்து மணந்துகொள்வான் என்பதே இக்கூற்றின் உட்குறிப்பு ஆகும்)

"பன்னாள் எவ்வம் . . . . . . . . . .

. . . . . . . . . . உறவான் வார்த்தே"

### விளக்கம் :-

நெய்தல் பூக்கள் பொருந்தியிருக்கும் கடற்கரைக்கு உரிய தலைவனே! பொன்னால் செய்த பூண்களை உடையோனாகிய திதியன் என்பவன் என்றும் கெடாத நல்ல புகழினை உடையவன். பல்வேறு பூக்களையும் கொண்ட கானற்சோலையினிடத்து அவனுக்கு உரிய பவத்திரி என்னும் ஊராகும். அவ்வூரைப் போன்று நலன் நிரம்பியவள் எம் தலைவியாகிய இவள்.

வழியாடையேயுள்ள கழிகள் ஒல்லென்னும் ஓசையுடனே நீர் பெருகப் பெற்றுள்ளன. கூரிய பற்களையுடைய பாம்பினோடு சுறாமீன்களும் திரியப் பெறுகின்றனவாயின. பொழுதும் இருளையுடை

மயங்கிவிட்டது. இங்ஙனமாகவும் நம் தலைவர் சென்றனரே? என்று கூறியவளாக, நின் திறத்துத் துயரம் கொள்வாள் இவள். இதனால் இவளுடைய நல்லழகு வாய்ந்த இளமைச் செவ்வியும் நீங்கிப் போவதாகும். அது நேராது இவள் துயர் நீங்கும்படியாக.

திண்மையான படகுகளுடன் பகலிற் கடல்மேல் சென்று மீன் பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு வலிய செயலினைச் செய்பவர் பரதவர்கள். அவர்கள் அங்ஙனம் சென்றக்-கால்-கருமையான காற்றானது மிக்க விசையுடனே வந்து மோதுதலினாலும், கொலைத் தொழிலினை உடைய சுறாமீன்கள் ஒருங்கே பாய்ந்து கிழித்தலினாலும், வளைந்த முடிகளைக் கொண்ட நெடிதான சிதைவுற்ற வலைகள், குளிர்ந்த கடற்காற்று வீசுந்தோறும், மனைமுற்றங்களிலேயே தாழை மரங்களிற் கிடந்து அசைந்து கொண்டிருக்கும். தெளிந்த கடற்பரப்பினை உடைய, அத்தகையதான, தங்குதற்கு இனிய எம்முடைய ஊர்க்கு, இன்று இங்கேயே தங்கிச் செல்லுமாறு நீ வந்தால் என்னவோ?

பசுமையான மீனுக்கு விலைமாறிய வெண்ணெல்-லின் மாவினைத் தயிரிட்டுப் பிசைந்து ஆக்கிய கூழினை நினக்கு உண்ணுதற்கு உரியதாக யாம் தருவோம். வடநாட்டவர் கொண்டு தந்த வெண்ணிறம் அமைந்த வட்டக்கல்லிலே குடமலையாகிய பொதியிலின் சந்தனக் கட்டையினைத் தேய்த்துப் பிற மணப்பொருட்களையும் கூட்டி உண்டாக்கிய வண்டுகள் ஆரவாரிக்கும் மணச்சாந்தினையும் நினக்கு அணி-விப்போம்.

பல நாளும், நின் வருத்தம் நீங்கப் பகற்பொழுதிலே வந்து, புன்னை மரங்களையுடைய அழகிய சோலையின் இனிதான நிழலில் பொழுதைக் கழித்துக் கொண்டு, மாலைப் பொழுது வந்து சேர, அதனை நோக்கியதும், நின் பாகன் குதிரைகளைப் பூட்டுதலை ஆராய்ந்தவனாக விரைய நின் தேரினைச் செலுத்த, நீயும் மீண்டும் நின்னூர்க்குச் செல்லுதலை

ஊரும்புதலை இனியேனும் கைவிடுவாயாக!

## வினாக்கள்

1. அகநானூறு எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
2. அகநானூற்றின் வேறு பெயர் யாது?
3. களிற்றியானை நிரை எத்தனைப் பாடல்கள் அடங்கியது.
4. 300-400 பாடல்கள் கொண்ட அகநானூற்றுப் பகுதி எது?
5. அகநானூற்றில் இரண்டாவதாக இடம்பெறும் பகுதி எது? அது எத்தனை பாடல்கள் அடங்கியுள்ளன?
6. களிறு உவமை எனத் தொடங்கும் கபிலரின் குறிஞ்சித்திணைப் பாடலில் வரும் உள்ளுறைப் பொருளைக் குறிப்பிடுக?
7. இப்பரத்தை காதல் பரத்தையின் அழகினை குறை கூறும் நிகழ்வை யானைக் கொற்றனார் பாடல் வழி விளக்குக?
8. அல்லகுறிப்பட்ட நிகழ்ச்சியை மதுரைக் கணக்காயனார் பாடல் வழி விளக்குக?

Seen.
26/7/204

அலகு - 5

## அலகு - 5

## பத்துப்பாட்டு - நெடுநல்வாடை

புலவர்களோடும் மன்னர்களோடும் புரவலர்களோடும் கைகோர்த்து வளர்ந்தது தமிழ். தமிழ் வளர்ந்த காலத்தை சங்ககாலம் என அழைத்தனர். பழங்காலத்தில் தமிழ்மொழியில் தோன்றி வளர்ந்த இலக்கியங்களில் அழிந்து மறைந்தது போக மீதம் உள்ள நூல்களை காத்து தொகுத்து சங்க இலக்கியம் எனப் பெயர் இட்டனர். இந்த நூல்களின் தொகுப்பு தான் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகும்.

### பத்துப்பாட்டு

நீண்ட நெடும் பாடல்களின் தொகுப்பு ஆதலால் இவை பத்துப்பாட்டு எனப்படுகிறது. சங்கப் புலவர்களின் கற்பனை வளத்தையும் பாடலை வளர்த்துச் செல்லும் பாங்கையும் பல்பொருள்களையும் இலக்கியத்தின் வாயிலாகக் கூறிச் செல்லும் பாங்கும் புலப்படும். பத்துப்பாட்டில் வந்த ஆற்றுப்படை நூல் ஐந்தும் மூன்று அகநூல்களும், இரண்டு புறநூல்களும் அமைந்துள்ளன.

### அகநூல்கள்

1. முல்லைப்பாட்டு - நப்பூதனார்
2. குறிஞ்சிப்பாட்டு கபிலர்
3. பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்

### புறநூல்

1. மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதனார்.
2. நெடுநல்வாடை - நக்கீரர்

### ஆற்றுப்படை நூல்கள்

1. திருமுருகாற்றுப் படை - நக்கீரர்
2. பொருநராற்றுப் படை - முடத்தாமக் கண்ணியார்
3. சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார்.
4. பெரும்பாணாற்றுப் படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்.
5. மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை } இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது.

இதில் நமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளது நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை என்ற நூலாகும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு மதுரையைச் சேர்ந்த நக்கீரர் என்னும் புலவரால் பாடப்பட்டது. நெடுநல்வாடை - நெடு+நல்+வாடை எனப் பிரிந்து பல பொருள்களைத் தருகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து போரின் மேற்சென்று பாசறையில் தங்கிக் கடமையைக் கண்ணாகக் கொண்டு இருக்கிறான். தலைவி தலைவனைப் பிரிந்திருப்பதால் வாடைக்காலத்தில் துன்பம் மிகுந்து ஆற்றியிருக்கிறாள். எனவே தலைவனுக்குக் கடமை முடிக்க நல்ல வாடையாகவும் பிரிவால் தலைவிக்குத் துன்பம் தரும் வாடையாகவும் அமைந்து நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது.

## நெடுநல்வாடை

### மழைவளம் - விளக்கம்

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென"

பருவம் தவறாமல் மழை பெய்விக்கும் தன்மை உடைய மேகம் தான் கிடந்த மலையை வலப் புறமாகச் சூழ்ந்து எழுந்து உலகம் குளிர்ச்சியடையும்படி கார்கால மழையைப் பொழிந்தது.

### கோவலர்களின் துன்பநிலை

'ஆர்கலி . . . . . . . . .
. . . . . . . . . கவுள்புடையூஉ நடுங்க"

அவ்வாறு பெய்த கார்கால மழையினால் பெருகிய வெள்ளத்தால் வெறுப்படைந்த கொடிய கோவலர்களைத்

கையில் கொண்டுள்ள ஆயர் இனத்தவர்கள் காளைகளையும் பசுக்களின் கூட்டத்தையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்தில் மேயுமாறு விட்டு விட்டு வழக்கமாகத் தாம் ஆடு மாடுகள் மேய்க்கும் இடத்தைவிட்டு நீங்கிப் புதிய இடத்திற்கு வந்ததன் காரணமாக உண்டான தனிமைக்கு வருத்தம் கொண்டனர். காந்தள் மலர்களின் நீண்ட இதழ்களால் கட்டப்பட்ட மாலை மழையினால் நீர் நிறைந்து உதவலில் கிடந்து அலைந்து நீர் துளிர்ப்பதால் உடம்பில் குளிர் ஏற்பட்டு வருத்தம் கொண்டு மாடு மேய்த்துக் கொண்டிருந்த பலரும் ஒன்று சேர்ந்து சுள்ளிகளைக் கொண்டு நெருப்பு மூட்டி அனலில் கைகளைக் காட்டித் தங்கள் கன்னங்களில் வைத்துக் கொண்டனர். குளிரால் அவர்களின் பற்கள் பறைபோல் அடித்துக் கொள்ள நடுக்கம் கொண்டனர்.

## விலங்குகளின் நிலை

"மாமேயல் .......... கூதிர்ப் பானாளி"

மழையினால் எழுந்த குளிர் மிகுதியானதால் விலங்குகள் மேய்தலை மறந்தன. இடத்தில் ஒடுங்கிக் கிடந்தன. குரங்குகள் மிகுதியான குளிரால் குறுகிப்போய் அமர்ந்திருந்தன. மரத்தில் வாழும் பறவைகள் மிகுதியான குளிரின் காரணமாக மரத்தில் இருந்து கீழே விழுந்தன. பசுக்கள் தங்கள் கன்றுகளைக் காலால் உதைத்துப் பால் உண்ண விடாதபடி தடுத்தன. மலையின் குளிரும் வண்ணமாக அந்த மழை நாள் மிகுந்த குளிருடன் விளங்கியது.

## குளிர்காலக் காட்சிகள்

"புன்கொடி ..........
..............
.... விசும்பில் துவலை கற்ப"

மிகுதியான மழையினால் மெல்லிய கொடியினை உடைய முசுண்டையின் திரட்சியான வெண்மலர், பொன் நிறத்தில் பூக்கும் பீர்க்கு மலருடன் புதர்கள் தோறும் மலர்ந்திருந்தது. பசுமையான கால்களை உடையதும் மென்மையான வெண்சிறகை உடையதுமான கொக்குக் கூட்டங்கள் வண்டல் மண்ணும் களிமண்ணும் கலந்த மணல் பரப்பில் நாரைகளுடன் சேர்ந்து நீரின் போக்கினை எதிர்த்து நின்று கயல் மீனைப் பிடித்து உண்பதற்காகக் காத்திருந்தன. அம்மீன்களும் அதை தன்னைப் பிடித்து உண்ணும்படி நீரில் எதிர் ஏறி வந்தன. கருமையான மழை பொழிந்த பின் வெண்ணிற மேகங்கள் தன்னில் எஞ்சிய நீர்த்துளிகளைச் சிறுசிறு தூறல்களாகப் பூமியில் தூவிக் கொண்டிருந்தன.

## செழிப்பு

“ அங்கண் அகல் வயல் . . . . . . .

. . . . . . . . . . . . . .

. . . . . . . . குரு உத்துளி தூங்க.”

மழைப் பொழிவினால் அழகுமிக்க அகலமான வயல்களில் நிறைந்திருந்த மழைநீரினால் செழித்து வளர்ந்த வளமையான தாள்களைக் கொண்ட நெல் பயிரில் இருந்து புறப்பட்ட கதிர்கள் நன்றாக முற்றி வளைந்தன. பெரிய அடிமரத்தினை உடைய பாக்கு மரங்களின் பொன் போன்ற கழுத்துப் பகுதியில் இருந்து வந்த மடலின் அருகே விரிந்த பாளையில் நீர் திரண்டு நீரை உள்ளே கொண்ட பாக்குக் காய்கள் செழிந்து உள்ளே நீர் வற்றி முற்றின. மலைகளின் உச்சியில் பல்வகை மலர்களும் மலர்ந்து மணம் பரப்பின. ஆனால் மழை பெய்யத் தொடங்கிய பின்பு மலர்கள் இருந்த கொம்புகளை மழைத்துளிகளை நிறைத்து மலருக்குப் பதிலாக அங்கே இருந்து துளித்துளியாகத் தரையில் நீரைத் துளித்தன.

## கள் உண்ணுவோர் - கீழ் மக்கள் நிலை

"மாடமோங்கிய மல்லன் மூதூர்

. . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . .

. . . . . . . வேண்டுவயின் திரிதர."

முல்லை நில மக்களும் விலங்குகளும் கடும் குளிரால் வருத்தம் கொண்டிருக்க உயர்ந்த மாடங்கள் நிறைந்த பழமையான ஊர்களில் உள்ள ஆறுபோன்ற அகலமான தெருக்களில் சிறு தூறல்களாய் மழை பெய்யத் தன்மேல் விழும் குளுமையான நீர்த்துளிகளுக்குச் சிறிதும் அச்சம் கொள்ளாமல் தழை கலந்து கட்டப்பட்ட மாலையை அணிந்து கொண்டு கலைந்த ஆடை முன்னும் பின்னும் தொங்கிக் கொண்டிருக்க, பருமனான அழகிய தோள்களையும் வலிமையான உடலையும் கொண்ட கல்வி கற்காத மக்கள் வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் கள்ளினை நிறைய உண்டு இன்புற்றுப் பகல் நேரம் கடந்து விட்ட மாலைப் பொழுதில் தன் மனம் போன போக்கில் திரிந்து கொண்டிருந்தனர்.

## மாலை நேரக் காட்சிகளும் இறைவழிபாடும்

"வெள்ளி வள்ளி . . . . . . .

. . . . . . . . ஆவணம் மாலை யயர."

நன்றாக அறுக்கப்பட்டு வெண்ணிற மாக்கப்பட்ட சங்கு வளையல் இறுகியிருக்கும் முன்கையினையும், மூங்கில் போன்ற தோள்களையும், மென்மையான சாயலையும், முத்துப்போன்ற பற்களையும், காதில் அணிந்திருக்கும் மகரக் குழைக்குப் பொருத்தமாய் உயர்ந்து தோன்றுகின்ற (குளிர்ச்சி) பொருந்திய கண்களையும் உடைய மெல்லியலாராகிய பெண்கள்

பிச்சியின் அரும்பு மலர்ந்தது கண்டு மாலைக் காலம் வந்து விட்டதை உணர்ந்தனர். இரும்பால் செய்யப்பட்ட விளக்கில் திரி இட்டு நெய் வார்த்து விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி வீட்டில் உறையும் தெய்வத்தைக் கைகூப்பி வணங்கினர். அப்போது அங்குள்ள தெருக்களிலும் கடைவீதிகளிலும் வழிபாடு நடத்தி அனைவரும் மாலை நேரத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

## வீட்டுப் புறாக்களின் நிலை

"மனையுறை புறவின் ......
............ மாறுவன இருப்பக்."

வீட்டில் தங்கியிருக்கும் ஆண்புறா தான் இன்பம் பெறுகின்ற பெண் புறாவுடன் சேர்ந்து பொது இடங்களில் இரைதேடி உண்ணாமல் மேகம் சூழ்ந்து மழை பெய்வதால் இரவு எது பகல் எது என அறிய இயலாமல் மயக்கம் கொண்டன. அவை வீட்டிலுள்ள மாடங்களில் கால்களை மாற்றி மாற்றி நின்றபடி இருந்தன.

## குளிர்காலத்தில் மகளிர் நிலை

'கடியுடை வியனகர்ச் ......
......... வெள்ளியர் புகைப்பக்'

காவல் நிறைந்த அகலமான இல்லங்களில் ஏவல் பணி செய்யும் பணியாளர்கள் கருநிறமான கொள்ளின் நிறமுடைய நறுமணம் நிறைந்த சாந்து அரைக்கும் அம்மியில் கத்தூரி முதலான பசிய வாசனைப் பொருள்களை இட்டு அரைக்கவும், வடநாட்டினர் கொடுத்த சந்தனம் அரைக்கும் வட்டமான கல்லும் பொதிகை மலையில் தோன்றிய சந்தனமும் பயன் படாமல் கிடக்கவும், பெண்கள் குளிரின் மிகுதியால் தலையில் மலர் மாலைகளை அணிந்து கொள்ளாமல் மங்கலம் கருதிச் சில பூக்களை மட்டும் அணிந்து கொண்டனர். சந்தனக் கட்டைகள்

கொண்டு தீமூட்டி அதில் அகில் கண்ட சருக்கரை ஆகியவற்றை இட்டுப் புகைத்துத் தங்களின் ஈரமான தலைமுடியை உலர வைத்தனர்.

## குளிர்காலத்தில் பயன்படாத பொருட்கள்

"கைவல் கம்மியன் ..........
........... தாழொடு துறப்பக."

கைவினைப் பொருட்கள் செய்வதில் திறம் உடையவனால் செய்யப்பட்ட அழகான சிவந்த நிறமுடைய ஆலவட்டம் என்னும் விசிறி அதற்குரிய உறையில் இடப்பட்டு ஆணியில் தொங்கவிடப்பட்டு அதைச் சுற்றியும் வலை கட்டியருக்கப் பயனின்றிக் கிடந்தது. வேனில் காலத்தில் தென்றல் காற்றைத் தென் திசையில் இருந்து கொண்டு வரும் சாளரங்களின் கதவுகள் நன்றாக மூடப்பட்டுத் தாளிடப்பட்டுப் பயன் இன்றி இருந்தன.

## பருகும் நீர் வெறுத்தல்

"கல்லென் துவலை ........
.... .... ....
.... .... செந்நெருப் பார்."

மென்மையான ஓசையினை உடைய சிறிய மழைத்துளிகளை வாடைக்காற்று எங்கும் கொண்டு சேர்ப்பதனால் இளையவர்களும் முதியவர்களும் எந்தப் பருவத்தினர்களும் குறைந்த வாயினை உடைய குடத்தின் நீரைக் குடிக்காமல் தவிர்த்து அகலமான வாயினை உடைய அடுப்பில் மூட்டப்பட்ட நெருப்பினையே விரும்பி நின்றனர்.

## விறலியர்களின் செயல்

"ஆடல் மகளிர் . . . . . . .

. . . . . . . . பண்ணுமுறை நிறுப்பக்."

ஆடல் தொழிலைச் சிறப்புச் செய்யும் விறலியர்கள் யாழ் இசை பாட்டோடு இயையும் வண்ணம் சுருதி சேர்ப்பதற்காகக் குளிரால் தளர்ந்த யாழின் நரம்பிணைத் தம் மார்பில் தடவிக் கருமை நிறமான தண்டுடைய சிறிய யாழைச் சுருதியோடு சேருமாறு அமைத்துக் கொண்டனர்.

## கார்கால மழையின் செயல்

"காதலர்ப் பிரிந்தோர் . . . . . . . . .

. . . . . . . . . . . . . போதே."

கணவனைப் பிரிந்த பெண்கள் வருந்திக் கொண்டிருக்கக் கார்கால மழை தொடர்ந்து பெய்து அது கூதிர்காலமாய் நிலைபெற்றது.

## அரண்மனையின் அமைப்பு

" . . . . மாதிரம் . . . . . .

. . . . . . . . . . . . .

. . . . . . . ஓங்கு நிலை வரைப்பின்."

எல்லாத் திசைகளிலும் தன் கதிர்களைப் பரப்பி ஒளி கொடுக்க உதய சூரியனின் கதிர்கள் நிலத்தில் ஊன்றப்பட்ட இருகோல்களின் மீதும் பட்டு அக்கோல்களின் நிழல் வடக்கிலோ தெற்கிலோ சாயாமல் இருக்கின்ற நாட்களான சித்திரை மாதம் பத்தாம் நாள் தொடங்கி இருபதாம் நாளுக்குள்ளாக ஒரு நாளில் பதினைந்து நாழிகைக் காலத்தில் சிற்பநூல்

கற்றறிந்தவராகிய தச்சர் நூலை நேரே பரத்துத் திசைகளை அளந்து குறித்துக் கொண்டு திசைகளுக்குரிய தெய்வங்களையும் சரியாக உணர்ந்து கொண்டு அரசர்கள் வாழ்வதற்கு ஏற்ற மனைகளையும் அதற்குண்டான வாயில்களையும் மண்டபங்களையும் இன்னும் பலவற்றையும் இங்கு இங்கு அமையவேண்டும் என அமைத்துக் கொண்டு அதனைச் சுற்றி எழுப்ப வேண்டிய உயர்ந்த மதிலின் அமைப்பினையும் அளந்து கொள்வர்.

ஒரு நாள் 60 நாழிகைகளைக் கொண்டது.

மாளிகைகள் கட்ட நிலம் அளவை செய்யும் காலம் 15 நாழிகை எனக் குறிப்பிடுவதனால், சித்திரை மாதம் சூரியன் நேர் கோட்டில் வரும் காலம். சூரிய உதய காலம் காலை 6 மணி எனக் கொண்டால் 15 நாழிகை 15×24 = 360 நிமிடங்கள் நடப்பட்ட கோல்களின் நிழல் சாயாத நேரம் மதியம் பன்னிரண்டு மணி. அக்காலத்திலேயே தச்சர்கள் நூல் கொண்டு அரண்மனை கட்டுதற்கு அளவு குறித்தனர் என்பது இதனால் புலனாகிறது. ஒரு நாழிகை 24 நிமிடங்கள் கால அளவு கொண்டது.

## அரண்மனையின் நிலை

"பருவரும்பு .... .... ....
.... .... .... நெய்யணி நெடுநிலை"

ஆணிகளும் இரும்புச் சட்டங்களும் கொண்டு இரும்பினால் கட்டப்பட்டு நன்றாக இழைக்கப்பட்ட மரத்தில் சாதிலிங்கம் கொண்டு செம்மை நிறம் நன்றாகத் தீட்டப்பட்டு இரண்டு கதவுகளும் செருகப்பட்ட உத்திரத்தின் மேல்பகுதியில் குவளை மலர் உருவங்களையும் யானையின் உருவத்தையும் அமைத்து இரண்டு கதவையும் ஒன்றாகச் சாத்தும் போது இரண்டல்ல ஒன்றே என எண்ணுமாறு தச்சனின் வேலைப்பாடு

அமைந்திருந்தது. நிலைக்கதவு ஐயவி என்னும் சிறுகடுகும் நெய்யும் அப்பப்பட்டு உயர்ந்து விளங்கியது. நிலையில் வாழும் தெய்வத்திற்காய் அவை அப்பப்பட்டன.

## அரண்மனையின் முன்றில்

" வென்றெழு . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . சிலம்புங் கோயில் "

அரண்மனை வாயில்கள், மன்னன் போரில் பெற்ற வெற்றியை அறிவிக்கும் முகமாக யானையில் மேல் அமர்ந்து உயர்த்திப் பிடித்த கொடிகளுடன் உள்ளே செல்லும்படி உயர்ந்தனவாக இருந்தன. மலையைப் பிளந்து வழி அமைத்தது போன்ற கோபுர வாயில்களைக் கொண்டு விளங்கின. அரண்மனையின் முன்றில் திருமகள் நிலைபெற்ற இடமாக அழகிய வெண்மணல் பரப்பப்பட்டிருந்தது. அங்கு நீண்ட மயிரை உடைய கவரி மான்களும் அன்னப் பறவைகளும் விளையாடின. கட்டுத்தறியில் கட்டப்பட்டிருந்த குதிரைகள் தாங்கள் நிற்கும் இடத்தையும் புல் உணவையும் வெறுத்துத் தனிமையை அறிவிக்கும் ஒலியை எழுப்பின. நிலவின் ஒளியை மன்னன் அனுபவிக்கும் நிலா முற்றத்தில் உள்ள மகர வாயில் இருந்து நீர் கொட்டி அருவி போல் ஒலி எழுந்தது. அதனை அடுத்து நீண்ட தோகையினை உடைய மயில் அகவப் பல ஓசைகளும் சேர்ந்து மலையில் கேட்கும் ஆரவாரம் போல அரண்மனையின் முன்றில் விளங்கியது.

## பணியாளர்களின் காவல்

" யவனர் இயற்றிய . . . . . . . . . . .
. . . . . . . . . . . அருங்கடி வரைப்பின் "

யவன நாட்டில் வாழ்பவர்களால் செய்யப்பட்ட தொழில் நுணுக்கம் உடைய பாவை தன் கையால் ஏந்தியருக்கின்ற அழகு பொருந்திய விளக்கு நிறையும்படி நெய் ஊற்றிப் பெரிய திரிகளை இட்டு ஏற்றப்பட்டதும் மேல்நோக்கி எரியும் சுடர் உடைய விளக்கிற்கு நெய் குறைந்தால் நெய் இட்டும், ஒளி குறைந்தால் திரியைத் தூண்டி விட்டும் எல்லா இடங்களிலும் இருள் நீங்கி ஒளிபரவுமாறு பாண்டிய மன்னனின் காவல் நிறைந்த அரண்மனையில் பணியாளர்கள் பணியாற்றினர்.

## அந்தப்புரத்தின் அமைப்பு

"வரைகண் டன்ன . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . காண்ப னல்லில்"

அரண்மனையின் அந்தப்புரம் மலைபோல உயர்ந்து விளங்கியது. மலைகளைச் சேர்ந்து வானவில் கிடந்தது போன்று பல நிறக் கொடிகளைக் கொண்டு விளங்கியது. வெள்ளியின் நிறத்தைக் கொண்ட சுதை உருவங்கள் தீட்டப் பெற்றிருந்தன. நீல வயிரக்கல் போன்றும் நிறம் உடையனவாகவும் திரண்டனவாகவும் வலிமை உடைய தூண்கள் விளங்கின. செம்பினால் உறுதியாகச் செய்யப்பட்ட சுவரில் அழகிய பூங்கொடிகள் ஓவியமாகத் தீட்டப் பெற்றிருந்தன.

## அகன்ற கட்டில்

"தசநான் கெய்திய . . . . . . . .
. . . . . . . . பெரும் பெயர்ப் பாண்டில்"

நாற்பது ஆண்டுகாலம் வயதை உடையதும் முரசு போன்ற கால்களை உடையதும், போரில் புகழ்ந்து உரைக்கப்பட்டதும் உயர்வான அழகு கொண்டதும் புள்ளிகள்

உடைய நெற்றியை உடையதும் போரில் விழுப்புண்பட்டு இறந்ததுமாகிய யானையின் சிதைவுபடாத கொம்புகளின் பக்கங்க-ளைத் தொழிலில் வல்லவன் அழகாகச் செதுக்கி உருவாக்கிய இலைகள் பூக்கள் உடையதாய், கருமுதிர்ந்து விளங்கும் மகளிரின் பால்கட்டிய முலைபோன்று விளங்கும் குடத்தினையும், குடத்திற்கும் கட்டுக்கும் இடையில் உள்ள பகுதி மென்மையாய் வளைந்து திரண்டும் வெங்காயத்தின் அடிப்பகுதி போன்று அமைக்கப்பட்ட திரட்சியான கால்கள் வைத்து உருவாக்கப்பட்ட அகலமான கட்டில் அழகுற விளங்கியது. அது பாண்டில் என்னும் பெரும் பெயர் பெற்று விளங்கியது.

## கட்டில் வேலைப்பாடு

"மடை மாண் .... .... ....
.... .... சேக்கை மேம்படத்."

கட்டிலின் மூட்டுகளான இணைப்படங்களில் மென்மையான நாவில் அழகு மிகும்படியாகச் சிறந்த வேலைப்-பாட்டுடன் முத்துகளைக் கோர்த்து அவை தாழ்ந்து விளங்குமாறு தொங்கவிட்டு, உருவம் தீட்டும் தொழிலில் வல்லவர்கள் அழகிய தட்டுகளில் புலியின் உருவத்தைப் புள்ளி ஓவியமாக வடித்து அத்தகடுகளைக் கொண்டு கட்டிலின் உள் இடத்தில் வெளிப்புறம் தெரியாதவாறு வேய்ந்தனர். குற்றமற்றதாக விளங்கும் பல மயிர்களையும் கொண்டு அவற்றுக்குப் பல நிறம் இட்டு உள்ளே வைத்து அவற்றின் மேல் சிங்கம் வேட்டையாடுவது போன்றும் காட்டில் மலர்ந்திருக்கும் பல்வேறு மலர்கள் போன்றும் ஓவியம் வரையப்பட்ட போர்வையினைக் கட்டிலின் விரித்திருந்தனர்.

## மென்மையான படுக்கை

"துணை புணர் .... .... ....
.... ....... விரித்த சேக்கை"

காதல் கொண்டு இணைபிரியாத துணைகளாய் இருந்து இணைந்திருந்த அன்னப் பறவைகளின் வெண்மை நிறமுடைய மென்மையான மயிர்களை ஒன்றோடு ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்ட படுக்கையணை உயர்வு பொருந்தும் -படி விரித்து அதன்மேல் தலையணையானையும் சாய்ந்துகொள்ளும் சாயணைகளையும் இட்டு, நன்றாகக் கஞ்சியிட்டுத் தூய்மைப் -படுத்தப்பட்ட படுக்கை மலர் இதழ்கள் கொண்டு மணம் ஏற்றப்பட்டு அழகாக விரிக்கப்பட்டிருந்தது.

## கோப்பெருந்தேவியின் தனிமை

“ஆரந் தாங்கிய .... .......

...... ............து பருவாய் கருப்ப.”

முத்தால் செய்யப்பட்ட கச்சணியைச் சுமந்திருக்கும் பருமனான முலைகளை உடைய மார்பில் குத்தும் தன்மை உடைய மங்கல நாணாகிய தாலி மட்டுமே விளங்க, கணவன் போரின் பொருட்டாகப் பிரிந்து சென்ற நாள் முதலாகக் கைகள் கொண்டு பண்ணப்படாத மென்மைத் தன்மை உடைய மயிரினையும் ஒளி வீசக்கூடிய மகரக் குழையானைக் காதில் இருந்து களைந்ததனால் குழை கிடந்த இடத்தில் தழும்பு ஏறிச் சற்றே தாழ்ந்த காதினையும், முன்பு தொடி என்னும் அணிகலன் கையில் கிடந்து அழுத்திய இடத்தில் இப்போது தொடியைக் களைந்து விட்டு அழகிய மயில் வரிசையானைக் கொண்ட கையில் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல் ஒன்று மட்டும் அணிந்து விளங்கவும், கையில் காப்புக் கயிறு மட்டும் கட்டிக்கொண்டு முடகம் என்னும் மோதிரத்தையும் பூத்தொழில் வேலைப்பாடு உடைய ஆடையானையும் களைந்து அழுக்கேறிய நூல்புடவை

மட்டும் கட்டிக் கொண்டு உருவம் மட்டும் இருக்க வண்ணம் தீட்டப்படாத ஓவியமாய் பாண்டிமாதேவி விளங்கினாள்.

## தோழியர் ஆறுதல்

" ........ வணக்குறுத்துச்
........ .... நல்லடி வருட "

மெல்லிய தளிர்போன்ற உடலையும், உடலில் பரந்த தேமலையும், மூங்கில் போன்ற அழகிய தோள்களையும், தாமரை மொட்டுகள் போன்ற முலைகளையும், வளையும் மென்மையான இடையினையும் உடைய பாண்டிமாதேவியின் தோழியர்கள் பாண்டிமாதேவிக்கு இந்நிலையால் உறக்கம் உண்டாகுமோ என்று அவளுடைய பாதங்களை வருடிக் கொண்டிருந்தனர்.

## செவிலியர்களின் தேறுதல்

" நரைவிரா அற்ற ..... .....
உகத்தவை மொழியவும் ...... "

நரைமுடிகள் காணப்படும் கூந்தலை உடையவர்களும் சிவந்த முகத்தை உடையவர்களுமாகிய செவிலித் தாயார்கள் கோப்பெருந் தேவியின் துன்பத்தைக் கண்டு அவளைத் தேற்றும் முகமாகச் சிறிய பெரிய ஆறுதல் மொழிகள் பலவற்றையும் கூறி இப்போதே உன் தலைவர் வருவார் வருத்தம் கொள்ளாதே என இனிமை மிக்க சொற்களைக் கூறினார்கள்.

## கோப்பெருந்தேவியின் துயரம்

" ..... ........ ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
.... ...... ...... அரிவைக்கு "

பெருமூச்சு விட்டுக் கொண்டு தனிமைத் துயரில் தவிக்கும் கோப்பெருந்தேவிக்குச் செவிலித் தாயர்கள் ஆறுதல் கூறியபோதும் அவள் ஆறுதல் அடையாதவளாக மிகவும் கலக்கம் கொண்டு சாதிலிங்கம் பூசப்பட்ட வலிமையான நிலையினை உடைய மேற்கட்டியின் கால்களைக் குடம் போன்ற கட்டில் கால்களின் அருகே நிறுத்தி அதன் மேல் புதிய துணியால் தீட்டப்பட்டிருந்த திங்கள் உரோகிணி ஆகியவற்றின் இணைந்திருந்த தோற்றத்தை நோக்கி இதுபோல் நாம் இணைந்திருக்க இயலவில்லையே, தலைவனைப் பிரிந்து தனித்து வாடியிருக்கிறோமே என்று வருத்தம் கொண்டு கண்ணீர் வழிந்த கண்கள் உடையவளாய் இருந்தாள்.

## கொற்றவையிடம் வெற்றி கேட்டல்

“இன்னா அரும்படர் தீர விறறந்து
இன்னே முடிகதில் அம்ம . . . . .”

தலைவனின் பிரிவால் வருந்தியிருக்கும் தலைவியின் துயரம் இன்றே நீங்கும் வண்ணம் தலைவனுக்கு இன்றே வெற்றியை வழங்கி அவன் மேற்கொண்ட போர்த்தொழிலை முடித்து வைக்க வேண்டும் தாயே!

## காயம்பட்ட வீரர்களின் நிலை

“ . . . . . . . . . . . மின்னவிர்
. . . . . . . . . காணிய புறம்போந்து”

படைவீரர்கள் ஒளி வீசும் முகபடாம் அணிந்து போர்த் தொழிலில் சிறந்து விளங்கிய யானையின் தும்பிக்கை வெட்டுப்பட்டு நிலத்தில் விழுந்து புரளும்படிக் கொன்று பின்னர், பகைவரின் ஒளி வீசும் வாளினால் வெட்டுப்பட்டு

விழுப்புண் பெற்றனர். போர் வீரர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் பொருட்டாக மன்னன் தன் பாசறையில் இருந்து வெளிவந்தான்.

## வாடையும் விளக்கும்

"வடந்தைத் தண்வளி ..... .....
...... ..... பரு உச்சுட ரழல"

பாண்டிய மன்னன் போர்வீரர்களைக் காண்பதற்கு வந்தபோது வாடைக்காற்று வீசியது. அதனால் அகல் விளக்கில் எரியும் விளக்கில் எரிந்த பருத்த சுடர்கள் தெற்கு நோக்கியனவாய்ச் சாய்ந்து எரிந்தன.

## விழுப்புண் காட்டுதல்

"வேம்புதலை .... ..... ....
.... ..... .... எறிதுளி விதிர்ப்ப"

மணிகள் புனையப்பட்ட அகன்ற பாதங்களை உடைய யானைகளும், பக்கரை களையப்படாத விரைவுடைய குதிரைகளும் கருமையான சேறு நிறைந்த தெருவில் நடப்பதால் அச்சேற்றுத் துளிகள் தன்மேல் தெறிக்க வேம்பு மாலையணைத் தலையில் கட்டியிருக்கின்ற வலிமையான இரும்புத் தண்டினை உடைய வேலை ஏந்திக் கொண்டு முன்பு நடந்து செல்கின்ற படைத்தலைவன் புண்பட்ட வீரர்களை அடையாளம் காட்டியபடி சென்றான்.

## வீரர்களின் விழுப்புண் கண்ட மன்னனின் மனநிலை

"புடைவீழ் அங்துகில் ..... ....

...... ....... பாசறைத் தொழிலே."

இடது தோளில் இருந்து நழுவி விழுந்த மேலாடை-யினை இடது பக்கத்தில் ஒரு கையால் அணைத்துக்கொண்டு, வாளை ஏந்திச் செல்லும் கொடுமையான பார்வையினை உடைய வீரனின் தோளில் வலது கையினை வைத்துக் கொண்டு, போரில் விழுப்புண் பட்ட வீரர்களை நன்றி கலந்த பார்வையோடும் அன்பு தோன்றவும் பரிவோடு பேசிக்கொண்டு முத்துமாலை கிடந்து அசையும் வெண்கொற்றக் குடை மழைத்துளிகளை மறைக்கவும் நள் என்னும் ஓசையுடைய நடு இரவிலும் மன்னன் உறக்கம் கொள்ளாமல் போர் வீரர்கள் சிலர் தன்னைச் சூழ்ந்துவரப் பாசறையில் இருந்து போர்த் தொழிலைச் செய்தான்.

## வினாக்கள்

1. நெடுநல் வாடை - குறிப்பு வரைக.
2. நெடுநல் வாடை - பெயர் பொருத்தம் தருக?
3. பத்துப்பாட்டில் காணப்படும் அகவல்களின் எண்ணிக்கை எத்தனை?
4. ஆற்றுப்படை என்றால் என்ன?
5. பத்துப்பாட்டில் காணப்படும் ஆற்றுப்படை நூல்களை எழுதுக?
6. நெடுநல் வாடையில் இடம்பெறும் குளிர்காலக் காட்சிகளைக் குறிப்பிடுக?
7. அரண்மனையின் அமைப்பு குறித்து எழுதுக?
8. நெடுநல்வாடை காட்டும் கட்டிலின் வேலைப்பாடு குறித்து எழுதுக?
9. கோப்பெருந்தேவியின் நிலையும் அவள் படும் துன்பநிலையும் பற்றி தருக?
10. பாண்டியனின் தன்மை குறித்து எழுதுக?

Unit V, III BA,
Seen
[signature]
4/8/24